வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN


194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.




புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 புரட்டாதி திங்கள் 7-ம் நாள் (23—9—1962) ஞாயிற்றுக்கிழமை ரபி. ஆகிர் 23 | இதழ் 17

# வட கிழக்கு தனிப் பிரதேசம்



கொழும்பு விவேகானந்த மண்டபத்தில் நடந்த அமரர் வன்னியசிங்கம் நினைவு விழாவில் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம், திரு. செ. ராசதுரை, டாக்டர் இ. மு. வி. நாகநாதன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும், விழாவுக்குத் திரண்டு வந்திருந்த மக்கள் கூட்டத்தையும் காணலாம்.

## பிரதமருக்குத் தமிழரசுத் தந்தையின் பதில்

## 'சமஷ்டி' பிரிவினையல்ல என மீண்டும் வலியுறுத்தல்

வடக்கையும் கிழக்கையும் தனித்துவமுள்ள பிரதேசமாகப் பிரதமர் மதித்தார். அதற்காகவே அவருக்கு நன்றி கூறினேன். மலையகத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்து அவர்களுடன் இணைந்து அகிம்சை வழியில் போரிடுவோம் சமஷ்டி என்பது நாட்டுப் பிரிவினை அல்ல. இவ்வாறு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அறிக்கைக்குப் பதிலளிக்குமுகமாக தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கூறுவதாவது:-

எமது பிரதமர் சிந்தித்த பின்னர் பேசாமல், பேசிய பின்னரே சிந்திக்க ஆரம்பிப்பது துரதிர்ஷ்டமானதாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் தங்கள் நடவடிக்கைகளை வைத்துக் கொள்ளுதல் வேண்டும் என்று தமிழரசுக் கட்சியையும் திரு. செல்வநாயகத்தையும் பிரதமர் கோரியுள்ளதாகக் கடந்த 10ம் தேதி வெளியான பத்திரிகைகளில் செய்திகள் பிரசுரமாகியுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை தனித்துவமுள்ள பகுதியாகப் பிரதமர் தமது அறிக்கையில் குறிப்பிட்டமைக்காக நான் நன்றி தெரிவித்துப் பதிலிறுத்திருந்தேன். பிரதமரின் கூற்றுப்படி அந்தக் குறிப்பிட்ட பிரதேசத்திற்குள்ளே எங்கள் நடவடிக்கைகளை நடத்தலாம் எனப்படுகிறது. வட

(9-ம் பக்கம் பார்க்க)

வடக்கு கிழக்கு மாகாணங்களில்

## காணி பெற விரும்புவோர்

(13-ம் பக்கம் பார்க்க)

## பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கு உடனே வேலை வழங்குக

## மட்டக்களப்பு ஆசிரியர் நிலை பற்றி கல்வி மந்திரிக்கு எஸ். ஜே. வி. கடிதம்

இரண்டு வருடங்கள் ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்றும் பல கஷ்டங்கள் பட்டும் இதுவரை வேலையின்றித் தவிக்கும் மட்டக்களப்பைச் சேர்ந்த ஆசிரியர்களுடைய இன்னலைப் போக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கல்வி அமைச்சரைக் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாண அரசாங்கப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு 300க்கும் அதிகமான காலி ஸ்தானங்கள் இருந்தும் பலகாலமாக அவ்விடங்கள் நிரப்பப் படவில்லை. 1959-60-ல் ஆசிரிய கலாசாலையில் பயிற்றப்பட்டு வெளியேறிய மாணவர்களில் 51 சத விதமானோர் பல இன்னல்களுக்கிடையில் வேலையின்றி வாழ்கின்றனர். பல வழிகளில் கல்வி மந்திரியையும், அதிகாரிகளையும் பேட்டி கண்டும் எதுவித பலனும் கிடைக்கவில்லை. நியமனம் கோரி விண்ணப்பித்த வகையிலும், பலதடவைகள் அதிகாரிகளைப் பேட்டி காணும் பொருட்டு பிரயாணம் செய்த வகையிலும் ஏராளமான பொருட் செலவைக் கண்டதுதான் மிச்சம்.

"அரசாங்க சேவையில் குறிப்பிட்ட காலம் சேவை செய்வோம்" என்று பிணைப் பத்திரங்களிலும் கையொப்பமிட்டும் இதுவரை பலன் எதுவும் கிடைக்கவில்லை."

தங்கள் கஷ்டங்களை விளக்கி மட்டக்களப்புபயிற்றப்பட்ட வேலையற்ற தமிழ் ஆசிரிய சங்கம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களுக்கு ஓர் முறையீடு செய்துள்ளது. அவர்களுடைய நேர்மையான கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து உடனடியாக அவர்களுக்கு உத்தியோகம் வழங்குவதன் மூலம் கஷ்டங்களைத் தீர்க்க வேண்டும் என்று கல்வி அமைச்சரை திரு. செல்வநாயகம் கேட்டுள்ளார்.

பயிற்றப்பட்டும் வேலையின்றித் தவிக்கும் ஆசிரியர் கள் பாடசாலைகளில் நிய

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

**ரிச்செலட்ஸ் ப்ளட் பியூரிபயர்**

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




● மூலம்
● வாதம்
● படை (ECZEMA)
● மாத விடாய்

கோளாறுகள்



முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

**வெஸ்டன் ஏஜன்சீஸ்,**
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன்: 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கலவரமும் பயங்கரமும்

## இலங்கை வர்த்தக சங்க தலைவர் லண்டன் பத்திரிகைக்கு எழுதிய கடிதம்

## அதற்கு திரு. எஸ். நாகேந்திராவின் மறுப்பு

[‘டெயிலி டெலிகிராப் அன்ட் மோர்னிங் போஸ்ட்’ என்ற லண்டன் நாளிதழில், இலங்கை வர்த்தக சங்கத்தின் தலைவர் திரு. ஈ. டேர்னர் கிறீன 1961 சத்தியாக்கிரக சம்பவங்கள் பற்றி, ஆசிரியருக்குக் கடிதம் எழுதியிருந்தார். அதை மறுத்து, திரு. எஸ். நாகேந்திரா பின்வரும் கடிதத்தை ஆசிரியருக்கு அனுப்பியிருந்தார்.]

ஐயா!

உங்களுடைய ஜூன் 9-ம் திகதி இதழில், இலங்கை ‘வர்த்தக சங்கத்தின் தலைவரான திரு ஈ.டேர்னர் கிறீன், இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் மிகைப் படுத்திக் கூறுவதாகக் குற்றஞ் சாட்டியிருந்தார்.

மீண்டும் மீண்டும், இலங்கையிலுள்ள பத்திரிகைத் தணிக்கையை மீறி, தங்கள் செய்திகளை சென்னையிலிருந்து அனுப்பி வைத்திருக்கின்றனர், பிரிட்டிஷ் பத்திரிகைகளின் வெளி நாட்டு நிருபர்கள்.

1958-ம் ஆண்டில்,டெயிலி டெலிகிராப்பின் நிருபரான ஜோன் ரைட்லி, இலங்கையில் நடைபெற்ற கலவரங்களின் உண்மையான நிலையை எடுத்தியம்பும் செய்திகளைச் சென்னையிலிருந்து அனுப்பியிருந்தார்.

லண்டனிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளும், மற்றும் சம்பந்தப்பட்ட சில நபர்களும், அச் செய்திகளை மிகைப்படுத்தப்பட்ட செய்திகளென்று அவசர, அவசரமாக விவரித்தனர். அந்தப் பயங்கரமான செய்திகளின் முழு உண்மையையும் காலங் கடந்தே நாம் தெரிந்துகொள்ள முடிந்தது.

இவ்வருடமும், சரித்திரம் திரும்பவும் நடைபெற்றுள்ளது. பிரிட்டிஷ் பத்திரிகைகள், பத்திரிகை உலகுக்குப் பொதுவாக விளங்கும் சத்திய வேதத்தை—உண்மைகள் தெய்வீகமானவை; அவை பற்றிய குறிப்புக்களோ சுதந்திரமானவை என்பதை — கடைப்பிடித்து வருகின்றன.

“சில சம்பவங்கள்......பட்டாள வீரரின் கட்டுப்பாட்டு முறையின் பலஹீனம் காரணமாக எழுந்தவையாக இருக்கவேண்டும்.....” என்று மிகவும் இலேசாகக் கூறிவிடும் திரு. கிறீன், அச் சம்பவங்களுக்குப் பின் மறைமுகமான நோக்கம் எதுவும் இருந்ததென்பதை மறுக்கவும் செய்கிறார்.

இந்தச் ‘சம்பவங்கள்’ பற்றி ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டுவிட்டு, இலங்கை செனட்டில், செனட்டர் நடேசன் பின்வரும் கேள்வியைக் கேட்டார்: “தமது மொழியுரிமைப் போராட்டத்தைக் கைவிடும் வண்ணம், யாழ்ப்பாண மக்களிடையே பீதியை உண்டாக்கும்படி இலங்கைப் பட்டாளத்துக்குக் கொடுக்கப் பட்ட கட்டளை ஒன்றின் விளைவா, இந்தச் சட்டத்துக் கப்பாற்பட்ட, பயங்கர நடவடிக்கைகள் எல்லாம்?” இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது இலங்கை அரசாங்கம் மாத்திரமல்ல.

தணிக்கை செய்யப்படாத சில ஹான்ஸாட் அறிக்கைகளை ஆதாரமாகக் காட்டுகிறார், திரு. கிறீன். இலங்கை சனப் பிரதிநிதிகள் சபையின் ஹான்சாட் அறிக்கையான தொகுப்பு 42, நிர். 32, மே 3, 1961 அறிக்கையை நான் திரு. கிறீனுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்த அறிக்கையில், கொள்ளை, களவு, கற்பழித்தல் ஆகிய பல சம்பவங்களைப் பற்றிப் பல அங்கத்தவர்கள் குறிப்பிட்டிருப்பதை அவர் காணலாம்.

இலங்கையின் வர்த்தக நலன்களை தற்போதய நிலைமை பாதிக்கிறது என்

(13-ம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் போராட்டம் பற்றி ‘தினத்தந்தி’யின் தலையங்கம்

இந்தியாவிலிருந்து வெளிவரும் கட்சி சார்பற்ற தினசரியான ‘தினத்தந்தி’ தமிழரசுக்கட்சியினர் ஏப்ரலில் நடாத்தவிருக்கும் போராட்டத்தைக் குறிப்பிட்டுப் பின்வரும் தலையங்கத்தைத் தீட்டியுள்ளது:

இலங்கை தமிழர் போராட்டம் மீண்டும் ஆரம்பம் ஆகும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது!

போராட்ட திட்டங்களை வகுப்பதில், தமிழர் கட்சி தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறது! அடுத்த ஆண்டு ஏப்ரல் 17-ந்தேதிக்குள் போராட்டம் ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது!

### தமிழர் போராட்டம்

இலங்கையில், சிங்களத்தை மட்டும் ஆட்சி மொழி ஆக்குவது என்று இலங்கை அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. இதை எதிர்த்து, தமிழர் கட்சி கடந்த 1961-ம் அண்டு ஏப்ரல் மாதத்தில் மாபெரும் போராட்டம் நடத்தியது! இலங்கையில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது!

இந்த நிலையில், ராணுவ சட்டத்தை பிறப்பித்து. போராட்டத்தை இலங்கை அரசாங்கம் அடக்கியது! தமிழர் கட்சிக்கும் தடை விதிக்கப்பட்டது! இத்த தடை ஒரு ஆண்டு காலத்துக்குப்பின் சமீபத்தில் நீக்கப்பட்டது!

இலங்கையை வளம் கொழிக்கும் பொன்னாடு ஆக்கியவர்கள் தமிழர்கள்! ரத்தத்தை வியர்வையாக்கி, காப்பித் தோட்டங்களையும் தேயிலைத் தோட்டங்களையும் வளர்த்தார்கள்!

இதை எல்லாம் எண்ணிப் பார்க்க இலங்கை அரசாங்கம் மறந்துவிட்டது! தமிழர்களுக்கு நன்றிசெலுத்துவதற்கு பதிலாக, அவர்கள் உரிமையைத் தட்டிப்பறிக்க நினைக்கிறது!

இதன் காரணமாகவே, இலங்கைத் தமிழர்கள் மீண்டும் போர் முரசு கொட்டி இருக்கிறார்கள்!

### நேருவின் கடமை!

பிரதமர் நேரு, வருகிற அக்டோபர் மாதம் இலங்கை போகும்போது, இலங்கை தமிழர் பற்றி, திருமதி பண்டாரவுடன் பேச்சுநடத்த இருக்கிறார்!

தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டியது நேருவின் கடமை. இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையில் உள்ள நியாயத்தை திருமதி பண்டாரவிடம் எடுத்துக்கூறி, தமிழர்களின் [illegible] காப்பாற்ற வேண்டும்!


### வேல் தைலம்
### மிகச் சிறந்த சஞ்சீவி

ஜலதோஷம், தலைவலி, ஒருதலைக்குத்து, கை கால் உளைச்சல், முதுகு வலி, விஷக் கடி, தேள்கடி, ஜன்னி, வாய்வுப் பிடிப்புகள், சுளுக்கு, வீக்கம், இரத்தக் கட்டு, கட்டிகள், புறப்பாடுகள் முதலிய சகல வியாதிகளுக்கும் பாதிக்கப்பட்ட இடங்களில் நன்றாகத் தேய்த்தால் மிக விரைவில் குணமடையும்.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய மகா சஞ்சீவி.

**விலை ரூபா 1-25**

தபால் செலவு வேறு

தயாரிப்பாளர்கள்:

**S. P. S. ஜெயம் கம்பெனி,**
மதுரை.

இலங்கையில் சோல் ஏஜண்ட்:

**M. A. R. S. மனுவேல் நாடார் அன் கோ.,**
34, செட்டியார் தெரு.
கொழும்பு-11.


## சங்கப் பலகை

### தோணி

ஆசிரியர்:— வ. அ. இராசரத்தினம்
வெளியீடு:— அரசுவெளியீடு 231, ஆதிருப்பள்ளித் தெரு கொழும்பு—13
விலை:— ரூபா. 2. 00.

தமிழிலக்கியம் பலவழிகளிலும், புத்துயிர் பெற்று வளர்ச்சியுறும் காலமாக இந்த நூற்றுண்டைக் கொள்ளலாம். பத்தொன்பதாம் நூற்றுண்டுத் தமிழிலக்கியம் வரட்சி பொருந்தியதாகக் காணப்பட, இக்காலத்து இலக்கியம் வளமுள்ளதாக இருப்பதற்குப் பல காரணங்கள் கூறலாம். ஈழத்தில் மட்டுமன்றி ஆசிய நாடுகள் அனைத்திலும் மக்களுடைய வாழ்க்கைப் பண்பாடும், அமைப்பு முறையும், மொழி முதலியனவும் முன்னேறுவதற்கான சில அறிகுறிகள் இந்நூற்றுண்டின் ஆரம்பத்திலேயே தோன்றலாயின. இத்தகைய விழிப்புணர்ச்சிக்கு ஆங்கிலக் கல்வி விருத்தியும் ஐரோப்பிய நாகரிகத் தொடர்பும் முக்கிய காரணங்களாகும்.

நம் மத்தியில் எழுந்த உரை நடையிலக்கியங்களை நாவல், சிறுகதை, நலன் ஆய்வு அல்லது இலக்கிய விமர்சனம் என மூன்றுகப் பிரிக்கலாம். ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளிற் பெரிதும் விருத்தியடைந்துள்ள இவ்விலக்கிய வகைகள் ஆங்கிலக் கல்வியைத் தமிழ் மக்கள் கற்கத் தொடங்கியதன் பயனுகத் தமிழ் மொழியின் கண் புதிதாக வந்துள்ளவை.

தமிழிலுள்ள தனிச் செய்யுள்கள் சிறுகதை முன்னேடிகள் என்று சிலர் கூறுகின்றுர்கள். அது எப்படியாயினும், சிறுகதை தமிழில் வளமாக வளர்ந்திருக்கும் இன்றைய நிலைக்கு, நமது ஐரோப்பிய நாகரிக, மொழித் தொடர்பே காரணமாகும்.

இந்த வகையில் திரு. வ. அ. இராசரத்தினத்தின் ‘தோணி’ என்ற சிறுகதைத் தொகுப்பும் எழுந்துள்ளது. அவர்களுக்கு மேலை நாட்டு இலக்கியங்களில் நல்ல ஈடுபாடு உண்டு — குறிப்பாக, ஜேம்ஸ் ஜோய்ஸ், ஆஸ்கார் ஒயில்டு போன்ற மேல் நாட்டு எழுத்தாளர்களின் சில படைப்புக்களை மொழிபெயர்த்துமுள்ளார்.

இத்தொகுப்புக்கு ‘தோணி’ என்ற தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், “பாலன் வந்தான்” “ஏமாற்றம்”போன்ற கதைகள் ஆஸ்கார் ஒயில்டின் “சுயநல அரக்கன்” (The Selfish Giant) மன மலர்ந்த இளவரசன் (The Happy Prince) போன்ற கதைகளின் தரத்திற்கு ஏற்றதாக உள்ளது.

தோணி என்னும் கதை ஆசிரியர் வாழும் பிரதேசத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. படிப்போர் உள்ளத்தை உருக்கி ஈர்க்கும் சக்திவாய்ந்ததாக அது அமைந்துள்ளது. மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள குடும்பத்தில் பிறந்த சிறுவன், தந்தையைப்போல் தானும் ஒரு நாள் தோணியைச் செலுத்தி சமுத்திரம் கடக்க வேண்டும் என்று துடிக்கிறுன். தனக்குச் சொந்தமாக ஒரு தோணி வேண்டுமென்று விரும்புகின்ற அவன், அது கிடைக்கவில்லை என்பதனுல் ஏற்பட்ட வைராக்கியத்தில், தனது திருமணத்தையும் கைவிட்டு விடுகிறுன். தோணியில்லாதவனுக்கும் பெண்ணு?

கதை நடைபெறும் பிரதேசத்தின் சூழ்நிலையையும் இயற்கையையும், சிறப்பியல்புகளையும் தமக்கே உரித்தான முறையில், ஆசிரியர் சிறப்பாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

சாதாரண சொற்களைக் கொண்டு தம்முடைய விசித்திரமான மனோபாவங்களையும், புதிய கருத்துக்களையும் இலகுவாகவும், படிப்போர் மனதில் தெளிவாகப் பதியக் கூடியதாகவும் கூறிவிடுகின்றுர்.

அவருடைய எண்ணக் கருத்துக்களுக்கு ஏற்பத் தமிழ்மொழி “நெளிந்து வளைந்து” கொடுப்பதைப் பார்க்கும்போது, தமிழ்மொழிக்கு உள்ள ஆற்றல் எத்தகையது என்பதை நாம் காணமுடிகிறது.

மற்றக் கதைகளில் “பிரிவுபசாரம்” மனதில் நிற்கிறது. மரணப் படுக்கையில் கிடக்கும் கிழவியின் மரணத்தை ஊரே விரும்பிக் காத்து நிற்கிறது. பிறகு அவள் உண்மையிலேயே மரணம் அடைந்ததும், ஊரே ஒப்பாரிவைக்கிறது. யாருக்காக?

உண்மையிலிருந்துதான் கற்பனை பிறக்கிறது. அழகை அனுபவிக்கும் போது, துக்கத்தை கேட்கும்போது, குரூபத்தைக் காணும்போது, எழுத்தாளனின் உடலும் மனமும் ஒருங்கே கவரப்படுகின்றன. அவன் மட்டும் அவைகளை அனுபவிப்பதில்லை. இக்கதையிலும் மனித இயல்பின் குணத்தை ஆசிரியர் அப்படியே எடுத்துக் காட்டும் பொழுது, எழுத்தாளனின் எண்ணப் போக்கும் அப்படியே புலனுகிறது.

அடுத்த வரலாற்று அடிப்படையில் எழுந்த “கலைஞனும் சிருஷ்டியும்”, ஆசிரியரின் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு. புதுப்பணம் படைத்தவர்களின் மனோநிலையை ஓரளவு “ஒற்றைறப்பனை” என்னும் கதைமூலம் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

ஆசிரியர் தமிழ் கூறும் உலகுக்குப்புதியவரல்ல; சிறந்த சிறு கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்

முற்போக்கு, யதார்த்தம், பிற்போக்கு, தேசியம் இவற்றிற் கெல்லாம் அப்பாற்பட்ட, அவை எல்லாவற்றிற்கும் மேலான உலக (மனித) இலக்கியத்தைப் படைப்பதே ஆசிரியரின் அவா என்பது அவர்களின் நூன்முகத்தின் மூலம் அறியக்கிடக்கிறது.

தான் வாழும் கீழ் மாகாணப் பிரதேசத்தின் மண் வாசனையை அவர் கதைகளில் வாசகர் முகர்ந்து மகிழலாம். மக்களின் அன்றாட வாழ்க்கை, அவர்களது ஆசாபாசங்கள், விருப்பு வெறுப்புக்கள் இவைதான்— எந்த உண்மை எழுத்தாளனுடைய சிருஷ்டிகளிலும் பிரதிபலிப்பது போல்— திரு. வ. அ. இ. கதைகளிலும் பிரதிபலிக்கின்றன.

நல்ல சிறு கதைகளைப் படிக்க விரும்புவோர் எவரு

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ம. ஜெயரஞ்சன், மத்துகமம்.

கே: தமிழரசுக் கட்சி மாஜிக் காரியதரிசி திரு. நவரத்தினம் மலே நாட்டில் தமிழரசுக் கட்சிக் கிளைகள் அமைக்கப்படுவதை விரும்பாத காரணம் யாதோ?

ப: தமிழரசுக் கட்சியின் அமைப்பே ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது. "உள் கட்சி ஜனநாயகம்" தமிழரசுக் கட்சியினுள் பூரணமாக உண்டு. எனவே எந்தப் பிரச்னையைக் குறித்தும் கட்சி உறுப்பினர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்படுவதும் அவற்றைப் பற்றி கட்சிக் கூட்டங்களில் விரிவாக விவாதித்து முடிவு செய்வதும் சகஜமே. முடிவெடுத்த பின்னர், அந்த முடிவுக்குக் கட்டுப்பட வேண்டியது உறுப்பினர்களின் கடமை. ஆனால் அந்த முடிவை மற்றொரு கட்சிக் கூட்டத்தில் மாற்றியமைக்கும் பொருட்டு, கருத்து வேற்றுமை கொண்டவர்கள் தங்களின் கருத்துக்களை கட்சிக்குள் தொடர்ந்து வற்புறுத்தி வரலாம். கட்சியின் முடிவு மீண்டும் கட்சியினால் மாற்றப்பட்டாலன்றி —அப்படி மாற்றப்படும்வரை— மாறுபட்ட கருத்துகொண்டவர்கள் கட்சியின் முடிவையே அமுல் நடத்த வேண்டும். கட்சி முடிவுகளை பகிரங்கமாக (கட்சி உறுப்பினர்களல்லாதவர்களிடம்) கண்டித்துப்பேச எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது. இதுதான் உள் கட்சி ஜனநாயகத்தின் சாரம்.

ஃ

இறையன்பன், ஹப்புத்தளை.

கே: பங்கீட்டரிசி வெட்டை வாபஸ் வாங்கி விட்டு மந்திரி பதவியை விட்டு வெளியேறிய நிதி மந்திரியின் தற்போதைய நிலையென்ன?

ப: பாராளுமன்றத்தில் இன்றும் அவர் பிரதமரின் பிரதிநிதிதான். சாண் சறுக்கினாலும், முழம் ஏற இப்பொழுது திட்டம்போட்டுக் கொண்டிருக்கிறாராம்.

ஃ

ஜெயரத்தினம், உடதல்வின்னை.

கே: மாணவர்கள் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாதென்பது ஏன்?

ப: ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை கிடையாததால்...

ஃ

தமிழரசுக் கட்சி அபிமானி, கொழும்பு—6.

கே: மலே நாட்டுத் தமிழரை ஒன்றுபடுத்தும் பொருட்டு மலே நாட்டுக்குப் போகும் தமிழரசுக் கட்சி திருவாளர்கள் பொன்னம்பலம், சுந்தரலிங்கம், யாழ்ப்பாணம் எம். பி. போன்றோரை ஒற்றுமைப்படுத்தினாலென்ன?

ப: இனத்துரோக நடவடிக்கைகளின் விளைவாக மக்களின் நன்மதிப்பையிழந்து நவக்கிரகங்களைப் போல வக்கரித்துகொண்டிருப்பவர்களை ஏன் ஒற்றுமைப்படுத்த வேண்டும்? அதற்காக ஏன் காலத்தை வீணாக்க வேண்டும்? மக்களின் ஐக்கிய சக்தி மீதுதான் தமிழரசுக் கட்சிக்கு நம்பிக்கை.

ஃ

ம. மிக்கேல், மூதூர்—12.

கே: யாழ்ப்பாணம் பிரதிநிதியின் எதிர்காலம் பற்றி நீங்கள் ஆரூடம் கூற முடியுமா?

ப: ஓ! முடியுமே! மக்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்ற பின்னர் முழு, அரை மந்திரி பதவிகளுக்காக இனத்தைக் காட்டிக் கொடுத்த பிரதிநிதிகள் என்ன கதி அடைந்தார்கள் என்பதைச் சற்று திரும்பிப் பாருங்கள்— யாழ்ப்பாண எம். பி. யின் எதிர்காலம் பற்றி நீங்களே தெரிந்துகொள்ள முடியும்.

ஃ

இ. சாஹிபு, அனுராதபுரம்.

கே: பருவ மங்கை ஒருத்தியை இயக்கும் சக்தி எது?

ப: இன்பக் கனவுகள்.

ஃ

தமிழ் செல்வன், தலவாக் கொல்லை.

கே: பெண்களின் மார்பகங்கள் ஈட்டி முனைபோலாவதின் மர்மம் என்ன?

ப: ஆண்களின் நெஞ்சத்தைத் துளைப்பதற்காக என்று ஏமாந்துவிடாதீர்கள்

---

திருவாளர்

**குயுக்தியார்**

மே/பா சுதந்திரன்

தபால் பெட்டி இல. 1183

கொழும்பு-12.

---

—எல்லாம் 'பிரேஸியரின்' சாதனை.

ஃ

செல்வி வி. மீனு, மாதகல்.

கே: இளங்குமரர்கள், பாதையிலே செல்லும் இளம் பெண்களைக் கண்டால் தங்கள் சைக்கிள் மணியை ஏன் அடிப்பதில்லை?

ப: இளங்குமரிகளை நடுத்தெருவில் நடனமாடச் செய்து, அவர்கள் மீது உரசிச் செல்வதற்காக......

ஃ

செ. சுப்பிரமணியம், காரைநகர்.

எம். ஜி. ஆரை இராவணனாகவும், சிவாஜிகணேசனை இராமராகவும், எஸ். எஸ். இராஜேந்திரனை இலக்குமணனாகவும், பத்மினியை சீதையாகவும், சரோஜாதேவியை மண்டோதரியாகவும் போட்டு சம்பூர்ண இராமாயணம் எடுத்தால்...?

ப: பார்க்க ஆயிரங்கோடி கண்கள் வேண்டும்.

ஃ

எம். எஸ். சிவம், கொட்டகலை.

கே: பித்தலாட்டக்காரரின் பிறப்பிடம் எது?

ப: பிரசவித்த இடம்.

ஃ

சாந்தினி, ஞெக்ஹில்.

கே: பெண்களின் பெயரால் கேள்வி கேட்டு உங்களிடம் பதிலை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களே சில ஆண்கள்! அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: ஆண்மையற்றவர்கள், நேரடியாகக் கேள்வி கேட்க!

ஃ

புரட்சிப் பித்தன், நிந்தவூர்.

கே: திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா, ராஜினாமா செய்ததைக் கேட்டு மாஜி நிதி மந்திரி முஸ்தபா வாயைப் பிளந்தாராமே!

ப: ஆனால் நிதிமந்திரி பதவி திரு. சி. பி. டி. சில்வாவின் வாயினுள் அல்லவா விழுந்துவிட்டது!

ஃ

பற்குனம் விஸ்வநாதன், கோட்டே.

கே: அன்று, சாராயத் தவறணைக்கு அருகில் என்னிடம் பதினைந்து ரூபாய் கடன் வாங்கினீர்களே! அதை எப்போது திருப்பிக் கொடுப்பீர்கள், குயுக்தியாரே!

ப: ஏனையா உண்மையைக் கூற வெட்கப்படுகிறீர்கள்? கள்ளுக் கடை அருகிலல்லவா உம்மிடம் கடன் வாங்கினேன்?

ஃ

த. பத்மாவதி, புற்றளை.

கே: நான் பக்கத்து வீட்டிலுள்ள எனது காதலர் வீட்டிற்கு சென்று அவருடன் பேசலாமென நினைத்தேன். கடிதம் வரைந்தேன். பாடசாலைக்குச் செல்லும்போது அழைத்தேன். அவர் என்னுடன் பேச மறுக்கிறார் என்ன செய்யலாம்?

ப: உங்கள் காதலைப் பக்க வாட்டில் தாண்டி, வேறு திசையில் திரும்பி விட்டார் போலும்! காதலை ஆழம் பார்க்காமல் படிப்பில் கவனம் செலுத்துங்கள்!

ஃ

க. சரோஜா, கொக்குவில்.

கே: உலகத்தில் அதிக மலிவானது எது?

ப: புத்திமதி.

ஃ

நா. ஜெயசீலன், காங்கேசந்துறை.

கே: இலங்கையில் முதன் முதல் கேள்வி பதில் வெளியான தமிழ் பத்திரிகை எது?

ப: சுதந்திரன்.

ஃ

எம். எஸ். அப்துல்சலாம், பெரியகிண்ணியா.

கே: ஒருவாரத்தில்சுதந்திரன் எத்தனை பிரதிகள் விற்பனையாகின்றன?

ப: இலங்கையிலுள்ள எல்லா தினசரி, வாரப் பத்திரிகைகளையும்விட அதிகமான பிரதிகள் விற்பனையாகும் ஒரே வாரப் பத்திரிகை சுதந்திரனே.

ஃ

பி. செல்லத்துரை, ரக்வான.

கே: "நாடற்றவர்கள்" எனக் கூறப்படும் இலங்கைப் பிரஜைகளை இந்தியாவுக்குச் செல்லுமாறு பணம் கொடுத்து தூண்டுவதற்காக இந்திய அரசாங்கத்திடம் சிறிமாவோவின் அரசாங்கம் ரூ 40 கோடி கடன் கேட்டிருக்கிறதே! இது நடக்குமா?

ப: உலக நாடுகளிலுள்ள நிதி மந்திரிகள் எல்லோரையும் விட அதிகமாகக் கடன் வாங்கி ஆட்சி செலுத்தியவர் இலங்கை நிதி மந்திரி தான் என்று எதிர்க் கட்சித் தலைவர் ஒருவர் கூறுகிறார். அநேகமாக உலகில் எல்லா நாடுகளிலும் இலங்கை கடன் வாங்கிவிட்டதென்று தான் கூற வேண்டும். இந்தியாவை மட்டும் "கடன்கார நாடு" விரும்பவில்லை. 40 கோடி கேட்டுப்பார்த்தார்கள். மூக்கறுபட்டார்கள். இதில் விந்தை என்னவெனில் இந்திய வம்சாவளியினரான இலங்கைப் பிரஜைகளை விரட்டியடிக்க இந்தியாவிடமே கடன் கேட்டதுதான்!

ஃ

க. மனோகரன், வல்வெட்டித்துறை.

கே: தமிழரசுக் கட்சி அறப் போராட்டம் தொடங்கும் காலத்தைத் தாழ்த்துவது ஏனோ?

ப: அறப் போருக்கு மன்னர் மாநாடு கால எல்லை நிர்ணயித்துள்ளது. தோசையைப் புரட்டுவதைப் போல அறப்போராட்டத்தைக் கண்மூடிக் கண் திறப்பதற்குள் ஆரம்பித்துவிட முடியுமா? [illegible] அதற்கு மக்களும் கட்சியும் தயாராக ஏற்பாடுகள் செய்ய அவகாசம் வேண்டாமா?

ஃ

எம். கே. சிதம்பரம், கொண்டகலை-லபுக்கலை.

கே: எந்த நாட்டிலும் பொதுவாக ஒரு தேசியக் கொடி உண்டு. கட்சிக் கொடியை ஆளும் கட்சி பறக்கவிடுவதில்லை. இந்தியாவில் மட்டும் காங்கிரஸ் கட்சி கொடியை அரசாங்கம் பறக்கவிடுகிறார்கள். உங்களின் கருத்தென்ன?

ப: இந்திய தேசிய காங்கிரஸின் கொடியில் கைராட்டைச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கக் கொடியில் அசோக சக்கரத்தின் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

ஃ

கே. எம். மாணிக்கம், கந்தப்பாளை.

கே: அழகில் சிறந்தவர்கள் "ஆண்கள்" என்கிறேன் நான்! "பெண்கள்" என்கிறாள் என் தங்கை! இதில் யார் சொல்வது சரி?

ப: தங்கை சொல்வதுதான் சரி. பெண்களின் அழகை ரசிக்க ஆண்களுக்குத் தெரியாது; பெண்களுக்குத்தான் தெரியும். அழகான ஓர் ஆணும் ஒரு பெண்ணும் இருக்குமிடத்திற்கு மற்றொரு பெண் சென்றால் அவள் அந்தப் பெண்ணின் அழகைப் பார்த்துப் பார்த்து ரசிப்பாளேயன்றி ஆணைப் பார்க்க மாட்டாள்.

அருசெல்லத்துரை, மூவான்கலை.

கே: கடன் தொல்லையால் தற்கொலை செய்துகொண்டவர்களைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: இவர்கள் கடன் கொடுத்தவர்களுக்குத் தொடர்ந்து டிமிக்கி கொடுக்கும் பலே பேர்வழிகள். தொல்லையிலிருந்து சிறிது காலம் ஒய்வெடுப்பதற்காகத் தற்கொலை செய்துகொள்கிறார்கள். பின்னர் கடன் கொடுத்தவர்களும் இயமனுலகம் வந்து அங்கேயும் இவர்களுக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கியதும், இவர்கள் மீண்டும் பூவுலகில் வந்துபிறந்து விடுவார்கள்!

ஃ

முகம்மது அனிபா, கிண்ணியா.

கே: தங்களைச் சந்திரமண்டலம் அனுப்பத் திட்டமிட்டுள்ளோம்!

ப: சந்திரமண்டல வாசிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கவா?

ஃ

திருமதி புவனேஸ்வரி அருளம்பலம், கல்வயல்.

கே: எனது அம்மாவின் வாய்க்கு ஒரு நிமிடம் கூட ஓய்வு கிடையாது. என்ன செய்யலாம்?

ப: ஓர் அரசியற் கட்சியில் சேர்த்து விடுங்கள்!

ஃ

வே. பாலசுப்பிரமணியம், காரைநகர்.

கே: தற்போதைய இலங்கைக்கு எது வேண்டும்?

ப: ஜனநாயகம்.

# சபதம்

(பாண்டியூரன்)

துரியன்மன மகிழத்துயி
    லுரியச் சபை தூங்க;
அரியைத்துணை கூவித்திர
    பதியாள் நிலை சோர;
அரிமாவென விரிமார்புர
    வீமன் சிலை விசயன்;
பெரியோரொடு கணவன்என
    பிணமாயுயிர் வாழேன்!

உலகிற்பல துரியர்துகி
    லுரியத் தொடர் கின்றார்!
நிலைமாறிய தமிழன்என
    நிறம்மாறிட மாட்டேன்!
வலைவீசிய பேயர்பசி
    வாயிற் கனல் மூட்டி;
தலையிற்குறி யிட்டுப்பழி
    தனியே நிறை செய்வேன்!

விழியே!யுனை சீணர்சிறை
    வீட்டிற்புக வைத்தார்!
ஒளிருஞ் சுவை மேனிக்கலை
    உலையாதுயர் கற்பு!
கிளியேயுனை மறவேனுயிர்
    கிழேயிது கேண்மை!
வழியேவரு மிளையோதுணை
    மலைபோ லுயர் கின்றார்!

கானிற்றுணை நாடித்தொடர்
    காதற் றம யந்தி;
நாணித் துணி மூடிக்குறி
    நாதன் வழி செல்ல;
வேனிற்பனி வாடையவள்
    மேனிக் கனி யுண்ண;
கானிற்பிரி மூடன்நள(ன்)
    நானோ பதராகேன்!

பெண்ணை யுயர் கண்ணைவிலை
    பேசிப் பொருள் கொண்ட;
மன்னன்னரி(ச்) சந்திரன்இலை
    மானம் எனக்(கு) உண்டு;
கன்னல்மொழி மாதே! படை
    காணப் புய(ம்) ஏறும்!
மன்னர்துணை வேண்டேனுயர்
    மானம் துணை கொள்வேன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தித்து வந்தவை

காலைகண்டன்

## வந்தது பேய்

பேய் வருகிறது, பேய் வருகிறது என்று ஒரு வருடத்துக்கு மேலாகப் பூச்சாண்டி காட்டப்பட்டு வந்தது. கடைசியாக இரண்டு வாரங்களுக்கு முன் பேய் வந்தது.

உருவத்தில் பெரிதாகவும், உள்ளத்தில் கொடூரமும் குரோதமும் கொண்டதாகவும், மக்களைச் சின்னபின்னப்படுத்தி துவம்சம்செய்துவிடப் போவதாகவும் எண்ணற்றவர்ணனைகள் பேயைப் பற்றி விபரிக்கப்பட்டு வந்தன.

இந்தப் பேய் அலற ஆரம்பித்துவிட்டால் மக்களுக்குப் பித்துப் பிடித்துவிடும்; பேதமை பீறிடும் என்றெல்லாம் ஆரூடம் கணிக்கப்பட்டது. ஒற்றுமையாய் வாழும் மக்கள் கூட்டத்துள் வேற்றுமை உண்டாகும். சீரான சிறப்பான வாழ்வைத் தேட செயல் புரியும் சிந்தை உரம் படைத்தோர் மத்தியில் சீரழிவு தலைகாட்டும் என்றெல்லாம் பயம்காட்டப்பட்டது.

இத்தனை கிலேசத்தையும் வளர்க்க ஏதுவான பேய் இதோ வந்துவிட்டது.

பார்த்தவர்கள் பரிகசிக்க, கேட்டவர்கள் கேவலப்படுத்த, புரையோடிப்போன புண்ணின் நாற்றத்தை அகற்ற நறுமணத்தைப் பூசிக்கொண்டு, குழிவிழுந்த கண்களை மறைக்கக் கண்ணாடி அணிந்து கொண்டுவரும் முன்னாள் மயக்கு விழிப் பாவையைப் போல் ஆடி அசைந்து தன் தரிசனத்தைக் கொடுத்தது அந்தப் பிசாசு.

மட்டக்களப்பில்தான் இந்தப் பேயின் தரிசனம் முதன் முதல் தென்பட்டது. சுயநலக் காரணங்கள் பலவற்றை மனதில் கொண்டோர், பதவியையோ பட்டத்தையோ, பணத்தையோ எதிர்பார்த்து ஏமாந்த கூட்டத்தின் முன்னோடிகள் மந்திரம் முணுமுணுக்க அடிமேல் அடி வைத்து அன்ன நடை நடந்து அந்தப் பேய் தோற்றமளித்தது.

முன்னொருக்கால் மட்டக்களப்பு பகுதிகளிலே தன்னிச்சையுடன் தாண்டவமாடிய அந்தப் பேய், குமிறிய இன உணர்ச்சியாலும், கொந்தளித்த விடுதலைவேட்கையினாலும் விரட்டி அடிக்கப்பட்டது. அலறிப் புடைத்து அலங்கோலமாய் ஒடி ஒழிந்த, அந்தப் பிசாசை, முன்பு ஒழிக்க முனைந்தசிலர், தம்மிச்சை ஈடேறாத காரணத்தால், மீண்டும் நடமாட விட ஆசைகொண்டுள்ளார்கள் என்பதுதான் விந்தைக்குரிய விடயமாகும்.

### சுயநலமிகளின் சூது

சில காலமாக மட்டக்களப்பு அரசியல் வானிலே பல புது கருமேகங்கள் உலவ ஆரம்பித்துள்ளன. இப் புதுமையான மாற்றத்துக்குக் காரணம் பல் வேறு இருப்பினும, சிலருடைய சுயநலப் பித்துத்தான் அடிப்படை என்பது மட்டும் தெளிவு.

துவேஷப் பேயை வளர்ப்பது சுயநலமிகளின் வேலை. தங்கள் சொந்த நலன்கள் புறக்கணிக்கப் படும்போது அங்கே சுடர்விடுவது துவேஷம்.

மட்டக்களப்புவாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் முன்னாட்களில் யாழ்ப்பாணத் துவேஷப் பேயை வளர்த்தவர்கள் யார்? நன்ருக அலசி ஆராய்ந்தால் புலனாகும். எந்த ஒரு வகையிலோ யாழ்ப்பாணத்துடன் குடும்பத் தொடர்பு கொண்டவர்கள்தான், ஏதோ ஒரு சிறிய சுயநலத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு அன்று யாழ்ப்பாணத்துவேஷத்தை வளர்க்க முனைந்தார்கள்.

### யார் இவர்கள்?

மட்டக்களப்பு மக்களைப் பயமுறுத்தி பேயென்றும், பூதமென்றும் பூச்சாண்டி காட்டி வந்த கூட்டத்தின் முழு உருவம் வெளிப்பட்டுவிட்டது. வீடு பற்றி எரியும் போது சுருட்டுக்கு நெருப்பெடுக்கும் கூட்டத்தைச் சேர்ந்த சுயநலப் புலிகள்—சந்தர்ப்பத்தை சாதகமாக்கிக்கொண்டு 'சம்திங்' திரட்டும் சூரர்கள், தியாகிகள்—வீர சிங்கங்கள், புரட்சியாளர்கள் என்று தம்பட்டம் கட்டி மேடையேறி பின்னர் "இன விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டோம்; அதனல் சோற்றுப் பட்டாளத்திடம் அடிபட்டோம், உதைபட்டோம் அன்னை மொழி காக்க அல்லலுற்ருேம் எம்மை ஆதரியுங்கள். உடுக்க உடையில்லை, உண்ண உணவில்லை, உயிர் ஊசலாட ஒடோடி வந்தோம்" என்று பொய்ப்புராணம் பாடி பொருள் திரட்டியவர்கள்—பட்டம் பெற்ற படிப்பாளி, கேட்போரைக் கிறங்கவைக்கும் பேச்சாளன், என்று பொய்யுரைத்து கரை கடந்து சென்று தமிழ் வளர்த்த பதிகளிலே மானம் போக்கி, தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஓடி வந்தவர்கள்—இத்தனையும செய்து கடைசியாக காட்டிக் கொடுத்தாவது காலத்தை ஓட்டலாமா? என்று கருதி அதன்படி இன்று வாழ முனைபவர்கள்-காளான் பத்திரிகை ஒன்றின் காவலற்கு ஏவலனய் காக்காய்பிடித்து, அங்கிருந்தும் காட்டுமிராண்டிச் சேட்டைவிட்டு கோட்டை விட்டவர்கள்-"தனியான ஏடொ [illegible] றேன்" என்று பொருள் திரட்டி மறைந்தவர்கள்—இத்தனைக்கும் இலக்கணமாய் அமைந்தவர்களே இப்பொழுது மட்டக்களப்பில பிசாசாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் கிழக்கிலங்கை மக்கள் பாதுகாப்பு முன்னணியை அமைத்துள்ளார்கள். "புதிய அரசியல் கட்சி மட்டக்களப்பில் தோன்றப்போகிறது" என்று கடந்த சில மாதங்களாகவே ஓலமிட்டு வந்த ஒரு பந்தம் பிடித்தான் தினபபத்திரிகை விளம்பரப்படுத்தி வந்தது.

என்ன ஆகுமோ? எப்படியிருக்குமோ? என்று மட்டக்களப்புக்கு அப்பாலுள்ள அனேகர் எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கையில் தான் இந்தக் கட்சி உதயமாயிற்று.

மேற்கூறிய இலக்கணங்களை இலட்சியமாகக்கொண்ட ஒரு 'மாஜிப் புரட்சியின்' திருக்கூத்துத்தான் இத்தனை பகட்டுக்கும் காரணம். மட்டக்களப்பு வாடி வீட்டிலே, மேற்படி சிறப்புக்களுக்கு இலக்கான ஒருவருடன் வேறு சில அநாமதேயங்களும் கூடித்தான் கி.மா.ம.பா. முன்னணியை ஆரம்பித்து வைத்தனர்.

### ஏமாற்றமுடியாது

வெளி மாகாணத்தவர் கிழக்கு மாகாணத்தவரின் மேல் ஆதிக்கம் செலுத்துவதை தடை செய்வதுதான் இக்கட்சியின் நோக்கமாம். அரசியல் கட்சியல்ல, வெறும் தேசிய இயக்கம் என்று ஒரு பத்திரிகை கூறுகிறது. இது ஒரு அரசியற் கட்சியே என்று கவிறுநிரிக்கும் ஒரு தினசரி வாதாடுகிறது. எது எப்படியிருப்பினும், மட்டக்களப்பு தமிழ்பேசும் மக்களின் ஏகோபித்த மனோ நிலையைச் சொந்த நலன்களுக்காகச் சின்னபின்னப்படுத்த முயலும் பல எத்தர்களின் ஒத்துழைப்பில் இவ்வியக்கம் தோன்றியிருக்கிறது என்பதை அறியாமலில்லை.

தமக்குள்ளே அவ்வப்போது ஏற்படும் சிறு சிறு சம்பவங்களையும் மன வருத்தங்களையும் ஒன்றுபட்டு உரிமை கோரிப் போராடும்வழி நிலைப்பட்ட மக்கள் என்றுமே பொருட்படுத்தவில்லை-சிக்கல்களையும்பேதங்களையும் என்ருே மறந்துவிட்டார்கள். இனத்தை அழிக்க முனையும் பெரும்பான்மை வெறியின் கோரப்பிடியினின்றும் விடுபட முனையும் மக்களிடம் மேலும் பேதமைகளையும், குரோதங்களையும் வளர்த்துவிட்டு வேடிக்கை பார்க்க முனையும் இந்த எத்தர் கூட்டத்திடம் மட்டக்களப்பு மககள் மசியப் போவதில்லை என்பது உண்மை.

> வினை விதைப்பவர்கள் வினையையே அறுப்பார்கள்.

### மட்டக்களப்பில் சிங்களப் பரீட்சை

மட்டக்களப்பில் நடைபெற்ற சிங்களப் பரீட்சை எப்படி நடைபெற்றது என்பதை அம்மானுக்கு அவரது மருமகன் ஒருவன் வர்ணித்துள்ளார். அதை அப்படியே தருகிருேம்:-

மட்டக்களப்பில் பல அரசாங்க உத்தியோகத்தர்கள் சிங்களப் பரீட்சைக்குத் தோற்றியது உண்மை, ஆனல் அத்தனைபேரும் உண்மை விருப்போடு தோற்றினர்களா? இல்லை. பலர் பயத்தினுல் பரீட்சை எடுத்தார்கள்; வேறு பலர் மற்றவர்கள் ஒற்றுமையின்றிப் பரீட்சை எழுதும்போது நாம் மட்டும் எடுக்காதிருப்பதால் ஆவதென்ன? என்ற மனப்பாங்கோடு எழுதினர்கள்—எடுத்தார்கள். இது தான் அவர்களின் பேச்சிலிருந்து கண்டு கொண்ட உண்மை.

இந்தப் பரீட்சை எப்படி நடந்ததென்பதுதான் இப்போது பிரச்சினையாகும். கையிலே சிங்கள எழுத்துக் கடதாசியையே தூக்கி அறியாத உத்தியோகத்தர்கள் பரீட்சை எழுதிவிட்டுவந்துள்ளனரென்ருல்; அப்பரீட்சை பரீட்சையாகவா இருந்திருக்கும்? பரீட்சை மண்டபம் ஒரே அமர்க்களப்பட்டது. பேச்சும், கதையும் சிரிப்பும்-இவற்றுக்குப் பஞ்சமே இல்லை. ஒரு பரீட்சை நிலையத்தில் இத்தகையதன்மை நிலவியபோது பரீட்சை மேற்பார்வையாளர் ஒருவர் பரீட்சார்த்தி ஒருவரிடம் வந்து: "இது பரீட்சை; பேசக்கூடாது" என்ருர். அப்போது அப்பரீட்சை எழுதுபவர்: "உமக்கென்னகாணும் அது என் விருப்பம்" என்ருர்.

இதை விடப் பெரிய புதினம் வேறு நடந்தது. பரீட்சையை நடத்திய சில அதிகாரிகளே வரிசை வரிசையாக வினுக்களுக்குரிய விடைகளை எழுதி வினியோகஞ் செய்தனர். கொஞ்சம் சிங்களம் தெரிந்த ஓரிருவர் தாமும் எழுதி விடைகளை வழங்கினர். "ஆண்டவண்ட ஊரிலே ஏண்டவண்ட பாடு" என்ருப்போல்; எல்லாரும் தங்கள் பிரதி பண்ணல் கைவரிசைகளைக் காட்டிக் கொண்டனர். அது பரீட்சையாக இல்லை; பார்த்தெழுதும் பரீட்சையாக நிகழ்ந்தது. இப்படியென்ருல் எந்தக் குருடனும் சித்தியடைவது திண்ணமே! ஆமாம், பரீட்சை முடிவு நூற்றுக்கு நூறு வீதம் சித்தியென்று வரத்தான் போகிறது. தமிழர்களை - போராட்டத்தைப் பெலவீனப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டு ஆற்றும் பணிதான் இது.

### யாழ்ப்பாணத்தில்.

யாழ்ப்பாணம் சென்ட் ஜோன்ஸ் கல்லூரியில் சிங்களப் பரீட்சை நடைபெற்றது. பரீட்சைக்குத் தோற்றிய பலருக்கும் சிங்களம் சுத்த சூனியமாக விருந்தது. வினுப் பத்திரங்களை வாங்கி வைத்துக்கொண்டு விழித்தவர்களைப் பரீட்சை அதிகாரிகள் அணுகி, தெரியாதவர்கள் தெரிந்தவர்களிடம் கேட்டு எழுதுங்கள் என்று பகிரங்கமாகக் கேட்டுள்ளனர். ஆகவே சிங்கள சோதனைக்கு வெறுமனே தோற்றிய பலரும் சித்தியடைவது திண்ணம். அர

(9-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஒழிப்பு ஆரம்பம்

உத்தியோக மொழி இலாகாவில் மும்முரமாகத் தமிழை ஒதுக்கித் தள்ளிவிட சகல ஏற்பாடுகளும் ஆகிவிட்டதெனத் தெரிகிறது. இந்த இலாகாவில் உள்ள தமிழ் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவி ஒழிக்கப்படுவதற்கான வகையில் புதிய வரவு செலவுத் திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுவிட்டது.

பல வருடங்களாக இரு மொழிகளையும் ஆராய்ந்து வருவதற்கான உத்தியோகத்தர்கள் நியமனம் பெற்று செயலாற்றிவந்தனர். இவ்வருடத்துடன் தமிழ் ஆராய்ச்சியர்ளர் நீக்கப்பட்டு விடுவாரெனத் தெரிகிறது. வழக்கமாகப் பிரசுரிக்கப்பட்டுவந்த தமிழ் உத்தியோக மொழிச் சொற் தொகுதிகள் வெளியிடுவதும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த இலாகாவில் உயர் பதவி வகிக்கும் தீவிர சிங்கள வகுப்பு வாதியின் வெறிச் செய்கைகளில் இதுவும் ஒன்ருகும். அவருடைய தமிழ் ஒழிப்புச் சூழ்ச்சி வெற்றி பெற்றுவிட்டது. தமிழ் பேசும் மக்களையும் மொழியையும் புறக்கணிக்கும் வேறு பல செய்திகளும் அப்பாக்குட்டி அம்மானுக்கு கிடைத்துள்ளன. இவை யாவும் விரைவில் சந்தியில் இடம் பெறும்.


பிரமிக்கச் செய்யும் நிகரற்ற அழகிற்கு!!

மௌலானு

அச்சடி சீத்தைகள்!!!



மனங்கவர் மங்காத பல நிறங்கள்!

மகிழ்விக்கும் மனோரம்மிய நவீன டிசைன்கள்!

நீடித்த சேவை அனைத்தும் - கொண்ட மௌலானு அச்சடி சீத்தைகளை அணிந்து உயர்ச்சி மிகு கவர்ச்சி பெறுங்கள்!!

மௌலானு (சிலோன்) லிமிட்.,

கொழும்பு, மருதானை, கண்டி.

—MYLADS/MCL—

# சட்டத்தால் தமிழை அழிக்க முடியாது

## சோற்றுப் பட்டாளத்தால் மட்டும் முடியுமா?

## தமிழனே தமிழை அழிக்கலாம்

### அமரர் வன்னியசிங்கம் விழாவில் தலைவர்கள் பேச்சு

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் காலவெள்ளத்துடன் போராடிய தமிழை, அந்நியர் படையெடுப்புக்களால் அகற்ற முடியாத தமிழை, சிறிமாவோவின் சோற்றுப் பட்டாளத்தால் அழித்துவிட முடியாது. சட்டத்துக்குமேல் சட்டம் செய்தாலும் செந்தமிழை அழிக்கவே முடியாது. ஆனால் தமிழனால் தமிழை அழித்துவிட முடியும். இவ்வாறு கொழும்பு விவேகாநந்த மண்டபத்தில் நடைபெற்ற கோப்பாய்க் கோமான் அமரர் வன்னியசிங்கத்தின் நினைவு நாளில் பேசிய உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "திரு. வன்னியசிங்கம் தமிழ் பேசும் மக்கள் தமிழ்மொழியை வளர்க்க வேண்டும், தமிழ்மொழியின் வளர்ச்சி குன்றுமலிருக்க எவ்வெவ் வழிவகைகளைச் செய்யமுடியுமோ அத்தனையையும் செய்யவேண்டும் என்பதை வாழ்க்கை முறையிலும் அனுசரித்துக் காட்டினார்.

"தமிழ் பேசும் மக்கள் ஒரே குரலுடன், ஒரே மூச்சுடன் இணைந்து போரிட்டால் வெற்றி விரைவில் கிட்டிவிடும் என்பதை உணர்ந்த திரு. வன்னியசிங்கம் அந்த ஒற்றுமைக்காகவே அரும் பாடுபட்டார். அவர் உழைப்பு வீண்போகவில்லை. தமிழ் பேசும் மக்கள் கடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்துடன் கருத்தொருமித்தவர்களாகிவிட்டனர். அவருடைய இலட்சியம் ஓரளவு வெற்றிபெற்றுவிட்டது என்றே கூறலாம்.

#### மொழி அழிக்கப்படும்?

"தமிழ்த் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பாலுடன் தமிழை ஊட்ட என்று மறக்கிறார்களோ அன்றே தமிழ் அழிக்கப்படும். எந்தச் சட்டமோ, சோற்றுப் பட்டாளமோ தமிழை அழித்துவிட முடியாது.

"தமிழர்கள் ஆரம்பத்தில் எதையும் எதிர்ப்பார்கள். பின்னர் துணிந்து போய் எதிர்த்ததையே ஏற்றுக் கொள்வார்கள், என்று சிங்கள மந்திரியர்கள் கருதுகின்றனர். இதை மெய்ப்பிக்கத் தக்கவகையில் இன்று நம்மில் பலர் சிங்களத்தைப் படித்து உத்தியோகத்தை நிலை பெறச்செய்ய முயலுகிறோம். இப்படி நாம் செய்வதன் மூலம் எதிர்கால சந்ததிகளை நாம் நிர்மூலமாக்குகின்றோம். அவர்களை நிர்க்கதியாக்குகின்றோம். வருங்காலச் சந்ததியினருக்கு சிங்களம் எந்தவகையிலும் உபயோகப்படப் போவதில்லை.

"நாம் வாழும் பகுதிகளான வடக்குக் கிழக்கு மாகாணங்களை அபகரிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகிறது சிங்கள அரசு. எங்கெங்கு பூமி கிடைக்கிறதோ அங்கே சென்று குடியேறியோ, பயிரிட்டோ நமது பிரதேசத்தைப் பறிபோகாது காக்கவேண்டியது நமது தலையாய கடமையாகின்றது. இந்தத் துறையிலும் திரு. வன்னியசிங்கம் அயராது பாடுபட்டுழைத்தவர்.

பணம் படைத்தோர் பலர் நம்மிடமுண்டு. அவர்களுடைய மூலதனங்களை வடகிழக்கில் முடக்கவேண்டும். வேறு மாகாணங்களில் பணத்தை முடக்கினால் வருங்காலத்தில் ஒரு சதமேனும் அவர்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. வடகிழக்கல்லாத வேறு இடங்களில் மூலதனத்தை முடக்குவோர் தமிழ் பேசும் மக்களுக்கும் தமிழன்னைக்கும் துரோகம் செய்பவராவார்கள்" என்று கூறினார்.

தமிழ் பேசும் மக்கள் மத்தியில் புகுந்துவிட்ட தீண்டாமையை அடித்து விரட்டி, தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்த திரு. வன்னியசிங்கம் அயராது பாடுபட்டார். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த அவர் தமது பேச்சைப்போல் செயலிலுமிருப்பாரோ? என ஐயமுற்ற பலர் திரு. வன்னியசிங்கத்தைப் பல சோதனைகளுள் ஈடுபடுத்தினர். இத்தகைய சோதனைகளையெல்லாம் கடந்து எத்தனையோ சமபந்திபோசனங்களிலெல்லாம் பங்குபற்றி தமது செயலை நிலைநாட்டினர். பேச்சுக்கும் செயலுக்கும் மாறுபடாது செயல்பட்ட திரு. வன்னியசிங்கம் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் என்றும் வாழ்வார். தீண்டாமையை ஒழிக்த அவர் எடுத்த முயற்சிகளை எமது கட்சி இன்றும் நடைமுறைக்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. தீண்டாமை ஒழிப்பதன் மூலம் திரு. வன்னியசிங்கத்துக்கு நாம் என்றும் அழியாத ஞாபகச்சின்னம் எழுப்புவோமாக" என்று தமிழரசுத்தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறினார்.

அடுத்துப் பேசிய டாக்டர் இ. மு. வி. நாகநாதன் "தமிழரசுக்கட்சியின் கொள்கை என்னவென்று இன்றும் பலர் கேள்விகள் கேட்டுக் கொண்டேயுள்ளனர். அமரர் வன்னியசிங்கத்தின் கொள்கை எதுவோ அதுவே கட்சியின் கொள்கையாகும்.

"உடல் நோயால் பீடிக்கப்பட்டிருக்கும்போது சற்று ஓய்வெடுக்கும்படி திரு. வன்னியசிங்கத்தைக் கேட்டிருந்தேன். செய்ய வேண்டிய வேலைகள் எவ்வளவோ இருக்கையில் ஓய்வெடுக்க முடியுமா? என்று கேட்டார். கடமையாற்றும் போதே எம்மைவிட்டு மறைந்தஒப்பற்ற தலைவரை, அவர் எண்ணங்களை ஈடேற்ற உழைப்பதன் மூலமே நாம்நினைவுபடுத்த முடியும்." என்று பேசினார்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரெத்தினம் பேசுகையில் "1952 தேர்தலில் தமிழரசுக்கட்சி அபேட்சகர்கள் படுதோல்வி அடைந்த பொழுதிலும், கோப்பாயில் வெற்றியீட்டிய திரு. வன்னியசிங்கம் தளராது உழைத்து, சகல தமிழ் பேசும் மக்களுக்கும் சேவை செய்து வந்தார்" என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் எந்தப் பக்கத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்களை ஒன்றுபடுத்தி, அவர்களுக்கான மொழியுரிமை, குடியுரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதையே இலட்சியமாகக் கொண்டது தமிழரசுக் கட்சி இக் குறிக் கோளுக்காக தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர் திரு. வன்னியசிங்கம் என்று திரு. ஜனுப் மசூர் மௌலானு குறிப்பிட்டார்.

அடுத்து மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை பேசுகையில் கொண்ட கொள்கைக்காகத் திடமுடன் எதையும் செய்யக்கூடிய கர்மவீரர் திரு. வன்னியசிங்கம் என்று குறிப்பிட்டார். 1956-ல் கல்லோயா பள்ளத்தாக்கில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் போது, கலவரப் பிரதேசத்துக்குள் எந்தவிதமான பயமுமின்றிக் காலடி எடுத்து வைத்தார். 1957ம் ஆண்டு ஏற்பட்ட பெருவெள்ளத்தினல் சகல போக்கு வரத்துக்களும் துண்டிக்கப்பட்டிருக்கும் போது, ஒரு லொறி நிரம்ப துணிகளையும், உணவுப் பதார்த்தங்களையும் சேகரித்துக் கொண்டுவந்து மட்டக்களப்பு மக்களுக்கு விநியோகித்தார்.

அரசாங்கத்தாரால் கணிக்க முடியாத புள்ளி விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆதாரங் காட்டி விளக்குவதில் திறமையாளர் திரு. வன்னியசிங்கம். அத்தகை கர்மவீரர் நம்மை விட்டு மறைந்து ஆண்டுகள் பலவாகிவிட்டபோதிலும், தமிழ்பேசும் மக்களின் உள்ளங்கள் அவரை மறக்க முடியாது.

குடியேற்றப் பிரச்சினை பற்றிய விவாதங்கள் ஏற்பட்டபோது, தமிழ்ப் பிரதேசங்களில் தமிழ் பேசும் மக்கள் குடியேறுவது குற்றமானல், அக்குற்றத்தை ஆயிரம் தடவைகள் புரிந்து துக்குமேடை யேறவும் தயாராகவிருக்கிறேன் என்று பாராளுமன்றத்தில் முழக்கமிட்டவர் திரு. வன்னியசிங்கம்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் பழுகாமம் ஞானமணியம் அமரர் வன்னியசிங்கத்தின் பேரில் நினைவுப்பாக்களைப் பாடினர். கூட்டத்திற்கு வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகம் அவர்கள் தலைமை வகித்தார். திரு. ஈழவேந்தன் நன்றியுரை கூறினார்.



புறக்கோட்டை பாங்ஷால் வீதி, 63-ம் இலக்கத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆர். எம். பெரியசாமி அன் சன்ஸ், புடவை வியாபார நிலையம் திறந்து வைக்கப்பட்டபோது சினிமாஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. குணரெத்தினத்தை திரு. ஆர். எம். பெரியசாமி வரவேற்கிறார்.

## கவிதைப் பூங்கா

## பாவலர் பரம்பரை!

—ச. வே. பஞ்சாட்சரம்—

மின்னொளிப்பல நன்மை இருக்கினும்
வேதனைத் துடிப்புற்றிடு மாதலின்,
கன்னலுக்கருஞ் சாறு மிகுக்கினும்
கட்டிநிற்குது சக்கையும் ஆதலின்,
செந்நெலிற்பலர் வாழ்வு இருப்பினும்
செத்தவைக்கல் உதிர்த்தது வாதலின்,
சின்னதென்றிவை தள்ளி இகழ்த்திடச்
சிந்தைகொள்பவர் யாருளர் பாரினில்!

முல்லைமல்லிகை அல்லி சிறக்கினும்
மொட்டவிழ்வது அல்லிடை யாதலின்,
நல்லபண்புகள் பெண்ணு விருப்பினும்
நண்ணிநிற்குது பேதமை யாதலின்,
கல்லினிற்சிலை கட்டெழில் பூக்கினும்
கல்லெனப்படும் கீழ்மைய தாகலின்,
நல்லதன்றெனத் தள்ளி மிதித்திடல்
நன்மைஎன்பவர் யாருளர் பாரினில்!

"இன்பநல்லுணர் வள்ளி வழங்கிடும்
இன்னிசைத்தமிழ்ப் பாடல்! இருப்பினும்
என்பெழுந்திடும் ஏழ்மையர் இன்னவை
ஈந்துநின்றிடும் பாவலர், ஆதலின்
நன்றுடைத்தல!" என்று இகழ்பவர்
நம்மிடைப்பல ருள்ளன ரேஇதென்?
தென்குலத்தமிழ்ப் பாவலர் சந்ததித்
தீய்ந்திடார்பசித் தீயினில் யாருளர்?

### ஐக்கிய நாடுகள் சங்க பொதுச் சபைப் புதுத் தலைவர்

ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் பொதுச் சபையின் தலைவராக, பாக்கிஸ்தானின் நிரந்தரப் பிரதிநிதி திரு. சபுருல்லாக்கான் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


ஜீ. சீ. ஈ. தமிழ் பரீட்சை
டிசம்பர் ஆகஸ்ட்

அற்லஸ்ஹோல் அளிக்கும் விளக்கமான பாடங்களைப் படிப்பதன் மூலம் ஜீ. சீ. ஈ. பரீட்சையில் சித்தியடைவது மிக எளிதாகி விட்டது.

* பரீட்சையின் புதிய நிபந்தனைகள்
* எமது புதிய பாடங்கள்
* 101 வினு விடைகள்
* கடந்த கால வினு விடைகள்

போன்றவற்றிற்கு இன்றே எழுதுங்கள்.

விபரங்களுக்கு:-
அற்லஸ் ஹோல் த. பெ. 649, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘சிங்காரக் கொண்டைக்குச் சீப்பு வாங்கி நான் வருவேன்’

## எருக்கலம்பிட்டி முஸ்லிம்களிடையே நிலவும் காதல் காவியத்து ‘மச்சான்’ சொல்கிறார்

**அ. டேவிற் இராசையா**

ஜெசிமா இளம் அகவையினள். எழில் மங்கை. அந்தக் கொஞ்சு மொழி கோதையின் மீது மையல் கொண்டான் ஒரிளைஞன். அவளது பேரெழிலை தன் அகவிழியாலும் புறவிழியாலும் அள்ளிப் பருகினன். அவளும் அந்தக் கட்டழகனின் அகண்ட மார்பிலே துயிலும் நாளைக் கற்பனை செய்தாள். இருவரும் காதல் மொழி பேசினர். காதல் வயப்பட்ட அந்த அகவையினர் இன்பம் துய்த்தனர். ஆமாம், அந்தப் பாவையின் பலாச்சுளை உதடுகளில் வழியும் கொல்லித் தேனைச் சுவைத்துச் சுவைத்து உள்ளம் மகிழ்ந்தான் அவன். காதலனிடம் பயின்ற காதல் மொழியை எண்ணி எண்ணி அவள் இன்ப வெறி கொண்டாள். அவனும் அந்த வாலைக் குமரியிடம் பயின்ற காதல் விளையாட்டை நெஞ்சில் நிறுத்தி நினைவைத் தேனாக்கி வாழ்ந்தான்.

அவளைப் பார்க்காவிடின் அவனுக்குப் பித்தம் பிடித்துவிடும். ஆமாம், அவள் இருக்கும் தெருவைப் பித்தனைப் போல் சுற்றியலைவான். அதிலே அவனுக்கு அலாதியான இன்பம். ஆனால், அவன் ஏனோ சில நாட்களாக அந்தத் தெருவை எட்டிப் பார்க்கவேயில்லை. அவளைச் சந்திக்கவேயில்லை.

தன் காதலனைக் காணாத அந்த நங்கை உள்ளம் நைந்தாள். அவளுக்கு உணவு செல்லவில்லை. துயில் கொள்ளவில்லை. அவனை நெஞ்சில் நிறுத்தி நினைந்து நினைந்து வருந்தினாள். ஒரு நாள்—.

அவன் அவளைக் கண்டான். அவள் உள்ளம் குளிர்ந்தது. களிப்படைந்தாள். ஆனால் அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. சந்தேகப் பேய் அவள் அடிமனத்தில் குடி புகுந்தது. அவள் கேட்கிறாள்:—

மானை மறந்தியளோ
மயில் போற வீதியிலே
என்னை மறந்தியளோ
மச்சான்
இன்னொருத்தி மையலிலே.

அன்பே! பெண்களிடம் இயற்கையாக அமைந்துள்ள சந்தேகம் உன்னிடம் இருப்பதில் எனக்கு வியப்பில்லை. வழக்கமாக மீன் பிடிக்கும் இடத்தை விட்டுக் கடலில் மிகுந்த தூரம் போய்விட்டேன். அதனால் உன்னைச் சந்திக்கவே இயலாமற் போய்விட்டது. இன்று உன்னைப் பார்க்க ஓடோடி வந்தேன். என் மனம் தான் உன்னை மறக்க இடம் கொடுக்கிறதில்லையே!— என்று அவன் கூறுகிறான்:

ஈரற் கொழுந்தே
இளங்கு மந்தத்
தாமரையே
மாதளம் பூவே உன்னை
மறக்க மனம் கூடுதில்லை.

நாட்கள் நகர்ந்தன!

கொழும்பு நகரைச்சுற்றிப் பார்க்க அவன் உள்ளத்தில் ஆசை அரும்பியது. காதலியைப் பிரிந்திருக்க அவனால் முடியவில்லை. “கொழும்புக்குப் போகிறேன்”—“உனக்குத் தேவையானதை சொல்லிவிடு”—என்று கேட்கிறான் அவளிடம்:

கொழும்புக்குப் போறனடி
குணமயிலே
சொல்லிடுங்கோ
சிங்காரக் கொண்டைக்குச்
சீப்பு வாங்கி நான்
வருவேன்.

காதலனின் பிரியாமை அவளுக்கு ஒரு பக்கம் துன்பம்தான். என்றாலும் அன்றைக்குத் தூய உடுப்பு உடுத்தி மதிப்பாய்க் கொழும்புக்குப் போகவிருக்கும் அவனைக் கிண்டல் செய்ய அவள் எண்ணுகிறாள். அதிலே அவளுக்குத்

(13-ம் பக்கம் பார்க்க)

ரிஷி லேகியம்

ரிஷி கருணைக் கிழங்கு லேகியம்

ரிஷி படம் உள்ளதாவெனப் பார்த்து வாங்கவும்

மலச்சிக்சலுக்கும், மூலவியாதிக்கும்,
மூல முளைகள், இரத்த மூலம், சீழ் மூலம், வெளி மூலம், உள் மூலம், பௌந்திர கைகால் அசதி, சோம்பல், அஜீரணம், பசியின்மை, பத்தவாயு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், இடுப்பு வலி, நெஞ்சுவலி, புற்றுகள், கண் கை கால், திரேக எரிச்சல், தேக மெலிவு, மூலச் சூட்டினால் உண்டாகும் எல்லா வியாதிகளையும் உடனே கண்டிக்கும்.

விபரமடங்கிய கேட்லாக் இனாம்

15 நாள் டின் ரூ. 3-00
30 நாள் டின் ரூ. 5-75

தபால் செலவு -/95

ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.





பணக்காரன் முதல் பாட்டாளி வரை
எல்லோரும் புகைப்பது

கமலா பீடி

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி தாமரை
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 3597—6522

# இந்தியா செல்லும் மாணவர்கள் படும் அவஸ்தை

## நிதி மந்திரிக்குப் புகார் செய்து திரு. எஸ். ஜே. வி. கடிதம்

இந்தியப் பல்கலைக் கழகங்களில் உயர்தரக் கல்வி கற்கும் மாணவர்கள் நாணய மாற்றுக் கட்டுப்பாட்டிலாகாவின் புதிய சில விதிகளினால் படும் அவஸ்தை பற்றி திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திற்கு, அனேகமான பெற்றோர்கள் கடிதம் எழுதியுள்ளனர்.

பல்கலைக்கழக புகுமுக வகுப்பில் ஒருமுறை தவறிவிட்டால், பின் தொடர்ந்து படிப்பதற்கு இலங்கை நாணய மாற்றுக் கட்டுப்பாட்டிலாகா அனுமதிப்பதில்லை. இது பற்றிக் கனம் நிதி மந்திரிக்கு, திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் எழுதிய கடிதத்தில் “இலங்கைச் சர்வகலாசாலையிலோ அல்லது கல்லூரிகளிலோ ஒரு முறை தவறியவர்களை வெளியே அனுப்புவதில்லை. அப்படியிருக்க இந்திய சர்வகலாசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் ஏன் இப்படியான ஒரு புது விதியை அமுல் நடத்த வேண்டும்?” என்று கேட்டுள்ளார்.

“நாணய மாற்றுக் கட்டுப்பாட்டிலாகா அதிகாரிகளின் நடவடிக்கைகள் மிகவும் பாதகமானதாகத் தென்படுகின்றன. எனவே அக் கட்டுப்பாடுகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகளை உடன் எடுப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்” என்று திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கூட்டுறவு இயக்கமும் அரசியலும்

கூட்டுறவு இயக்கம் முன்னேற்றமடைய நேர்மையும் தியாக உணர்ச்சியும் ஐக்கியமும் அவசியம். இவைகளைப் பின்பற்றினால்தான் கூட்டுறவு இயக்கம் நன்கு முன்னேற்றம் காண முடியும். இஃது இவ்வாறிருக்க அரசியல் தலையீட்டின் காரணமாக இந்த இயக்கம் மோசமடைந்து வருவதையிட்டு நான் வருந்துகிறேன். அரசியல் தலையீட்டைத் தவிர்த்து உண்மையான நோக்கோடு கூட்டுறவு இயக்கத்தை சீர்திருத்துவது மிக அவசியம்.

மேற்கண்டவாறு மூதூர்த் தொகுதியின் முதலாவது பிரதிநிதி ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலி தம்பலகமம் முன்மாரித்திடல் சித்தி விநாயகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழாவில் குறிப்பிட்டார்.

திரு. எஸ். நடராசா தலைமை வகித்த இவ்விழாவில், திருமலை மாவட்டாரக் கூட்டுறவு உதவி ஆணையாளர் (கொமிசனர்) திரு. எம். மதிபாலசிங்கம், பண்டிதர் ஐ. சரவணமுத்து, திரு. க. நவரட்னம் ஆகியோரும் பேசினர்.

## பாரதி விழாவும் இலக்கியச் சந்திப்பும்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் ஆதரவில், பாரதி விழா, கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில், சென்ற சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு நடைபெற்றது. அதே மண்டபத்தில், டொமினிக் ஜீவாவின் ‘பாதுகை’ என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவும், இலக்கிய நண்பர்கள் சந்திப்பும் நடைபெற்றது.

பாரதிக்கும் ஈழத்துக்கும் இடையே இருந்த நெருங்கிய தொடர்பைப் பற்றி, புதிய கண்ணோட்டத்தில் திரு. அ. ந. கந்தசாமி சபையோருக்கு எடுத்துரைத்தார். சுப்பிரமணியருக்குப் ‘பாரதி’ என்ற பட்டத்தைச் சூட்டிய பெருமை ஒரு யாழ்ப்பாணத்துப் புலவரைச் சார்ந்தது என்ற உண்மை புதிதான, ஆனால், மகிழ்ச்சிகரமான உண்மையாக அமைந்தது.

ஈழத்துக் கவிஞர் திரு. இ. முருகையன் பாரதியாரைப் பாராட்டிப் பேசியபின், பாரதிபற்றித்தாம் வரைந்த எழில் கவிதையொன்றை வாசித்துச் சபையோரை மகிழ்வித்தார்.

திரு. நா. பொ. தர்மலிங்கம, பாரதியாரின் கூற்றான “சென்றிடுவீர் எட்டுத்திக்கும், கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்” என்பதைத் தமிழ் பேசும் மக்கள் மெய்ப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

விழாவுக்குத் திரு. சு. தியாகராஜா தலைமை வகித்தார்.

அதற்குப் பின்னர் ஜீவாவின் வெளியீட்டு விழா நடைபெற்றது. திருவாளர்கள் அ. ந. கந்தசாமி, செ. கணேசலிங்கம், கா. சிவத்தம்பி, நீர்வை பொன்னையன் ஆகியோர் பங்குபற்றிப் பேசினர்.

இவ்விழாவில் குறிப்பிடத்தக்க விசேடமென்னவெனில், அமெரிக்கப் பல்கலைக் கழக மாணவர் ஒருவரும் கலந்து கொண்டமையே. அவர், அமெரிக்க இலக்கியத்தைப் பற்றிச் சுருக்கமாக எடுத்துரைத்தார். அவரது ஆங்கிலச் சொற்பொழிவின் சாராம்சத்தை திரு. சிவத்தம்பி சபையோருக்குத் தமிழில் தந்தார்.

‘பாதுகை’ சிறு கதைத் தொகுப்பின் விற்பனையுடன் விழா இனிது முடிவடைந்தது.

# தமிழ் பாடசாலைகள் சிங்கள மயமாகின்றன!

நீர்கொழும்பு பிரிவைச் சேர்ந்த எட்டு தமிழ்ப் பாடசாலைகள் அடுத்துவரும் 1963-ம் வருடம் ஜனவரி முதலாந் திகதியிலிருந்து சிங்கள—தமிழ்ப் பாடசாலைகளாக மாறுமென அறியப்படுகிறது.

நீர்கொழும்பு பெரிய தெரு ஆண் பாடசாலை, முன்னக்கரை தமிழ் கலவன் பாடசாலை, கடற்கரைத் தெரு தமிழ் ஆண் பாடசாலை, கடற்கரைத் தெரு பெண் பாடசாலை, பலகத்துறை தமிழ் கலவன் பாடசாலை, நூரானை தமிழ் கலவன் பாடசாலை, குடாப்பாடு தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே இவ்வெட்டுப் பாடசாலைகளுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழர் மீது இராணுவ ஆட்சி

## இங்கிலாந்துப் பத்திரிகை வெளியிட்ட செய்தி

சென்ற வருடம் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது, நாட்டில் கடுமையான பத்திரிகைத் தணிப்புச் சட்டம் அமுலாகியிருந்தது. அச்சமயத்தில், இலங்கையின் உண்மை நிலையை பிரிட்டிஷ் வாசகர்களுக்கு அறிவிக்க விரும்பிய 'டெயிலி டெலிக்கிராப் அன்ட் மோர்னிங் போஸ்ட்' டின் விசேஷ நிருபர் ஸ்டீபன் பார்பர், சென்னையிலிருந்து கட்டுரை ஒன்றை எழுதியனுப்பியிருந்தார். அதன் தமிழாக்கம் இங்கு தரப்பட்டுள்ளது.

இன்று இலங்கையில் உள்ள வட, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்கள், அந்நிய பட்டாளத்து ஆட்சியின் கீழுள்ள நிலைமையிலேயே வாழ்கின்றனர். இவர்களின் தொகை இருபது லட்சமாகும்.

உலகத்தின் முதல் பெண் பிரதமரான திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசாங்கம், தனது எழுபது லட்ச சிங்கள இனத்தவரின் ஆதிக்கத்தை தேசிய சிறுபான்மை இனத்தின் மீது பலாத்காரமாகத் திணிக்க முயலுகிறது.

மகாராணியின் பிரதிநிதியான கவர்னர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலக்கா அவசர கால நிலை பிரகடனப்படுத்திய பின், கடந்த 12 நாட்களாக, மிகவும் மென்மையான சுபாவமும், இலகுவில், பயமுறுத்தப்படக் கூடியதுமான இயல்பும் படைத்த ஒரு சமூகத்தின் மீது, கண் கடை தெரியாத காடைத்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

அந்தக் காடைத்தனம் வெறுக்கப்படுகின்றது என்பது இங்கு கூறவேண்டியதில்லை. ஆகக் கூடியது நாம் இங்கு கூற முடிந்ததென்னவெனில், இந்த 'சட்டமும், ஒழுக்கமும்' நிலைநாட்டும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருப்போர், மற்றைய ஆதிக்க இனங்களின் திறமையைப் பெற்றவர்களாகக் காணப்படவில்லை.

கடந்த 48 மணித்தியாலங்களாக நான் இலங்கையின் இரண்டாவது பெருநகரான, புழுக்கம் நிறைந்த யாழ்ப்பாணத்தில் 600,000 தமிழர்களிடையே வாழ்ந்து வந்ததன் பயனாக, அவர்கள் ஒரு முற்றுகையின் கீழ் வாழ்கின்றோம் என்ற உணர்ச்சியுடையவர்களாகவே தென்படுகிறார்கள் என்பதை அறிந்து கொண்டேன்.

பள்ளிக்கூட அதிபர் ஒருவரின் வெறும் வீட்டைச்சுற்றியிருந்த கிடுகு வேலியை, இலங்கைப் பட்டாளத்தின் "சிங்க" பிரிவினரைச் சேர்ந்த, காக்கி உடுத்த ஒரு சிலர், தீ வைத்துக் கொளுத்துவதை நான் கண்டேன். அந்நெருப்பைத் தோட்டக்காரன் தணிக்க முயன்றதையும் அவர்கள் தடுத்தார்கள்.

பட்டாளம் அல்லது கடற்படையைச் சேர்ந்த வீரர்களால் தாக்கப்பட்டுக் காயமடைந்த தமிழரை நான் ஆஸ்பத்திரியில் கண்டேன்.

தனிப்பட்ட வீடுகள், ஹோட்டல்களின் ஜன்னல்கள் உடைத்து, நொறுக்கப்பட்டிருப்பதையும் நான் கண்டேன். நான் தங்கியிருந்த ஹோட்டலும் இவ்விதம் பாதிக்கப்பட்டதே. மாலை தொடக்கம் காலை வரை வைக்கப்பட்டிருந்த ஊரடங்குச் சட்ட நேரத்தின் போது சென்று கொண்டிருந்த பட்டாள ஊர்திகளினின்றும்தான், இக் கட்டடங்களின் மீது கற்கள் வீசப்பட்டன.

வயது சென்ற கடைக்காரரின் படுக்கையறைக்குள் துப்பாக்கிச் சூடு வீழ்ந்த போது எடுக்கப்பட்ட .303 ரவ்வையையும் நான் கண்டேன். அத்துடன், பட்டாளத்தினர் மாத்திரம் நடமாடக்கூடிய இரவு நேரங்களில் தங்கள் உடைமைகள், இருப்பிடங்கள் கொள்ளையடிக்கப்பட்டன என்று பலர் எனக்குப் புகார் செய்திருக்கின்றனர்.

ஒரு உயர்தர தமிழ் உத்தியோகத்தர் கூறினார்: "இதிலும் பார்க்க கியூபா, கொங்கோ அல்லது அல்ஜீரியாவில் நிலைமை மோசமாக இருக்கலாம். ஆனால், இது எங்களுக்கு நடக்கிறது, ஆகவே, நாம் பயப்படுகிறோம்" என்று—.

தனது காரிலுள்ள தமிழ் 'சிறி'யை பட்டாள வீரர் தமது துப்பாக்கி முனை கொண்டு சிராய்த்து அகற்றியதாக வியாபாரி ஒருவர் என்னிடம் கூறினார். இப்படிப்பட்ட சிறுபிள்ளைத்தனமான செயலொன்று தான், பட்டாள 'ஜீப்' ஒன்றை வழிமறித்து, அதன் சாரதியைத் தமிழர் ஒருவர் சுட்டு வீழ்த்தக் காரணமாக அமைந்ததென்றும், அதுதான் முதலாவதாக நடைபெற்ற தமிழரின் பழிக்குப் பழி வாங்கும் கொலை என்றும் மேலும் அவர் என்னிடம் தெரிவித்தார்.

பள்ளிக்கூட உபாத்தியாயர் வீட்டு வேலி ஒன்றை எரித்த படைவீரர், என்னுடைய வருகையைக் கண்டதும், குறும்புக்காரக் குழந்தைப் பிள்ளைகள் மாதிரிப் பதுங்கி ஓடுவதைப் பார்த்தேன். இந்தப் பக்கங்களில் 'வெள்ளை' முகம் மிகவும் அரிதானதொன்று.

திரும்பவும், திரும்பவும் தமிழர் தமது நிலைமையை வெள்ளைக்காரரின் ஆட்சிக்குக் கீழிருந்த நிலைமையுடன் ஒப்பிட்டு, என்னுடன் பேசினார்கள். பெட்ரோல் நிலைய சொந்தக்காரர் ஒருவர், "பிரிட்டிஷாராகிய நீங்கள் இங்கு இருந்தபோது, சட்டத்தின் கண்ணில் எல்லோரும் சமமென்று மக்கள் உணர்ந்தனர்" என்று என்னிடம் கூறினார்.

(15-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் குரல்

### மலைநாட்டில் தமிழரசுக்கிளை அவசியம்

எங்களைப் போன்ற தமிழர்களது உரிமைகளைப் பெறுவதற்காகவும் மலை நாட்டுத் தொழிலாளர்களது பிரஜா உரிமைப் பிரச்சினைக்கும், மலைநாட்டான், யாழ்ப்பாணத்தான், மட்டக்களப்பான், கள்ளத்தோணியான் என்ற பாகுபாடு இல்லாமல் நாம் தமிழர் என்ற தன்மானத்துடன் வாழத்தான் தமிழரசுக்கட்சி மலைநாட்டில் நுழைகின்றது. இதைத் தமிழன் என்ற முறையில் ஒவ்வொரு மலைநாட்டுத் தமிழனும் வரவேற்கத்தான் செய்வான்.

நாங்கள் எதிர்பார்த்த நாள் வந்து விட்டது. அந்த நாள் தான் எங்களது பொன்னான நாள். அதுவே மன்னாரில் நடைபெற்ற தமிழரக் கட்சியின் மகாநாடு தந்த முடிவு. 'இடை இடையே பலகாரணங்களுக்காகத் தமிழரசு மலைநாட்டுத்தமிழரைப் பற்றிக் கனவில் கூடக்கருதவில்லை' என்று ஒரு அன்பர் வீரகேசரி மக்கள் மன்றம் மூலமாக எழுதியிருந்தார். இதை அவர் எப்படி அறிந்து கொண்டாரோ? கனவில் கண்டாரோ, என்னவோ?

சிறி லங்கா சுதந்திரக் கட்சி வட, கிழக்கு மாகாணங்களில் தங்களது கட்சிக் கிளைகளை நிறுவத் தீர்மானித்த பொழுது தன்மானமுள்ள தமிழர் எவராவது மக்கள் மன்ற மூலமாக எதுவித எதிர்ப்பு அறிக்கையும் எழுதவில்லையே ஏன்?

தமிழரசுக் கட்சி மலைநாட்டில் கிளைகளை நிறுவி முன்னேறி, அடுத்து வரும் பொதுத் தேர்தலில் நுவரெலியா, அப்புத்தளை, மஸ்கெலியா போன்ற பாராளுமன்ற ஆசனங்களுக்குப் போட்டியிட வேண்டுமென்பதே எங்களது அவா!

மலைநாட்டுத் தொழிலாளர்களைத் தமிழரசு அணியிற் திரட்ட வேண்டுமென்பது மகாநாட்டின் முடிவு. இத்தீர்மானத்தை மலைநாட்டுத் தமிழர் அத்தனைபேரும் வரவேற்கின்றோம்.

கே. சண்முகம்,
எம். ராஜா,
பொ. ஆறுமுகம்.

சமுத்திரவள்ளி,
நாகசேனை.


### ஒன்றுபடுவோம்

அடிமைகளாய், அனாதைகளாய், நில, குடி, மொழி உரிமைகளற்று நடைப்பிணமாக வாழும் தமிழ் பேசும் பெருங்குடி மக்களுக்கு விடிவு காலம் வெகு தூரத்திலில்லை என்பதற்கு அறிகுறிகள் தோன்றுகின்றன. இக் கட்டத்தில் தான் வெகு சாவதானமாகச் செயலாற்ற வேண்டும் தமிழ் மக்கள்.

மாறுபட்ட மனக்கருத்துக்களையும் உதறிவிட்டு, நமது உரிமைகளுக்காகப் போராடும் ஒன்றுபட்ட உணர்ச்சியை உருவாக்க வேண்டும்.

இதுநாள்வரைக்கும் மலைநாட்டுத் தமிழ் மக்களின் வாழ்வில் அக்கறை காட்டிய

(13-ம் பக்கம் பார்க்க)



## 'சொல்லுவதெல்லாம் சோதிடமா? சொல்பவரெல்லாம் சோதிடரா?'

### திருமலை பாராட்டு விழாவில் மட்டுநகர் முதல் எம். பி.

"சோதிடக் கலைஞர் க. வேலுப்பிள்ளை அவர்கள் எனது பால்ய நண்பர். அவரது திறமையை நன்கு உணர்ந்தவன் நான். எனவேதான் அன்னாருக்கு இந்தப் பாராட்டுமடல் அளிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். சொல்லுவதெல்லாம் சோதிடமாகிவிட முடியாது, சொல்லுபவர்கள் அனைவரும் சோதிடர்களாகி விடவும் முடியாது. உண்மையைக்கூற வேண்டுமானால், சோதிடவானில் நண்பர் வேலுப்பிள்ளை அவர்கள் ஒரு துருவ நட்சத்திரமாவார்கள். இன்று, நேற்று ஏற்பட்டதல்ல சோதிடக்கலை, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அது உதயமாகியது. அக்கலையைப் போற்றி வளாத்ததினால் தான் இன்றும் நாம் சோதிடக்கலையில் கணித மேதைகளாக வாழ்கிறோம். சோதிடக்கலையை நாங்கள் விஞ்ஞான ரீதியாகப்பார்க்க வேண்டும். நண்பர் சோதிடர் அவர்கள் அந்தக் கண்ணோட்டத்துடன்தான் செயலாற்றி வருகிறார். எனவேதான் அவரைப்பாராட்டும் விழாவில் கலந்துகொள்ள நேர்ந்தது. சோதிடக்கலைஞர் மிகவும் தமிழார்வம் படைத்தவரும் கூட. கடந்த சத்தியாக்கிரகத்தின் போது, அவர் திருமலையில் எடுத்துக் கொண்ட பங்கை மற்றவர்கள் இயம்பக்கேட்டு பெருமகிழ்ச்சியடைந்தேன். அவர் இன்னும் பல்லாண்டு காலம் உடல் நலத்துடன் வாழ்ந்து, பயன் தரும் சேவை செய்யவேண்டுமென்று மொழிகள்குல முதல்வியாம் முத்தமிழ் அன்னையை வேண்டுகிறேன்" என்று திருமலையில் சோதிடக்கலைஞர் க. வேலுப்பிள்ளை அவர்களுக்கு நடந்த பாராட்டு விழாவில் பேசும் போது, மட்டுநகர் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் செ. இராசதுரை அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த விழாவுக்கு டாக்டர் க. சு. சித்திரவேலு அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

சோதிடக்கலைஞர் நன்றி தெரிவித்துப் பேசுகையில், "சோதிடக்கலை முக்காலக் கண்ணாடியாகும். இடையில் ஒரு சிலர் அதைத் தவறான வழியில் பயன்படுத்தினாலும் அக்கலையை எவராலும் அழிக்க முடியவில்லை. தொற்றுநோய், கடலரிப்பு; புயல்காற்றுப் போன்ற இயற்கையின் சோதனைகள் இன்னும் 2½ வருடகாலம் நீடிக்கலாம். இது குறித்து அரசினர் அவசியம் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நமது நாட்டைப்பொறுத்த வரையில், நாங்கள் அதிகம் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை. என்றாலும் எங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதில் நாங்கள் சிறிது சிரத்தை எடுக்கவேண்டும்" என்று குறிப்பிட்டார்.

கலப்பற்ற உயர்தர அலுமினியம்
மங்காத பிரகாசம்
நீடிய உழைப்பு
இவைகளுக்கு
ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND
டொலர்
அலுமினியப் பாத்திரங்கள்
டொலர் கோப்ரேசன்,
14, டாம் வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 செப்டெம்பர் மாதம் 23-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183

# மலையகத்துக்கொரு பாலமமைப்போம்!

தமிழ் பேசும் மக்களை ஒரே அணியிற் திரட்டுவோம் என்று தமிழரசார் மன்னாரில் கூடி முடிவெடுத்தனர். வட, கீழ் இலங்கைக்கும் மலையகத்துக்குமிடையே ஒரு பாலம் அமைப்போம் என்று முழங்கினர்.

இதைக் கேட்டதும் இடியோசை கேட்ட நாகம் போலாகிவிட்டனர் சிலர். அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு, ஆபத்துவந்துவிட்டதென அலறல், தொல்லை ஏற்படுமென எச்சரிக்கை, தொலைத்துவிடுவோமென மிரட்டல், புனராலோசனை செய்க என புத்திமதி--அத்தோடு சில பத்திரிகைகளும் அபாயச் சங்கு ஊதின.

என்றும் தமிழரசுக் கட்சியைத் தாக்கிவந்தவர்கள், கட்சி மீது அடக்குமுறையை ஏவினவர்கள், கட்சித் தலைவர்களைத் தூற்றினவர்கள், கட்சிக்கொள்கையை திரித்துக் கூறினவர்கள்- இவர்கள்தான் இன்று எச்சரிக்கிறார்கள், மிரட்டுகிறார்கள், புத்திமதி கூறுகிறார்கள். அபாயக் குரல் எழுப்பும் பத்திரிகைகளும் எமது உரிமைகளை எதிர்த்து வந்தவைகளே.

தமிழரசாருடன் மலையகத்தார் சேர்ந்தால் வான் இடிந்து விழுந்துவிடுமா? பூகம்பம் ஏற்படுமா? இன்றேல் கடல் பொங்கி ஈழத்தை விழுங்கிவிடுமா?

வட, கீழ் இலங்கை மக்களுடன் மலைநாட்டுத் தமிழர்கள் சேர்ந்தால் என்ன? இரு பகுதியினரும் ஓர் இனத்தவர் தானே! இதற்கு ஏன் இந்தப் பரபரப்பு?

**தோட்டத் தமிழர்களின் உரிமைகளைப் பறித்தாயிற்று; உழைப்பையும் உறிஞ்சலாயிற்று. அடுத்து, சக்கையைத் தூக்கி தெருவில் எறியவேண்டியதுதான் பாக்கி. இந்நிலையில் கட்சி மலைநாட்டில் நுழைந்தால், இனம் ஒன்றுபடும்-பலம் பன்மடங்கு பெருகும். சிங்கள வகுப்புவாதத்திட்டங்கள் தவிடுபொடியாகும். உரிமை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.**

இதற்குத்தான் அஞ்சுகிறார் பிரதமர். "கட்சியின் நடவடிக்கைகளை வட, கீழ் மாகாணங்களில் மட்டும் வைத்துக் கொள்ள வேண்டும்" என்று அவர் கூறுகிறார். இவ்வாறு அவ்விரு பிரதேசங்களின் தனித்துவத்தை தன்னையறியாமலே பிரதமர் ஒப்புக்கொண்டுள்ளார். அவர் பேசசின் கருத்தைச் சரியாகச் சுட்டிக்காட்டினார் தமிழரசுத் தந்தை. விழித்துக் கொண்ட பிரதமர் "ஐயோ! அப்படி நான் சொல்லவில்லையே!" என்று இப்பொழுது மழுப்புகிறார்.

"மலை நாட்டில் கட்சி வகுப்புவாதத்தைக் கிளறினால் நிலைமை மோசமாகும்" என்று எச்சரிக்கிறார் பிரதமர். தமிழரசுக் கட்சி அதை என்றுமே செய்யாது. அது வகுப்பு வாதக் கட்சியன்று அதன் கொள்கையில் வகுப்புவாதம் கிடையாது. தமிழரசார் வகுப்புவாதத்தின் வைரிகள்.

வகுப்புவாதத்தை வளர்ப்பவர்கள் பிரதமரின் கட்சியினர்தான். திரு. ராஜரத்னா கும்பல் மலைநாட்டுச் சிங்களவரிடையே வகுப்பு வாதத்தைப் பரப்புகிறதே! அதனால் நிலைமை மோசமாகவில்லையா? அது பற்றி பிரதமர் மூச்சுக் கூடவிடுவதில்லையே!

"கட்சியின் மலைநாட்டுப் பிரவேசம் தொல்லைகளை ஏற்படுத்தும். அரசாங்கம் அசனைக் கவனித்துக் கொள்ளும்" என்றும் பிரதமர் மிரட்டுகிறார். அந்தத் தொல்லைகள் யாவை? அரசாங்கம் என்ன செய்யப் போகிறது?

மலைநாட்டுச் சிங்களவர்களைத் தூண்டிவிடலாமென்ற எண்ணமா? அரசாங்கம் அந்த முயற்சியை உடனடியாகத் தடுத்துவிட வேண்டும். அடக்குமுறையை அள்ளி வீசலாமென்ற எண்ணமா? அரசாங்கம் அந்த எண்ணத்தை உடனடியாகக் கைவிடவேண்டும்.

மலை நாட்டில் கால் வைக்க இப்பொழுது என்ன அவசரம் வந்துவிட்டது என்று சிலர் கேடகின்றனர். அவசரத்துக்கான இரு காரணங்களை எடுத்துக்காட்டுகிறார் தமிழரசுத் தந்தை. ஒன்று தோட்டத் தமிழர்களின் வேலை உரிமையைப் பறிக்கும் மசோதா - மற்றொன்று, அவர்களின் பிள்ளைகளின் கல்வி உரிமையைப் பறிக்கும் முயற்சி.

மலையகம் வாழ் தமிழ்மக்கள் இலங்கைப் பிரஜைகளே. இதில் கட்சிக்கு இம்மிகூட ஐயமில்லை. அவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டது. வாக்குரிமை பிடுங்கப்பட்டது. மொழியுரிமை நசுக்கப்பட்டது. இறுதியாக கல்வியுரிமைக்கும் வேலை உரிமைக்கும் ஆபத்து வந்துவிட்டது. ஆகையால் தான் அவர்களுக்குக் கைகொடுத்துதவ கட்சி விரைகிறது. இது தவிர்க்கமுடியாத கடமை.

வேலை உரிமை பறிபோனதும் இலட்சக்கணக்கான தமிழர்கள் தெருக்களிலே பசிபட்டினியால் வாடி வதங்குவார்கள். அப்பொழுது அரசாங்கம் அவர்களிடம் கேட்கும், "பசியாற் சாகப்போகிறாயா? அல்லது இந்தியாவுக்கு ஓடிப் போகிறாயா?" என்று.

**பட்டினி போட்டு குற்றுயிராக்கிவிட்டால், வேறுவழியின்றி இந்தியாவுக்கு ஓடுவார்கள் - இதுதான், வேலை உரிமையைப் பறிப்பதின் நோக்கம்.**

**இந்நிலை ஏற்படுவதைக் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பது மன்னிக்கமுடியாத மாபாதகம்--இனத்துரோகம்! இனத்தின் சரிபாதி அழிக்கப்படும்போது ஒதுங்கி நிற்பதா?**

இந்த ஆபத்தை தடுத்து நிறுத்தவேண்டும். அதற்காகவே தமிழரசார் மலைநாடு செல்கின்றனர். இந்நாட்டில் தமிழ்பேசும் மக்கள் இருக்கும் இடங்களிலெல்லாம் தமிழரசுக் கட்சியும் இருக்கும். அதைத் தடுக்க இவர்கள் யார்?

மலைநாட்டுத் தமிழ் மக்கள் ஒரு மாபெரும் சக்தி. தமிழரசு இயக்கமும் ஓர் இணையற்ற சக்தி. இரு சக்திகளும் இணைந்துவிட்டால் தமிழ்பேசும் இனத்தின் விடுதலை எட்டிய தூரத்திற்கு வந்துவிடும்.

# தி. மு. க. கல்லோயாவுக்கு கண்ணடிக்கிறதாம்

## அரசாங்கக் காணிகளில் தமிழர்களைக் குடியேற்ற நூட்சமத் திட்டமாம்

கல்-ஓயா சபைக்குரிய காணிகளைச் சாத்தியமான அளவு தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்து அங்கே "திராவிட முன்னேற்றக் கழகத்தைச சேர்ந்தவர்களைக் குடியேற்றும் ஓர் இரகசிய நடவடிக்கை வெளியாகியுள்ளது" என்று "தவஸ" என்னும் பிரபல சிங்களத் தினசரி இம் மாதம் 15ந் தேதி இதழில் "தி. மு. க. கல்-ஓயாவுக்குக் கண்ணடிக்கிறது" என்றமகுடமிட்டுஎழுதியுள்ளது.

தவஸ பத்திரிகை மேலும் எழுதுவதாவது:-

"கல்லோயா பிரதேசம் முழுவதையும் "தி. மு. க." ஸ்தாபனத்தின்கீழ் கொண்டு வந்து அங்கே தி. மு க. குடியேற்றத் திட்டமொன்றை நிறுவ தடை செய்யப்பட்ட தி. மு. க. இப்பொழுது நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாட்டின் மத்திய பகுதியிலுள்ள அரசாங்கக் காணிகளில் ஒரு சூட்சம திட்டத்தின் மூலம் தமிழ் மக்களைக் குடியேற்ற முயற்சி செய்யப்படுகிறதென்பதையும், திருகோணமலை, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலுள்ள அரசாங்க காணிகளில் எப்படியாவது குடியேறும்படி தமிழ்பேசும் மக்களைத் தூண்டுவதென தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ள தென்பதையும் "ரிவிதின" (ஞாயிறு) பத்திரிகை ஏற்கனவே அம்பலப்படுத்தியுள்ளது.

தி மு க. தடைசெய்யப்பட்ட பின்னர், தமிழ்பேசும் மக்கள் ஆரம்பித்துள்ள இதர சங்கங்களையும் ஸ்தாபனங்களையும் கூடியளவு ஒன்றாக இணைப்பதற்கும், அவற்றின் உதவியுடன், வெவ்வேறு பிராந்தியங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களை ஒரே ஸ்தாபனத்தின் கீழ் திரட்டுவதற்கும், குடியேற்றத் திட்டங்களில் காணிகளைச் சாத்தியமான அளவு தமிழ்பேசும் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கும் இப்பொழுது இரகசிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

குறிப்பாக கல்லோயா அபிவிருத்தி சபையால் "நாமல் ஓயா" சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவிருக்கும் குடியேற்றத் திட்டத்தின் காணிகளை மட்டக்களப்புத் தொகுதி போன்ற தொகுதிகளைச் சேர்ந்த தமிழ் பேசும் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### அமரர் வன்னியசிங்கம் பிறந்த கிராமத்தில் நினைவு விழா

அமரர் வன்னியசிங்கம் பிறந்த கிராமமான கொல்லங்கலட்டியில் 22ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவுநாள் கூட்டம் நடைபெற விருக்கிறது. மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலையத்தின் ஆதரவில் இவ்விழா நடைபெறவிருப்பதாகத் தெரிகிறது. அங்குள்ள பிள்ளையார் கோயில் வீதியில் நடாத்தப்படவிருக்கும் இவ்விழாவில் மட்டக்களப்பைச் சேர்ந்த நகைச்சுவைக் குமரன் மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் "அமரர் வன்னியசிங்கம்" வில்லுப்பாட்டு நிகழ்ச்சியும் இடம்பெறவுள்ளதாம்.

# இந்தியக்கலை பயிலவும் சிங்களம் வேண்டுமா?

## கலாச்சார மந்திரியிடம் டாக்டர் நாகநாதன் கேள்வி

கொழும்புத் திட்டத்தின் கீழ் இலங்கை மாணவர்கள் இந்தியாவில் கலை கலாச்சாரத் துறையில் பயிற்சிபெறுவதற்கான உபகாரச் சம்பளம் வழங்க இந்திய அரசாங்கம் முன்வந்துள்ளது உபகாரச் சம்பளச் சலுகை விரும்புபவர்கள் சிங்களத்தில் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சை சித்தியடைய வேண்டுமென்று ஒரு புது விதியை இலங்கை அரசாங்கம் புகுத்தியுள்ளது.

இந்த முறையற்ற செயலை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சியின் பொதுக் காரியதரிசியும், நல்லூர் பாராளுமன்ற உறுப்பினருமான டாக்டர் நாகநாதன், கைத்தொழில் கலாசார விவகார அமைச்சருக்கும், கலாச்சார விவகார இலாகா அதிபருக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார்.

இந்திய நடனங்கள் போன்ற கலைகளைப்பயிலுவதற்கு எந்த வகையிலும் சிங்களம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமில்லை. சிங்களப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டுமெனக் கோருவது அரசாங்கத்தின் கொள்கைகளுக்கே முரணானதாகும், உபகாரச் சம்பளம் வழங்கும் அரசாங்கத்தின் கொள்கைளுக்கும் ஏற்காது என்றும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நடனங்கள் பயிலுவதற்கு சிங்களப் அவசியமில்லை என்பதை இந்திய அரசாங்க அதிகாரிகளே ஒப்புக் கொண்டுள்ளனராம், இதுபோன்ற அவசியமற்ற பாகுபாடுகாட்டும் விதிகளை விதிக்காதிருக்கும்படி மந்திரியை டாகடர் நாகநாதன் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### வட, கிழக்கு இலங்கை தமிழரசுக் கட்சிக்கா?

"தமிழரசுக் கட்சி தன் நடவடிக்கைகளை வட, கீழ் மாகாணங்களில் மட்டும் வைத்துக் கொள்ளட்டும்" என்று பிரதமர் திருமதி சிறிமாவோ கூறியுள்ளார். பிரதமர் பேச்சைக்கேட்டு முழு நாடும், மக்கள் அனைவரும் பெரிதும் ஆச்சரியமடைந்துள்ளனர்" என்று "சியரட்ட" யு. என். பி. கட்சியின் சிங்களப் பத்திரிகை (14-9-62) எழுதியுள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"அரசாங்கத்தின் தலைவி என்ற முறையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சிக்கு இந்த வேண்டுகோளை விடுத்திருப்பதின் காரணம் இவ்விரு மாகாணங்களும் அவருடைய அரசாங்க நிர்வாகத்திலிருந்து பிரிந்து விட்டது தானா, என்று அவர்கள் கேட்கின்றனர்.

1960 ஜூலை தேர்தல் சமயத்தில் திரு. டட்லி சேனநாயக்கா கூறியது இதன் மூலம் நிருபணமாகிறது."

# அரசினர் துரோக வரலாற்றில் இன்னுமோர் அத்தியாயமா?

## அரசாங்க ஊழியர் பதவி உயர்வுக்கான தேர்வுகள் பற்றி திரு. எஸ். ஜே. வி.

பதவி உயர்வு பெறுவதற்கு அரசாங்க ஊழியர்கள் சிங்களத்தில் என்ன தராதரம் பெற்று இருக்க வேண்டும் என்பதை முடிவு செய்வதற்குத் திறைசேரி, பரீட்சைக் கமிஷனரைக் கேட்டுள்ளது. இச்செய்தி 5-9-62-ந் தேதி "டெயிலி மிரர்" பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது.

இதுபற்றி திரு. செல்வநாயகம் நிதிமந்திரிக்கு ஒரு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

"மேற் குறிப்பிட்ட செய்தி உண்மையெனில், இந்த அரசாங்கம் ஈழத் தமிழ்பேசும் மக்களுக்குச் செய்த நம்பிக்கைத்துரோக வரலாற்றுக்கு மேலும் ஒரு அத்தியாயத்தைச் சேர்க்க எண்ணியுள்ளது போலும்" என்று அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

"முன்னர் சேவையில் சேர்ந்த தமிழ் ஊழியர்கள் அரசாங்கத்துடன் செய்து [illegible] ரநாயக்கா கொடுத்த வாக்குறுதியையும் ஒருமித்து மீறி சிங்களத் தகுதி காண் பரீட்சை சித்தியடையாதவர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதை அரசாங்கம் நிறுத்திவைத்துள்ளது"

"இப்பொழுது பதவி உயர்வுகளை மறுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைக் கையாளுகிறார்கள்.

மொழிப் பிரச்சினைக்கு முழுப் பரிகாரம் காணுதவரையில், இத்தகைய அசம்பாவிதங்கள் அன்றாட நிகழ்ச்சிகளாக இருக்கும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இத்தகைய நடவடிக்கைகளை ஆட்சேபித்து, அவைகளுக்குப் பரிகாரம் காண வேண்டியது எனது கடமை. தமிழ் பேசும் முன்னைய அரசாங்க ஊழியர்கள் இரண்டாவது பருவத்திற்கான பதவி ஏற்றத் தேர்வுகளை, எந்தவிதமான ஒதுக்குதலுமின்றி வழமையான முறைகளின்படி நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்," என்று திரு. செல்வநாயகம் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரிசபை அமைப்பில் மாற்றம்

## கடும் நெருக்கடி உருவாகினால்

### அரசாங்கத்துக்கே உலை வைக்கலாம்

செனட் சபையில் பட்ஜெட் விவாதம் முடிவடைந்ததும் மந்திரிசபை மாற்றி அமைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. மந்திரி சபை அமைப்பில் ஒரு கடுமையான நெருக்கடியே உருவாகுமென்றும் அரசாங்கத்துக்கு உலை வைக்கக் கூடுமென்றும் விஷயம் தெரிந்த வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

புதிய மந்திரி சபையில் அதிகாரம் முழுவதையும் கைப்பற்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் கோஷ்டி பெரு முயற்சி செய்கிறதாம். இதற்கான யோசனைகளையும் திட்டங்களையும் திரு. பிலிப் குணவர்தனு திரு. பீலிக்சுக்கு கொடுத்துதவுகிறாரென்றும் கூறப்படுகிறது.

திரு. பிலிப்-பீலிக்ஸ் நட்பு வெகு தூரம் வளர்ந்துள்ளதாம்.

திரு. ஸி. பி. டி சில்வா கோஷ்டியின் கை புது மந்திரி சபையில் ஓங்கி நிற்காத பட்சத்தில் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கும் மந்திரி சபையில் இடம்கிடைக்கலாமென்று எம். ஈ. பி. வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது.

திரு.பீலிக்ஸ் மீண்டும் நிதி மந்திரி, உதவிப் பிரதமர் பதவியைப் பெறலாமென்றும் திரு. ஸி. பி. டி சில்வா பட்ஜெட் பற்றுக்குறையைச் சரி செய்ய அரிசி வெட்டை தவிர வேறு வழியைக் கண்டு பிடிக்கத் தவறி விட்டாரென்றால், திரு. பீலிக்ஸ் நிச்சயம் நிதி மந்திரியாகி அரிசி வெட்டை அமுல் நடத்துவாரென்றும் நம்பப்படுகிறது.

இதற்கு இடமளிக்காத முறையில திரு. ஸி. பி. டி சில்வா பட்ஜெட் பற்றுக்குறையை நிரப்ப தனது பழைய திட்டத்துக்கு புதுமெருகு கொடுத்து பிரதம மந்திரியிடம் அதனைச் சமர்ப்பித்திருக்கிறாராம்.

இத் திட்டத்தின் முக்கிய அம்சம் விவசாயிகள் தாங்கள் அரசாங்கத்திற்கு விற்கும் ஒவ்வொரு நெல் புசலுக்கும் அரிசிரேஷன் கூப்பன் இரண்டை அரசாங்கத்துக்குக் கொடுத்துவிடுவதுதான்.

இத் திட்டம் அவர் முதலில் மந்திரிசபைக்குச்சமர்ப்பிக்கப்பட்ட திட்டமெனினும், இப்பொழுது அதில் பெருமளவு திருத்தங்கள் செய்திருக்கிறாரென்று கூறப்படுகிறது.

அந்தத் திட்டத்தை எப்படியெல்லாம் அமுல் நடத்த வேண்டுமென்பதையும் அவர் பிரதமருக்குத் தெரிவித்திருக்கிறாராம். அரிசி வெட்டுக்குப் பதிலாக திரு. சில்வா பழைய திட்டத்தைச் சீர்திருத்தி யிருக்கிறாரேயன்றி, ஒரு புதிய திட்டத்தை இதுவரை அவரால் கண்டுபிடிக்க முடியவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தைப் பிரதமர் விரைவில் மந்திரி சபையில் சமர்ப்பிப்பார் என்று அறியப்படுகிறது.

இதனை மந்திரிசபை அங்கீகரிக்கும் பட்சத்தில், திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுக்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்படும். ஏனெனில் அவர் இத்திட்டத்தை ஆதரித்தாலன்றி பிறகு மந்திரி சபையில் மீண்டும் சேர முடியாத நிலைமை ஏற்படும்.

இதில் மற்றொரு சிக்கலும் அடங்கியுள்ளது.

திரு. பீலிக்ஸுடன் கலந்தாலோசிக்காமல் பிரதமர் திரு. சில்வாவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டால் திரு. பீலிக்ஸ் மீண்டும் மந்திரி சபையில் சேரக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாது போய்விடும்.

இன்று நிலைமை நீறு பூத்த நெருப்புதான். புதிய மந்திரி சபை அமைப்பின்போது ஒரு பெரிய நெருக்கடியை எதிர்பார்க்கலாம்.

## பிரதமருக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கு, கிழக்கு மாகாணங்களை தனித்துவமான பகுதியாகவோ பிரதேசமாகவோ பிரதமர் அங்கீகரித்துள்ளார் என்று நான் கூறியது முற்றிலும் உண்மையே.

வடக்கிலும், கிழக்கிலும் எமது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்படி கூறுவது வேறு எதைத்தான் குறிப்பிட முடியும்? அண்மையில் நான் அவருக்கு நன்றி தெரிவித்து விடுத்த அறிக்கையை திரும்பப் பெறப் போவதில்லை.

சமஷ்டி என்பது நாட்டினைப் பிரிப்பதாகும் என்று பிரதமர் கூறுகிறார். நாட்டைப் பிரிக்காதிருக்க அவருடன் நாங்களும் ஒப்புக்கொவளுகிறோம். சமஷ்டி அமைப்புத் திட்டம் என்பது நாட்டினைப் பிரிப்பதல்ல என்பதை ஒரு நாட்டின் பிரதம மந்திரி அறியாதிருக்க முடியாது. அமெரிக்க சமஷ்டி 49 அரசுகளாகப் பிரிந்திருக்கவில்லை. அவை அனைத்தும் கூட்டாட்சியின் தன்மையில் ஒரு தேசமாக இணைக்கப்பட்டுள்ளன. அதேபோல் சமஷ்டி இலங்கையும், இலங்கையை எந்த வகையிலும் நாட்டைப் பிளவு படுத்தாது.

மத்திய மாகாணத்தில் நாங்கள் செயலாற்றுவதையிட்டுப் பிரதம மந்திரி ஏன் தொல்லைப்பட வேண்டும்? அகிம்சையையே போதித்து அதன்படியே எமது போராட்டங்களையும் வகுப்பவர்கள் நாங்கள். கடந்த வருடம் நாங்கள் வட கிழக்கில் இரண்டு மாதங்கள் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு சிறு ஈ தானும் இம்சிக்கப்படவில்லை. மத்திய மாகாணத்தில் செல்வதானாலும் அகிம்சை என்னும் ஆயுதம் ஏந்தியே செல்லுவோம். மலைநாட்டுத் தமிழ் மக்களுடன் ஒன்று சேர்ந்து, அவர்களுக்கு அரசாங்கம் இழைத்த அநீதிகளை எதிர்ப்போம்.

அம்மக்களின் குடியுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டதுடன், கல்வித் துறையிலும் அவர்களுக்கெதிராகப் பாகுபாடு காட்டப்பட்டு வருகிறது. அவர்களின் குழந்தைகள் ஐந்தாம் வகுப்பு வரை மட்டும், 'தோட்டப் பள்ளிக்கூடங்கள்' என அழைக்கப்படும் பள்ளிக்கூடங்களில் படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். தோட்டங்களுக்கு அருகாமையில் உள்ள நகரப் பள்ளிக்கூடங்களுக்கு இப் பிள்ளைகள் அனுமதிக்கப்படுவதில்லை. இவர்களை அனுமதிக்கும் பள்ளிக்கூடங்களில் கூட, அப் பள்ளிக்கூடங்கள் தமிழ் அல்லது முஸ்லிம் பள்ளிக்கூடங்களா என்பதை அறியும் பொருட்டு எடுக்கப்படும் கணக்கில், இவர்கள் கணிக்கப்படுவதில்லை.

வெலிமடையில் 375 தமிழ் மாணவர்களையும், 250 முஸ்லிம் மாணவர்களையும் கொண்ட பள்ளிக்கூடம் ஒன்று இருந்தது. ஆனால் இப் பள்ளிக்கூடத்தை முஸ்லிம் பள்ளிக்கூடமாக மாற்றியிருக்கின்றனர், ஏனெனில் 375 தமிழ் மாணவர்களில் அநேகர் 'நாடற்றவர்' களின் பிள்ளைகள் என்ற படியினால்.

இம் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை அகற்றப் பிரதமர் ஏன் முயற்சி எடுக்கவில்லை? இவர்களின் குறைகளை நீங்கள் நீக்கினால், அவர்களின் பாதுகாப்புக்குச் செல்லவோ அல்லது அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துரைக்கவோ, தமிழரசுக் கட்சிக்கோ, அல்லது வேறு யாருக்கென்றாலோ தேவை எதுவும் இருக்காது.

## சந்திக்கு வந்தவை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சாங்கத்தின் சதித்திட்டங்களுக்குள்—ஆசை வலைக்குள் விழுந்து விட்டு இனத்தைக் காட்டிக்கொடுக்க முனையும் பதவிப்பித்தர்களின் பட்டியல் பெரிதாகும் என்பதில் ஐயமில்லை.

அறிவில்லாமல் வெறும் அத்தாட்சிப்பத்திரம் பெற்றுவிட முனையும் உங்கள் முன்னே, சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு அம்மொழியிலே பாண்டித்தியமடைந்து வேலையின்றி வரிசையில் நிற்கும் • சிங்களவர்களை ஏறிட்டுப் பாருங்கள். அவன் படிக்கிறான், இவன் படிக்கிறான், நான் மட்டும் படித்தால் என்ன? என்று கூறுகின்றீர்களே! நீங்கள் எல்லோரும் படித்தாலும் ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் செய்யும் துரோகச் செயலுக்காகப் பச்சாதாபப்படத்தான் போகின்றீர்கள். எத்தனை படித்தாலும், பட்டம் பெற்றாலும், பௌத்த சிங்களவருக்கு மட்டும்தான் இனி மேல் சகல சலுகைகளும். ஆகவே, சிங்களம் படித்துப் பதவியைப் பாதுகாக்க முனையும் நீங்கள் உங்கள் இனத்தை மறந்து விடுங்கள், உற்றாரை மறந்து விடுங்கள், உறவினரை மறந்து விடுங்கள்—ஏன் பெற்றோரையும் மறந்துவிடுங்கள்; நீங்கள் வணங்கும் தெய்வங்களையும் மறந்து விடுங்கள். அருணாசலம் அப்புகாமியாகட்டும் பொன்னம்பலம் புஞ்சிபண்டாவாகட்டும்..........

## பயிற்றப்பட்ட...


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிப்பதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கிறது என்பதை அறியவிரும்புவதாகவும் திரு. செல்வநாயகம் கல்விமந்திரிக்கு எழுதிய கடிதத்தில் கோரியுள்ளார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த பயிற்றப்பட்ட வேலையற்ற ஆசிரியர்கள், தங்கள் நலன்களை உத்தேசித்து ஓர் சங்கத்தை நிறுவினர். சங்க உறுப்பினர்களும், உத்தியோகத்தர்களும் பல முறை கொழும்பு சென்று அதிகாரிகளையும் கல்வி மந்திரியையும் பேட்டி கண்டும் இதுவரை அவர்களுக்கு நல்ல முடிவு எதுவும் கிடைக்கவில்லை. பேட்டிக்கென அழைக்கப்பட்டும் பேட்டி கிடைக்காமல் ஏமாற்றமடைய வேண்டிய சந்தர்ப்பங்கள் பல தடவைகளில் ஏற்பட்டதாகவும், அதனால் எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்க நேர்ந்ததாகவும் சங்கச் செயலாளர் நமது நிருபரிடம் கூறினார்.




சி. சி. பி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,
பசளைப்பகுதி.
அக்லண்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு- 2. போன்: 7935.



சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி ஸ்பெஷல்
காரம், மணம், குணம் நிறைந்தது.
புகைப்போருக்கு புத்துணர்ச்சியை ஊட்டும்.
யானை பீடி கம்பனி,
62, மெசெஞ்சர் வீதி, கொழும்பு. தொலைபேசி 7651


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிவு

பராசக்தி

கூடலை வைரவர் கோயிலில் வருடம் ஒரு முறைதான் திருவிழா. அடுத்த நாள் வேள்வி ஆடு, கோழி பலி கேட்டுத் தெய்வம் சில தினங்கள் முன்னதாக கோயில் முதலாளியிடம் கனவில் வந்து கூறுவதாக மக்கள் கதைத்துக் கொள்கிறார்கள். தெய்வத்தின் ஆவலைப் பூர்த்தி செய்கிறோம் என்பதன் பேரில் அங்கு பலி நடக்கிறது.

அன்று வேள்வி. இரத்தினம் புதிதாகஇருந்தவேட்டி உடுத்து,சால்வையால் தலைப்பாகை கட்டி, பொழுது விடியுமுன்பே கோயிலை நோக்கி நடையைக் கட்டினார். இரத்தினம் தனிக்கட்டை. திருமணமாகி ஒரு வருடத்திலேயே மனைவி இறந்து அவரை இந் நிலைக்காக்கியது. அயலவர்களிடம் 'குடிக்காவிட்டால் தங்கப் பவுண்' என்றமட்டில்மதிப்பு இருந்தது. குருக்கள் கிணற்றடி ஒழுங்கையில் இருக்கும் ஒரே ஒரு கல் வீடு, இரத்தினம் நல்லாக இருந்த காலத்தில் கட்டியது. பொறுமைக்காரர்கள் சீட்டாட்டத்தில் சேர்ந்த பணம் என்றனர். அவ்வீட்டில் ஒரு பகுதியை தங்கை நாகம்மாவுக்குச் சீதனம் கொடுத்துக் கல்யாணம் பண்ணி வைத்தார். மனைவி இறந்தபின் நாகம்மாவும் கணவன் வேலுப்பிள்ளையும், குழந்தைகளும் மாத்திரமே அவ்வீட்டில் இருந்தனர். இரத்தினம் அதே வளவில் இருந்த ஒரு கொட்டிலில் காலம் தள்ளியது பெருந்தன்மையால் மாத்திரமல்ல தன்னுடைய சகாக்களுடைய கும்மாளம், குடி, சீட்டாட்டம் குடும்ப வீட்டில் சரிப்படாது என்று எண்ணியதே. மாட்டுக் கொட்டில் போல இருந்தாலும் தினசரி அங்கு நாலைந்து பேர்கள் கதைத்து, சிரித்து, பாடி வந்தனர்.

இரத்தினம் வாசலில் தீட்டுத்தடியில் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தபோது சொல்லிவைத்தாற் போல முருகன் வந்துகொண்டிருந்தான். இரத்தினம், "நல்ல வேளை வந்திட்டாய், இல்லாட்டித் தொல்லை: அதையொருக்கா சரிப்படுத்தி விட்டுப் போ" என்று கூறி வீட்டுக் கோடிப்பக்கம் அனுப்பி வைத்தார்......

ஒரு மரத்தில் ஆடு தூக்கப்பட்டிருந்தது. இரத்தினத்துடைய நண்பர்கள் சுற்றிவர நின்றனர். நிலத்தில் பனை ஓலைகளை வெட்டிப் போடப்பட்டிருந்தன. இரத்தினத்துடைய கன்னத்திலிருந்து எண்ணெய்வழிந்திருந்தது. வெறிபோதையால் உள்ள முகத்தின் கொடூரத்தை அதிகப்படுத்திக் காட்டியது. யாரோ வேலியைப் பிரித்துப் பார்க்கும் சத்தம் கேட்டதும் இரத்தினம் "யாரது?" என்று கடுமையாகக் கேட்டார்—அது செல்லையாண்ணை. எதுக்காக எட்டிப் பார்க்கிறார்?—"அது பாருங்கோ பங்கெல்லாம் முடிஞ்சு போச்சு"—இரத்தினத்தின் பதில்—.

வீட்டு வாசலில் வழக்கமாக மீன் வியாபாரம் செய்யும் யோசேப்பின் மணி ஓசை கேட்டு, இரத்தினம் அவனைக் கேலியாக, "இண்டைக்காரப்பா உன்னுடைய நொருங்கல் மீனை வாங்குவான்" என்று கேட்டார். அவன் புறப்பட ஆயத்தம்: அங்கு நாகம்மா வந்தாள். இரத்தினம் தங்கையை நோக்கி "ஏன் உனக்கு இறைச்சி வேண்டாமோ?" என்றதற்கு "அவரில்லாமல் உன்னட்டை வாங்கப் பயமாயிருக்கு, நீ என்ரை அவரோடை அண்டைக்கு கதை வெளிப்பட்டனி, உன்னட்டை வாங்கினதைக் கண்டால் மனிசன் சட்டிப்பானையெல்லாம் தூக்கியெறிஞ்சு போடும்" என்று கூறினார். "சரி போகட்டும், நான் பக்கத்து வீட்டுக் கிழவியைக்கொண்டு சமைப்பிப்பேன்" வார்த்தைகள் இரத்தினத்திடமிருந்து பரிதாபமாக வெளிவந்தன.

வேலுப்பிள்ளையும் இரத்தினமும் ஒருவரை ஒருவர் சந்தித்தால் இருவரும் நிலத்தில் எதையோ போட்டுவிட்டுத் தேடுபவர்களைப் போல் போய்விடுவார்கள். குடிகாரன் என்று வேலுப்பிள்ளை ஒதுங்கி நடந்தார். தங்கையின் கணவன் என்று இரத்தினம் ஒதுங்கி நடந்தார்.

வேலுப்பிள்ளை இரண்டு மணிக்குப் பின்பாகத்தான் வீடுவந்து சேர்ந்தார். சைக்கிளின் ஹான்டிலில் மாட்டியிருந்த ஓலைப்பையை மகளைக் கூப்பிட்டுக் கொடுத்தார். அதனுள் பருப்பும்,உருளைக்கிழங்கும்—"அப்பா இண்டைக்கு இறைச்சி வாங்கேல்லையோ"? என்றது வேலுப்பிள்ளையின் கோபத்தைச் சற்றுத் தூண்டியது.

"என்ன கப்பலோடுதென்று நினைக்கிறியளே. அவன் குடிகாரன், இன்டைக்குத் தருவன் நாளைக்கு உலகமெல்லாம் சொல்லித் திரிவான். அவரிட்டைப் போய்......"

அடுத்த நாள்காலை வேலுப்பிள்ளை மறுபடியும் சைக்கிளில் புறப்பட்டார்; சமையலுக்கு ஒரு சதமும் இல்லை. வேலுப்பிள்ளை வீடு திரும்பவேயில்லை. பிள்ளைகள் வாடிய முகத்துடன் இருந்ததைக் கண்ட இரத்தினம் தனது பெட்டியிலிருந்து ஐந்து ரூபா நோட்டொன்றை நாகம்மாவிடம் நீட்டினார். அவளுடைய கை நீளவில்லை. "நீ கடன் வாங்கினதாகச் சொல், விரும்பினு திருப்பித்தா" என்ற சமாதானம் அவளை ஏற்றுக் கொள்ளச்செய்தது. வேலுப்பிள்ளை இரவாகியும் வீட்டிற்கு வந்தபாடில்லை—'தரகர் வேலையாம்; எங்கெங்கோ போவாராம்; நேர காலத்திற்கு வீட்டிற்கு வரமுடியாதாம்; ஐந்து பிள்ளைகள், அதுவும் முதல் நான்கும் பெண்கள், அவற்றிற்காக வென்றாலும் ஒரு பொறுப்புணர்ச்சி வேண்டாம்'—இவையெல்லாம் வேலுப்பிள்ளையின் காதில் ஏறவில்லை.

அன்று இரவு இரத்தினத்தின் கொட்டிலில் வாடிக்கையாகக் காலந்தள்ளுகிறவர்களை விட இரண்டொரு பேர்கள் அதிகமாக இருந்தனர். வயதான கிழவர் ஒருவர் தன்னுடைய கடந்த கால அநுபவங்களை நண்பர்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார். "அந்த நாளையிலை, அதுவும் அரிச்சந்திர விலாசத்திலை நான் தான் அரிச்சந்திரன் வேஷம் போடுறனான்" என்றவர் திடீரென்று "சத்தியகீர்த்தியே!......அருமை மந்திரி...!" என்று தொடங்கி விட்டார். அப்பொழுது நாகம்மாவின் கடைசிக் குழந்தை வீரிட்டுக் கத்துவது கேட்டது —கொட்டிலில் அமைதி—இரத்தினம் எழுந்து சென்று விசாரித்தார். கடுமையான காய்ச்சல்... [illegible] மாற்றிக் கொண்டு வைத்தியரிடம் சென்றார். வெறி எங்குதான் போயிற்றோ?

குளிகையைக் கொடுத்ததும் கொட்டிலுக்கே போய் விட்டார். இரத்தினம் மறுபடியும் மறுநாள் காலை எழுந்தவுடன் முதல் வேலையாக, நாகம்மாவுக்குத் தெரியாமல், பெட்டகத்திலிருந்து அக்குழந்தையின் சாதகக் குறிப்பை எடுத்து இராமலிங்க சாத்திரியிடம் சென்று காட்டிய பொழுது, "இரத்தினம் உனக்குப் பைத்தியமா? ஆயுளுக்கு ஒரு பயமுமில்லை" என்று கூறிக் கலைத்து விட்டார் சாத்திரியார். இருந்த இடத்திலே வைத்துவிட்டார் குறிப்பை—இப்பொழுது நிம்மதி—.

வேலுப்பிள்ளை வீட்டிற்கு வந்தபொழுது குழந்தை சுகமாய் இருந்தது. மனைவியின் வசை புராணத்தைக் கேட்கு முன்பே அவர் தனக்குப் பழக்கமான சமாதானங்களைக் கூறி அவளைச் சமாதானப்படுத்துவதில் அதிக சிரமம் அடைவதில்லை.

நாகம்மா, "தீவாளி வருகுது,அயல் வீட்டுப் பிள்ளையளெல்லாம் உடுத்துப்படுத்து இருக்க, இதுகளுக்கு இல்லாட்டி நல்லாயில்லை; என்னுமாதிரியோ அதுகளுக்கு ஏதாவது தைச்சுப்போட வேணும். அல்லாட்டி...அங்கினை, இங்கினை போய் நாள் கணக்கிலை நிண்டுட்டு வாற எண்ணமோ?" என்றாள். "சீசீ அப்படி சொல்லாதை மற்றவையை நம்பியே நான் வாழுறன்; அதெல்லாம் நான் செய்வன் தானே! உனக்கும் ஒரு சீலை எடுக்கலாம் எண்டிருக்கிறன்" என்ற கணவனின் பதில் நாகம்மாவின் முகத்தில் புன்முறுவல் தோன்றச் செய்தது.

அன்று நல்ல காய் கறிகள் வாங்கிக் கொடுத்து விட்டு அவசரமாக ஓர் அலுவலாக செல்வதாயும், இரவுச் சாப்பாட்டிற்கே தான் வருவதாகவும் கூறிவிட்டுச் சென்றார் வேலுப்பிள்ளை. இரவு பத்து மணி—வாக்கைக் காப்பாற்றுபவர்போல் வந்து கொண்டிருந்தார். வீட்டுத் திண்ணையில் பிள்ளைகள் தூங்கிக் கொண்டிருந்த காட்சி வேலுப்பிள்ளையை வரவேற்றது. ஒரு பிள்ளை உருண்டு போய், தலை வைக்குமிடத்தில் காலை வைத்து உறங்கிக் கொண்டிருந்தது; வாயை 'ஆ'வென்று திறந்தபடி இன்னொன்று. தந்தை என்ற பெருமிதத்துடன் நோக்கினார்; இராணுவ அணிவகுப்பிற்கு மரியாதை செலுத்துபவர்போல. நாகம்மா கூப்பிடும் ஓசை கேட்டது, இரவுச் சாப்பாட்டிற்காக.

அன்று கறிகள் பிரமாதம்;—வழக்கத்திலும் பார்க்க;—இரு கறிகள் அதிகமாக வைத்திருந்தாள். பலகை ஒன்றில் அமர்ந்திருந்து கறிகளைப் பற்றிய விமர்சனத்தோடு உணவருந்திக் கொண்டிருக்கும் வேலுப்பிள்ளைக்குப் பரிமாறுவதில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தாள் நாகம்மா; "தீர மறந்து போட்டன், இன்னுமொரு கறி கிடக்கு" என்றாள். "ஐயையோ! கன கறி போட்டனி, தாராளமாய் சாப்பிட்டாச்சு, வேண்டாம், வேண்டாம்" என்று வேலுப்பிள்ளை மறுத்தது வீண். அடுத்த கறியையும் போட்டாள். அவளுடைய கன்னத்தில் புரண்டிருந்த கரி—அதை வேலுப்பிள்ளை தனது இடது கரத்தால் துடைத்தார்—கைகளில் ஒருவித பதற்றம்—நாகம்மா தானாக முனைந்து கொண்டு முந்தானையால் துடைத்தாள்.........

இரத்தினத்தின் கொட்டிலிருந்து சிரிப்பொலி இலேசாகக்கேட்டது...நாகம்மா திரும்பிப் பார்த்தாள். பச்சை விறகு, எரியுதில்லையே, குத்தியாகக் கிடக்குதே என்று அடுப்பில்போட்டிருந்த விறகு சுவாலை விட்டெரிந்தது, ஒரு பலனுமில்லாமல்.குடத்திலிருந்து தண்ணீரைக் கொண்டு தணித்தாள்—உறியில் சட்டிகள்கள் எல்லாவற்றையும் வைத்தும் அன்று ஒரு சட்டி கூடுதலாகக் கிடந்தது புலப்பட்டது. பழைய உறி; பலவீனமானது; அறுந்து விடுமோ என அஞ்சினாள்: ஆனால் அவ்வுறி கம்பீரமாக ஊசலாடிக்கொண்டிருந்தது அந்தப் புதுச் சட்டியுடன்.

"என்ன நாகம்மா பிறகும் கர்பிணியாம், ஐஞ்சு பிள்ளைப் பெத்தவள்; என்னவோ அவளும் அனுபவிக்க வேண்டிய விதியாக்கும்" என்ற வயதான பெண்ணின் குரல்; "பிள்ளையளை பன்றி குட்டி போட்ட மாதிரி போட்டால் மாத்திரம் போதுமே. அதுகளை வளர்த்தெல்லோ விட வேணும்" என்ற மலட்டுப் பெண்ணொருத்தியின் குரல்; இவையெல்லாம் வேலியில் சுறையான் தட்டிக்கொண்டு நிற்கும் இரத்தினத்திற்கு ஈட்டிகளாகப் பாய்ந்தன. ஆனால் இவை அயல் வீடொன்றில் பெண்கள் சேர்ந்து பேசும் பொழுது போக்குப் பேச்சுகள்.


ஆத்திரம் பொங்கியது—அதன் வேகம் இரத்தினத்தை கள்ளுக் கொட்டிலுக்குக் கூட்டிச் சென்றது. மச்சான் வேலுப் பிள்ளையைப் பற்றி ஒழுங்கை பூராகவும் ஏசிக் கொண்டே வந்து கொண்டிருந்தார்.—வீட்டிற்குள்—...இரத்தினத்தைப் பற்றிய தகவல் முன்னதாகவே கிடைத்துவிட்டது போன்ற முகபாவத்துடன் வேலுப்பிள்ளை இருந்தார்.

இருவருடைய கோபமும் வாக்குவாதமாக மாறியது. "டேய்! நீயும் ஒரு மனுஷனடா? பிள்ளை குட்டி பெண் சாதி எண்ட கவலையில்லை. இருக்கிற பிள்ளையளை வடிவாய்க் கவனிக்க ஏலாது. இன்னும் வேணுமோடா மடையா?" என்ற அநாகரிகப் பேச்சு வேலுப்பிள்ளையை சுயபுத்தி இழக்கச் செய்தது.

இருவரும் கைகளில் ஒவ்வோர் ஆயுதங்களுடன் நின்ற காட்சி,—பெண்கள். பிள்ளை குட்டிகளின் கூச்சலைத் தூண்டியது.

"குடிகாரன். அவனைப் பிடியுங்கோ, பிள்ளை குட்டிகாரனை ஏதாகிலும் செய்து போடுவான்." என்ற கூச்சல் அங்கு வந்துசேர்ந்த இரத்தினத்தின் நண்பர்களுடைய காதில் பட்டதும், இரத்தினத்தைக் கெட்டியாக பிடித்

(13-ம் பக்கம் பார்க்க)




## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தடுப்புக் காவலில் நாம்' 9.



# அன்பு மகள் அன்பரசிக்கு,

தடுப்புக் காவல் நிலையம்,
பனுகொடை,
ஹோமகம.
26—4—1961

பாசமகளே!

நேற்றைய மடலில் மலை நாட்டுத் தமிழரின் வேலை நிறுத்தம் சில இடங்களில் ஆரம்பித்துவிட்டதாக வானொலி மூலம் அறிந்து மகிழ்வு கொண்டதாக எழுதினேனல்லவா? இன்று காலை அவ்வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காகப் பிரதமரின் அறிக்கையைக் கேட்டோம். சர்வாதிகார நாட்டில் நடைபெறுவது போன்று, அதிகார போதையுடன் திட்டப்பட்ட அடக்கு முறை அறிக்கையைக் கேட்டோம். இப்படியான அறிக்கையைவிட பண்பான அறிக்கையை நாம் எப்படி எதிர்பார்க்கலாம்? இந்நிலையில் மலைநாட்டுத் தமிழர் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்களா என்ற சந்தேகம் ஏற்படவே செய்கின்றது. மக்களைப் பொறுத்த வரையில் சந்தேகமில்லை. ஆனால் தலைவர்கள் ...... அரசாங்கத்தின் மாயவலையுள் விழ்த்தப் பட்டால்...... எந்த வலை விரித்தாலும் விழாத தன்மை கொண்ட தமிழரசுத் தலைவர்களா அவர்கள்? — இல்லையே!

என்ன?

மத்தியானச் செய்தியில் வேலை நிறுத்தம் நிற்பாட்டப்பட்டு, அமைதியுடன் தொழிலாளர் வேலைக்குத் திரும்பிவிட்டதாக வானொலி கூறிற்று. ஆச்சரியப்படடோம். தொண்டமானைப் பற்றியிருந்த மக்களபிப்பிராயம் சரியானது தான் என்பதையே என்னால் உணரமுடிந்தது! அரசாங்கத்திற்கும் நல்ல பிள்ளையாய், தொழிலாளருக்கும் நல்ல பிள்ளையாய் நடக்கப் பார்க்கும் தலைவர் தொண்டமான் என்பதை அவர் வந்தபாதை மெய்ப்பித்தது. அதை இன்னும், வேலைநிறுத்தம் தொடங்கி நிறுத்தப்பட்டமை ஊர்ஜிதம் ஆக்கிவிட்டது.

ஏழைத் தொழிலாளியின் வாழ்வுடன் விளையாடும் இந்தத் தலைவர்களின் சுய உருவம் தெரியப்போகும் காலம் தூரத்திலில்லை. பட்டம், பதவி, தலைமை, தொடர்ந்து இருப்பதற்காக தொழிலாளிகளின் வாழ்வு பம்பரமாக்கப்படுகின்றது! ஐயகோ! மலைநாட்டுத் தமிழா! உன் நிலையை எண்ணி வேதனையே அடைய முடியும். பாமரத் தொழிலாளியின் வாழ்வுடன் விளையாடும் முதலாளித் தலைவர்களே! முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உங்கள் தொழிற் சங்கம் இயங்குகின்றதே! நீங்கள் செய்தசேவை என்ன? கூறமுடியுமா? உங்களுக்கேன் ஒரு சங்கம்? உருப்படியாகச் செய்த ஒன்றையாவது மலைநாட்டுத் தலைவர்களால் கூறமுடியுமா? முடியவே முடியாது.

யாழ்ப்பவனி, உலக பவனி, ஒலிபரப்பிமுன் அழகாகப் பேசுவது, பாராளுமன்றத்தில் ஆட்சி பீடத்திற்கு வால் பிடிப்பது...... இதைத் தவிர மலைநாட்டுத் தலைவர்கள் செய்தது யாது?

காலம் மாறும். மலைநாட்டுத் தமிழன் விழிக்கும் காலம் தூரத்திலில்லை.

தமிழரசுக்கட்சி மேடையில் உறுதியாகப் பலமுறை பேசிய தொண்டமான் எங்கே? அஸீஸ் எங்கே? வெள்ளையன் எங்கே? ...... நீங்கள் மேடையில் அழகாகக் கூறியவற்றை இலங்கைத் தமிழர் மறக்கவில்லை; மறக்கவும் மாட்டார்கள். மலைநாட்டுத் தமிழரை ஏமாற்றியது போதாதென்று, இலங்கைத் தமிழர்களையும் ஏமாற்ற முனைகின்றீர்கள்? வேலை நிறுத்தம் தொடங்கியிருக்கக் கூடாது. தொடங்கிவிட்டு இடையில் வேடமிடுவதா கொள்கை? வெட்கம்! வெட்கம்! தூ! தூ!

மகளே! மலை நாட்டுத் தமிழர் தலைவர்களின் உண்மையுருவம் தோல் உரிக்கப்பட்டுக் காட்ட, இவ்வேலை நிறுத்தம் போதுமானது. இந்தத் தலைமையை நாங்களினி

## புதுமை லோலன்

மேல் நம்புவது பேதமை என்பதை உணர்த்தி விட்டார்கள். விசைமாறு சொல்லடுக்காகப் பேசும் கரிகாலன் இன்று கைதாகி வந்தார். அவரும் எனதறையிலேயே தங்குகின்றார். கரிகாலன் மூலம் யாழ்ப்பாணத்தின் இராணுவ ஆட்சியையும், கொடுமையையும் கேட்டோம்.

இன்று காலை பத்து மணி முதல் மத்திய இடத்தில் கூடினோம். அறப்போர் முன்னணி அரியநாயகம் அவர்கள் பேசினார்கள். பாரதத்திலுள்ள சில பாத்திரங்களைப் புது முறையில் புதுக்கண்ணோட்டமுடன் ஆராய்ந்து பேசினார்கள்.

துரியோதனன் என்றால் கொடியவன் என்றே எமது மக்கள் நினைப்பர். அப்படியாகவே இப்பாத்திரத்தை நாம் படித்துள்ளோம். அர்ஜுனன், திரௌபதை என்றதும் உயர் ஸ்தானம் கொடுத்தே எண்ணுவோம். இந்த நிலையைப் பிழையென உணர்த்தி, பல மேற் கோள்களுடன் பேசினார்.

திரௌபதை ஓர் விபச்சாரியே என்று பல புது ஆலோசனைகளுடன் பேசினார்.

ஐவரை மணந்தாள். கன்னனிடமும் ஆசை கொண்டிருந்தாள். அக்காரணமே மாம்பழம் ஒட்டும் போது கூறப்பட்டது...... இப்படியான பல மேற்கோள்களை எடுத்துக் கூறிப் புதுச் சிந்தனையை உண்டாக்கினார் அரியநாயகம் அவர்கள்.

இவரது வாதத்தில் சேர்ந்தும் எதிர்த்தும் திருவாளர்கள் செ. இராசதுரை, அ. அமிர்தலிங்கம், மு. இராசமாணிக்கம், வி. ஏ. கந்தையா, க. தர்மலிங்கம், பூபாலரத்தினம், தா. சிவசிதம்பரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப்பேச்சு மூலம் மூன்று மணித்தியாலங்கள் புது இலக்கிய சிந்தனையுடன் கழிந்தன.

பழைய இதிகாசங்களில் கூறப்படுபவை யாவும் உண்மைதானா? என்ற வினாவை இன்றைய வளர்ந்து வரும் சமூகம் கேட்கவே செய்கின்றது. காலத்துடன் ஒட்டிச் சிந்திக்க வேண்டும். இலக்கியம் காலத்தின் கண்ணாடியாகும். காலத்தின் நிலை, எழுத்தாளரை ஆக்கிரமிக்கவே செய்யும். கால எண்ணத்துடன் பார்க்காது, இன்றைய காலக் கண்ணோட்டமுடன் பார்த்தால், அநேகமா

(13-ம் பக்கம் பார்க்க)

# கம்யூனிஸ்ட் கி. ச. தலைவர் அகப்பட்டார்!

சமத்துவம், சமதர்மம் என்று கதறும் வாய் வீரர்கள் கம்யூனிஸ்டுகள். ஆனால் காரியத்தில் இறங்கும்போது அவர்களது சுய உருவம் வெளிப்படும். மானிப்பாய் கிராமச் சங்கத் தலைவர் திரு. கணேசவேல் அவர்கள், பழுத்த கம்யூனிஸ்ட், கிராமச் சங்கம் சண்டிலிப்பாயிலுள்ள தேனிப் புளியடி ஒழுங்கையைச் செப்பனிட ஒரு தொகை பணத்தை ஒதுக்கியது.

கம்யூனிஸ்ட் தலைவரோ இந்தப் பணத்தைத் தனக்குச் சாதகமான பகுதியில் உபயோகிக்க விரும்பினார் போலும். அதனை வேறு ஒழுங்கை ஒன்றினைத்திருத்த உபயோகிக்க விரும்பினார். சட்டப்படி அவ்விதம் மாற்றுவதற்குக் கிராமச்சங்கம் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். ஆனால் கிராமச் சங்கத்தின் ஒப்புதல் கிடையாது என்று கண்டதும் சங்கத்தின் ஒப்புதல் கிடைத்து விட்டது என்று உதவி உள்ளூர் ஆட்சி ஆணையாளருக்கு எழுதி விட்டார். உதவி ஆணையாளரும் அதனை நம்பித் தனது ஒப்புதலைக் கொடுத்தார்.

விரைவில் உண்மை வெளிவந்தது. பழைய கிராமச் சங்கக் கூட்ட அறிக்கைகளைப் புரட்டிய ஆணையாளருக்குத் தலைவரின் நடத்தை விளங்கிற்று. உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

## சப்தமில்லாமல் முன்னேற்றம்!

பிரிட்டிஷ் படையின் அணிவகுப் பின்போது இரும்பு ஆணிகள் கொண்ட சப்பாத்தின் சத்தம் இனிக் கேட்கப்படமாட்டாது.

ரப்பர் உற்பத்தியாளர்களிடம், தனி ரப்பர் அடிப்பாகம் கொண்ட சப்பாத்துக்களைச் செய்து தரும்படி கேட்கப்பட்டுள்ளதாக யுத்த காரியாலயம் அறிவித்துள்ளது.

வருடத்திற்கு 250,000 சோடி சப்பாத்துக்களென, இரும்பு ஆணிகள் கொண்ட சடபாத்துக்களுக்குப் பதில் ரப்பர் அடிப்பாகச் சப்பாத்துக்கள் மாற்றப்படும்.

பல வருடங்களாக உலகின் பல பாகங்களிலும் இடம்பெற்ற பரீட்சைகளின் பின்பே இம்முடிவு செய்யப்பட்டது. ரப்பரானது காங்கிரீட்டிலும், பாறைகளிலும் குத்தப்பட்ட கூரிய உலோகத் துண்டுகள் நிரம்பிய நிலங்களிலும் பரீட்சிக்கப்பட்டது. பாதுகாப்புப் படைகளும் ரப்பர் அடிப்பாக முடைய சப்பாத்துக்களையே பாவித்தனர்.

# நேரு விஜயத்தன்று சத்தியாக்கிரகமாம்!

## சிங்களப் பத்திரிகை சரடு

"இந்தியப் பிரதமர் ஸ்ரீ நேரு இலங்கைக்கு விஜயம் செய்யும் தினத்தன்று நாடு பூராவும் சத்தியாக்கிரக இயக்கமொன்றை ஆரம்பிக்க வட இலங்கைத் தலைவர்கள் தயாராகின்றனரென அறியப்படுகிறது" என்று ஒருசெய்தியை 'தவஸ' என்னும் சிங்களத் தினசரி கடந்த வியாழக்கிழமையன்று பிரசுரித்துள்ளது.

அப்பத்திரிகை மேலும் கூறுவதாவது:—

"சிங்கள மொழியை அரசகரும மொழியாக்கியதின் மூலம் இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு இழைத்துள்ள அநீதியை "சத்தியாக்கிரக"த்தின் மூலம் இந்தியத் தலைவருக்கு அமைதியான முறையில் எடுத்துக் கூறுவதும் "நாடற்ற" மலைநாட்டுத் தோட்டத் தமிழர்களின் கஷ்டங்களை அவருக்குத் தெரிவிப்பதும் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும்.

### ஏற்பாடுகள்

தற்போது ஏற்பாடு செய்யப்படும் இந்தச் சத்தியாக்கிரகம் கடந்த வருடத்தில் ராணுவ நடவடிக்கையின் காரணமாக கைவிடப்பட்ட சத்தியாக்கிரக இயக்கத்தின் ஒரு பகுதியாக இருக்கக் கூடும்.

மன்னாரில் தமிழரசுக் கட்சியின் மகாநாடு முடிவடைந்த பின்னர், மன்னாரிலுள்ள தமிழரசுக் கட்சிப் பிரமுகர் ஒருவர் இல்லத்தில் மலைநாட்டுத் தொழிற் சங்கத் தலைவர் ஒருவரும் வடஇலங்கையில் பிரபல தமிழ்த் தலைவர்கள் நான்கு பேர்களும் கூடி ஸ்ரீநேரு இலங்கைக்கு வரும் தினத்தன்று எத்தகைய நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி விவாதித்ததாக அறியப்படுகிறது.

எதிர்பார்க்கும் உரிமைகள் கிடைக்கா விட்டால் ஏப்ரல் 17ம் திகதிக்குமுன் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதென தமிழரசுக்கட்சி செய்த தீர்மானத்தை ஆதரிப்பதென ஐனுப் ஏ. அஸீஸ் தலைமையிலுள்ள ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸும் லங்கா தோட்டத் தொழிலாளர் சங்கமும் முடிவு செய்திருக்கின்றன".

## பாடப் புத்தகங்கள் மலிவு விற்பனை

பல்கலைக் கழக, கல்லூரி மாணவர்கள் படிக்கும் பாடப் புத்தகங்கள் பிரிட்டனிலிருந்து மிக மலிவாக வெளியிடப்பட்டு வருகின்றன. புத்தகங்களின் உண்மையான விலையில் கால் பங்கோ அல்லது ஐந்தில் ஒரு பங்கோ விலைக்கு இம் மலிவுப் பிரதிகள் விற்படுகின்றன.


பொருளாதாரம், சரித்திரம், கணிதவியல், பொறியியல் மற்றும் பல்வேறு துறைகளில் உள்ள பாடப் புத்தகங்களும் இவ்விதம் மலிந்த விலையில் பெறக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வசதியை ஆசிய மாணவர்களுக்கென்று செய்து தருபவர்கள் பிரிட்டிஷ் தூதுவராலயத்தைச் சேர்ந்தவர்களே. இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் கவுன்ஸில் நூல் நிலையத்திலும், இம் மலிவுப் பிரதிகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

ஆசிய நாடுகளிலே, இலங்கையில் தான் இம் மலிவுப் பிரதிகளுக்கு வரவேற்பு அதிகம் என்று பிரிட்டிஷ் தூதுவராலய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.


Dial 2739

රාජ බීඩි
ස්පෙෂල්




ராஜ பீடி
ஸ்பெஷல்

ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன்: 2739


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீதர் டைரக்டரானது எப்படி?

## 'நெஞ்சில் ஓர் ஆலயத்தில் புதுமைகள் மூன்று

"ஸ்ரீதர் அவர்கள் எனது நண்பர். அமரதீபம் படத்தை ஹிந்தியில் எடுத்த போது என் உதவியை நாடினார். அதன்பின் நாங்கள் ஒன்றாக இயங்கினோம். முன்னேற்றமான படங்களைத் தயாரிக்கவேண்டும் என்று நாங்கள் விரும்பினோம். அதற்கென எங்கள் குழுவில் பல தொழில்களையும் செய்யப் பலர் இருந்தனர். ஆனால் எங்களிடையே ஒரு டைரக்டர் மட்டுமே இல்லாதிருந்தது."

"ஒரு நாள் மாலை நானும் ஸ்ரீதரும் வெளியே காற்று வாங்கச் சென்றபோது இதைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று எனக்கு ஒரு எண்ணம் உதித்தது. இதுவரை கதை வசனம் எழுதிவந்த ஸ்ரீதரே டைரக்டர் வேலையையும் பொறுப்பெடுத்தால்...... அவ்வளவுதான், என் எண்ணத்தை ஸ்ரீதரும் ஏற்றார். அதன்பின் வசனகர்த்தா ஸ்ரீதர் டைரக்டர் ஸ்ரீதர் ஆனார். கல்யாண பரிசு படத்தை டைரக்ட் செய்யத் தொடங்கினார்." இப்படியாக அண்மையில் இலங்கை வந்திருந்த சித்ராலயாவின் அதிபரான திரு. சர்மா தெரிவித்தார்.

கல்யாணப்பரிசு கதை வந்ததும் அதுபற்றியும் ஒரு சம்பவம் கூறினார். கல்யாணப் பரிசு கதையை திரு. ஸ்ரீதர் எழுதி முடித்ததும் அதை திரு. சர்மா வடஇந்தியாவின் பிரபல கமரா நிபுணராகவும் தயாரிப்பாளராகவுமுள்ள பாலி மிஸ்திரி அவர்களிடம் காட்டினாராம். பாலி மிஸ்திரியோ கதை நல்லதல்ல என்று கூறிவிட்டாராம். ஆனால் அதே கதை தமிழில் தயாராகி ஒரு வெற்றிப் படமாகியதுடன் ஹிந்தியிலும் தயாராகி வெற்றிப் படமாகத்திகழ்ந்தது.

சித்ராலயாவின் முதல் தயாரிப்பு தேன் நிலவு. அதற்காக நடிகர்கள், தொழில் நிபுணர்கள் சகலரும் காஷ்மீர் சென்றதை வாசகர்கள் அறிவர். "இரண்டரை மாதகாலத்துள் காஷ்மீரிலேயே நூற்றுக்கு 85 வீதத்தை தப்படமாக்கிவிட்டோம். மிகுதியைத்தான் சென்னையில் முடித்தோம். காஷ்மீரில் இருந்த காலம் படப்பிடிப் பிற்காகச் சென்ற எல்லோருக்குமே ஒரு உல்லாச காலமாக அமைந்தது. காலை 10 மணி வரையில் வெய்யில் எறித்த போது மட்டும் படப்பிடிப்பு. மற்றவேளை எல்லோர்க்கும் ஓய்வுதான்" என்று திரு. சர்மா குறிப்பிட்டபோது அவருடைய முகத்திலும் ஒரு உல்லாசப் பார்வை தவழ்ந்தது.

புதுமைப் படம் 'நெஞ்சிலோர் ஆலயம்' பற்றி அவர் குறிப்பிடுகையில் அதிலுள்ள புதுமையை மூன்று பிரிவாகக் கூறினார்.


(1) படத்தில் குறைந்த அனுபவமுள்ள நடிகர்களை உபயோகித்தமை. சிலர் புது முகங்கள்.

(2) தொடர்ச்சியான படப்பிடிப்பு. காலை 7 தொடக்கம் இரவு வரை தொடர்ச்சியாகப் பாடுபட்டு 26 நாட்களில் முடித்தமை.

(3) ஒரே செட்டில் எல்லாக் காட்சிகளையும் படம் பிடித்தமை.

நடிகர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் கஷ்டப்பட்டு தேடி, திறமை தென்படும் புது முகங்களைத் தேர்ந்ததாகக் குறிப்பிட்டார். படத்தில் சிறப்பாக நடித்த முத்துராமனை அவர் ஒரு நாடகத்தில் நடிக்கும்போது கவனித்து அவரைத் தேர்ந்தெடுத்தார்களாம். புதுமுக வேட்டைக்காக ஸ்ரீதரும் திரு. சர்மாவுமாக பல நாடகங்களைப் பார்ப்பது வழக்கம் என்றும் குறிப்பிட்டார்.

அவருடன் சம்பாஷிக்கும் எவரும் அவரது தர்க்கரீதியான உரையாடலையும், உதாரணம் உவமை கூறித் தன் கருத்துக்களை விளக்குதல் போன்ற சிறப்பினையும் கவனிக்கத் தவற மாட்டார்கள். "ஒரு சில நடிகர்களிலே மட்டும் தென் இந்தியச் சினிமாத்துறை தங்கியிருக்கலாகாது, எனவேதான் புது முகங்களை நாங்கள் புகுத்துகிறோம்" என்று நெஞ்சிலோர் ஆலயத்தில் புதுமுகங்கள் தொகைக்கு விளக்கம் கொடுத்தார் திரு. சர்மா.



''நெஞ்சில் ஓர் ஆலயத்''தை தயாரித்த சித்ராலயா ஸ்தாபன நிர்வாகி திரு. சர்மா இலங்கைவந்திருந்த போது 'சுதந்திரன்' நிருபருடன் உரையாடிக்கொண்டிருக்கிறார். சிலோன் என்டர் டெயின் மன்ட் விளம்பர அதிகாரி திரு. பாலசுப்பிரமணியம் அருகிலமர்ந்திருக்கிறார்.

## "தாய் சொல்லைத் தட்டாதே"

### ( வர்ணனை )

தாய் சொல்லைத் தட்டாதே படத்துக்கான வர்ணனைகள் கடந்த வாரம் கலைப் பூஞ்சோலையில் தொடர முடியவில்லை. மேலும் சில வர்ணனைகளை இங்கே தருகிறோம். இத்துடன் வர்ணனை முடிவடைகிறது. பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி. பிரசுரிக்கப்பட்ட வர்ணனைகளை எழுதிய ஒவ்வொருவருக்கும் 'சுதந்திரன்' பத்தாவது ஆண்டு மலர் பிரதி ஒவ்வொன்று அனுப்பி வைக்கப்படும்.

( 3 )

"சிறுவயதிலேயே பிரிந்த ஒரு மகனைக் கண்ட தாய், தன் மகனைக் கண்டதும் என்ன செய்வாள்? பிரிந்த துக்கம் மாறுமட்டும் அப்படியே கட்டி அணைத்துக் கொள்வாள். அப்படியே மோகனின் தாயும் கட்டி அணைத்துக் கொள்கிறாள். இவ்விடத்தை என் தாயுள்ளம் நன்கு ரசித்தது.

ராஜூவால் அடிபட்ட மோகன் அம்மா...அம்மா... என்று கதறியபடி தன் தாயின் காலில் விழும் இடம் இன்னுமோர் சிறந்த இடமாகும். மோகனின் முகத்தைக் கண்ட ராஜூவின் தாய் "உன் அண்ணனையா அடித்தாய். நீ சின்னப் பிள்ளையாய் இருக்கும் போது தொட்டில் ஆட்டித் தூங்க வைத்தவனையா அடித்தாய்" என்று கேட்கிறாள். இக் கேள்வி கல்லிதயமுடைய மனிதரையும் கனியச் செய்துவிடும்.

ராஜூ தன் தாயிடம் 'நெக்கிலசை'த் திருடிவந்த இருவரது புகைப்படத்தையும் காட்டும் காட்சி. ராஜூ ஏங்கியபடியே தாய் என்ன கூறுகிறாளா என்பதை எதிர் பார்த்து நிற்கிறான். அத்தாயின் துக்கம் தொண்டைடையை அடைக்க அவளால் சிறிது நேரம் பேச முடியாமல் அப்படியே சிலையாக நின்று விடுகிறாள். ராஜூ அண்ணனைக் கைது செய்ய வேண்டாம் என்று அம்மா கூறுகிறீர்கள்? என்று பரிதாபகரமான தோற்றத்துடன் கேட்கிறான். அப்போது அவள் "இல்லை நீ உடனே அவனைக் கைது செய்ய வேண்டும்" என்று கூறுகிறாள். இதில் இருந்து ஓர் படிப்பினை தாய்மாரான எமக்குக் கிடைக்கிறது. பெற்றால்தான் பிள்ளை என்ற நினைப்புடன் நாம் இருக்கக்கூடாது. எல்லோரும் நம்பிள்ளைகள் என்ற நிலையிலும், அதுவும் இரு பிள்ளைகள் ஒரு தாய் வயிற்றில் பிறந்ததால் அவள் நீதி தராசுபோல் நிறுத்து நிற்க வேண்டும், சிறிதும் விலகல் கூடாது என்பதை எமக்குப் படிப்பிக்கிறது. அத்தாய் மோகனைக் கைது செய்யாமல் விடும்படி ராஜூவிடம் கூறினால் அவள் ராஜூவின் முன்னேற்றத்திற்குத் தடையாகவும், நீதிக்குப் பங்கம் விளைவிக்கும் ... ஒரு ... 

(13-ம் பக்கம் பார்க்க)

நாடக விமர்சனம்

## துரோகி

படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள், உத்தியோகம் பார்ப்பவர்கள் நாடக மேடையிலேறி வேடம் போட்டு நடிப்பது ஒருகாலத்தில் அவமானத்துக்குரிய செயலாகக் கருதப்பட்டு வந்தது. இப்பொழுது நாடகத் தமிழை வளர்க்க பலதரப்பட்டவர்களும் முன் வந்திருப்பது போற்றுதற்குரியதே.

மட்டக்களப்பு கச்சேரி உத்தியோகத்தர்களும், அரசாங்க அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து ஓர் நாடகமன்றத்தை ஆரம்பித்தனர். முதல் படைப்பான 'துரோகி' நாடகத்தையும் தயாரித்து அளித்தனர். நாடகக் கதை வசனத்தை எழுதியவர் திரு. நடமாடி.

குறுகிய காலத்தில் ஓர் சரித்திர நாடகத்தை மேடையேற்றுவதில் எண்ணற்ற சிரமங்கள் உள. ஒரு முழுநாடகத்துக்குவேண்டிய கதையில் போதுமான சம்பவக் கோர்வைகள் இல்லை. நடிகர்களின் நடிப்புக் கலையை எடுத்துக் காட்ட சந்தர்ப்பங்கள் மிகக் குறைவு. பாடல்கள் எதுவும் சுவையாகப் பாடப் படவில்லை. சுருதி சேரவில்லை— தாளம் ஒத்துழைக்க வில்லை. ஆகவே பாடல்கள் அவசியம் நீக்கப்பட்டிருந்தால் நன்றாயிருந்திருக்கும். ஆரம்பத்தில் ஒளியில் நடிகர் பெயர்கள் முதலியவற்றைக் காண்பிக்க முனைந்தது, சிறு பிள்ளை விளையாட்டுப் போன்றிருந்தது.

ஒளி, ஒலி அமைப்புகளும், அர்ச். மிக்கேல் கல்லூரி காட்சி அமைப்புகளும் சிறந்திருந்தன.

நரசிங்கத் தேவனாகத் தோன்றிய திரு. ஆர். பேரம்பலம் 'துரோகி'யான கதாநாயகன் பாத்திரத்தை ஏற்று நடித்தார். நாடக மேடைக்கேற்ற சாயலும், குரல் அமைப்பும் வாய்க்கப் பெற்ற அவரிடம் நடிப்புக் கலை சிறப்புற்றிருப்பதைக் காண முடிந்தது. நாடகத்தின் மேம்பாட்டுக்கு அவருடைய நடிப்பே முழு முதற் காரணமாகும் என்றால் மிகையாகாது சுருங்கக் கூறின் நாடகத்தில் நடித்துப் பழுத்த பழம் திரு. பேரம்பலம். இரண்டாவது இடத்தை அபகரிப்பவர்கள் இருவர். தளபதி பல்லவனாக வந்த திரு. வி. இராசலிங்கம், செவிட்டுச் சேவகனாக நடித்த திரு. ஸ்ரவிஸ்லாஸ் ஆகியோரே அவ்விருவரும். பழமையான நகைச்சுவையாக விருந்தும், திரு. ஸ்ரவிஸ்லாஸ் அற்புதமாகச் சிரிப்பூட்டினார். வேடப் பொருத்தமும் பிரமாதம்.

மரகதமாக வரும் செல்வி சிவயோகம் சோபிக்கவேயில்லை. போதுமான சந்தர்ப்பம், அவருடைய திறமையை வெளிப்படுத்தக் கூடியவகையில் கொடுபடவில்லை. மந்திரி கனகராயராக நடித்த கே. வீ. இராசரெத்தினம் தமக்கே உரித்தான பாணியில் நன்கு நடித்தார். மட்டக்களப்பு பெரும் பகுதி காரியாதிகாரி திரு. எஸ். எம். தியோபிலஸ் பழுத்த நாடக அனுபவம் வாய்ந்த ஒருவரைப்போல் நடித்தது சகலரையும் ஆச்சரியத்திலாழ்த்தாமலில்லை. வேடப் பொருத்தமும் வெகு ஜோர். கீர்த்திவர்மராகத் தோன்றிய திரு. கே. மகாதேவா அவர்களும் சிறப்பாக நடித்தார்.

மற்றும் திரு பாலகராஜா, இராசதுரை சிவலிங்கம் ஆகியோரும் செவ்வனே நடித்திருந்தனர்.

பின்னணி இசை சோபை அளித்தது. நடனங்களும்பரவாயில்லை. குறிவகைகள் குறைவாகவிருந்தாலும் சமையல் செம்மையுடன் செய்யப்பட்டால், சுவை கொடுக்கும். அதேபோல் "துரோகி" நாடகத்தைச் சோபையூட்டித் தயாரித்த திரு. பி. டி. பெனடிக்ற், ஒப்பனையின் மூலம் சிறப்பித்தவர் ஆகிய இருவரும் பாராட்டுக் குரியவர்.

—நாதன்



மந்திரி கனகராயரை (இராசரெத்தினம்) நரசிங்கத்தேவன் (பேரம்பலம்) கைது செய்யும் கட்டம். தளபதி பல்லவன் (இராசலிங்கம்) பார்த்துக் கொண்டு நிற்கிறார்.

தொலைபேசி 693. HIRATA தந்தி "சேகரன்"

உறுதியான நைலோன், தருலோன் நூல்களும், வலைகளும்



கிடைக்குமிடம்:
சேகரம் & சன்ஸ்
74, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடகிழக்கில் காணிபெற விரும்புவோருக்கு....

சென்ற 16-9-62-ந் திகதி சுதந்திரனில் "வன்னி விளாங்குளத்தில் காணி வழங்கல்" என்ற தலைப்பின் கீழ் வெளியான செய்தியைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சி நிர்வாகச் செயலாளருக்கு விபரங்கள், படிவங்கள் முதலியன கோரி அநேக அஞ்சல்கள், அஞ்சல் அட்டைகள் சென்றிருப்பதாயும் ஒவ்வொருவருக்கும் அவர் தனித்தனி விபரங்கள் அனுப்புவதற்கு அவகாசமில்லாதபடியால் கீழ்க்காணும் மேலதிக விபரங்களைத் தந்திருக்கிறார்:

**(1) வன்னி விளாங்குளம் —**

பாலிய மத்திய வகுப்பினருக்கு:

கொடுபட விருக்கும் காணியின் விசாலம்—1000 ஏக்கர் மனுக் கோருபவர்—மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம் பின்வருமாறு**

1. பெயரும் விலாசமும்:
2. வயது:—
3. விவாகமானவரா:—
4. விவாகமானவரானால் பிள்ளைகள் எத்தனை:— வயது என்ன:
5. மனைவி/கணவன் இருக்கிறாரா?—
6. (அ) 1961/62 மதிக்கப்பட்ட சொந்தவருமானம்:— (அல்லது முந்தின வருட வருமானம்)
   (ஆ) கணவன் மனைவி என்போருக்கு வருமானம் இருந்தால் 1961/62 வருமானம்:
7. சொந்தக் காணியின் விஸ்தீரணம், அது எங்கு உள்ளது என்பதையும் அதில் விளையும் வியாபாரப் பயிர்களையும் தெரிவிக்க:—
   (அ) விண்ணப்பக்காரருக்கு
   (ஆ) மனைவிக்கு/கணவனுக்கு
8. விண்ணப்பக்காரரின் பெற்றோருக்கு உரிய காணியின் விஸ்தீரணம். பயிர்கள் ஏதாவது இருந்தால் அதன் விபரம்:—
9. மனைவி/கணவன் பெற்றோரின் காணியின் விஸ்தீரணம்:—
10. திருத்துவதற்குரிய முதலின் தொகை:—
11. திருத்துவதற்கு விண்ணப்பக்காரரால் வருடா வருடம் செலவிடக் கூடிய தொகை:—
12. குறிப்பு: –

திகதி:— விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

**(2) வேறு காணிகள்:**

உள்ள இடங்கள்: மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா, மன்னார், அம்பாறை, யாழ்ப்பாண மாவட்டங்கள்.

மனுக்கள் கோருபவர்: மாவட்ட அரசாங்க அதிபர்.

முடிவு தேதிகள்: மட்டக்களப்பு, திருகோணமலை அம்பாறை— 28-9-62 (2 மணி பி. ப.)
மன்னார்— 8-10-62 (2 மணி பி. ப.)
யாழ்ப்பாணம்— 12-10-62 (2 மணி பி. ப.)
வவுனியா— 17-10-62 (2 மணி பி. ப.)

யார் மனுச் செய்யலாம்?— அவ்வவ் மாவட்டத்தில் சொந்தக் காணிகளையுடையவர்கள், முடிக்குரிய காணிகளை எடுத்துத் திருத்தி வைத்திருப்பவர்கள் அல்லது உள்ளூர் ஸ்தாபனங்கள்.

கோரும் காணியின் விசாலம்—விருப்பப்படி.

**மாதிரி விண்ணப்பப் பத்திரம்.**

1. விண்ணப்பக்காரரின் பெயர்:—
2. தொழில்:
3. விலாசம்:—
4. சொந்தக்காணி அல்லது முடிக்குரிய காணி இருக்குமிடமும் அதன் விசாலமும்:— (ஒரு இடத்தில் இல்லது பல இடங்களில் இருந்தால் ஒவ்வொன்றின் விபரமும் கொடுக்க வேண்டும்) அரசாங்கக் குத்தகைக் காணியாயின் எவ்வகையான குத்தகைக் காணி என்பதைத் தெரிவிக்கவும்.
5. எவ்வகையான திருத்தங்கள் 4-ம் பந்தியில் குறிப்பிட்ட காணியில் செய்திருக்கிறது:—
6. விண்ணப்பிக்கும் காணி (விஸ்தீரணமும் இடமும் கொடுக்கவும்):—
7. எவ்வகையான திருத்தங்களும் பயிர்களும் செய்யப் போகின்றீர்:—
8. (அ) இவ்வேலையைத் தொடங்குவதற்குப் பொருளாதாரம் உண்டா? அப்படி இல்லாவிடின் என்ன வேறு ஒழுங்குகள் செய்ய உத்தேசித்திருக்கிறீர்:—
   (ஆ) இவ்வேலையைத் தொடங்குவதற்கு எவ்வளவு முதல் வேண்டுமெனக் கருதுகிறீர்?:—
9. இதற்கு முதல் தேவைப் படாதென்றால் எப்படி இவ்வேலையைச் செய்யக் கருதுகிறீர்:—
10. குறிப்புகள்:

திகதி: விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

**(3) திருகோணமலை மாவட்டம்—**

கண்டி—திருகோணமலை—அநுராதபுரச் சந்திக் கருகாமையில கடை கட்டுவதற்கு குத்தகைக்கு கொடுக்கக் கூடிய காணித்துண்டுகளின் ஏல விற்பனவு.

6 காணித்துண்டுகள், ஒவ்வொன்றும் 6 பேர்ச்சஸ் விசாலம். முடிவு தேதி—10-10-62 (10 மணி மு. ப.)—முழு விபரங்களுக்கு 24-8-62-ந் திகதி 13,272 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் தமிழில் 521-ம் பக்கத்திலும் ஆங்கிலத்தில் 466-ம் பக்கத்திலும் பார்க்கவும்.

தமிழ்ப் பிரதேசங்களில் முடிக்குரிய காணிகள் பராதீனப் படுத்தல் பற்றிய விபரங்கள் அவ்வப்போது சுதந்திரனில் வெளியிட ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

## அன்பு மகள்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

னவை பிழையாகவே தோற்றும். பிழை மட்டுமல்ல, நம்ப முடியாத தன்மை நிறைந்தே காணப்படும். எனினும் எதிலும் கற்பனை மெருகும் உண்டு என்பதையும் மறக்கக் கூடாது— மகளே! நீ வளர்ந்து இவற்றையெல்லாம் படிப்பாய், சிந்திப்பாய்! அன்பு! உங்கள் யாபேரையும் பிரிந்து பத்து நாட்கள் கடந்து விட்டன. என்ன ஆச்சரியம்! 240 மணித்தியாலங்களல்லவா ஓடிவிட்டன. உன் மழலை மொழி கேட்கின்றது...... அ—ப்— பா என நீ கூப்பிடும் ஒலி கூட இதயத்தில் தட்டுகின்றது. மகளே! பாசப் பிரிவு கொடியது என்பதை அனுபவத்தில் உணர்கின்றேன். எங்கே சிரி! ம்!

உன் தந்தை,
புதுமைலோலன்.

(தொடரும்)

## இலங்கையில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பது பற்றி எல்லோருமே வருத்தப்படத்தான் செய்கிறார்கள். கடந்த ஐந்து வருடங்களில் இலங்கையில் நான்கு அவசரகால நிலைப் பிரகடனங்கள் செயற்பட்டிருக்கின்றன. ஆகவே, மூலதனம் இருப்பவரின் கனவுலகமாக இலங்கை காட்சியளிக்காததில் ஆச்சரியமே இல்லை.

அவசரகால நிலைமை, பத்திரிகைத் தணிக்கை என்ற போர்வையின் கீழ், உலகத்தினதும், இலங்கை மக்களினதும் கண்களை மறைக்கப் பார்க்கின்றது இலங்கை அரசாங்கம். இந்தச் சந்தர்ப்பங்களுக்கிடையில், திரு. கிறீன் அவர்கள், இலங்கையில் நடந்தவை பற்றிச் சிறந்த முறையில் அறியத் தரப்பட்டுள்ளவராகத் தெரிகிறதே!

எஸ். நாகேந்திரா

லண்டன்,
டபிள்யூ 2.

## சங்கப்பலகை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டைய கைகளிலும் கட்டாயம் இச்சிறுகதைத் தொகுப்பு இடம் பெறும் என்பதில் எமக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

அரசு வெளியீட்டைப் பற்றியும் அவசியம் ஒரு வார்த்தை கூறித்தான் ஆக வேண்டும். இது அவர்களுடைய கன்னிப் படைப்பு. ஆனால் நமக்கு அப்படித் தெரியவில்லை. இவ்வளவு சிறந்த முறையில் அட்டையை அமைத்தமைக்கு அவர்களை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. —சங்கர்.

## மக்கள் குரல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர்களின் போலித் தன்மையை உணர்ந்து மகிழ்ச்சியுடன் மக்களுக்காகவே போராடும் தமிழரசாரை வாழ்த்தி வரவேற்கிறார்கள் மலையக மக்கள்.

சமஷ்டிக் கட்சியின் கிளை அலுவலகங்கள் தோன்றப் போவதை அறிந்த ஆட்சியாளர் ஆட்டங்காணுகின்றனர். உடனடியாகவே பிரதமர் வேண்டுகோளும் விடுத்துவிட்டார், சமஷ்டிக் கட்சியினர் மலைநாட்டில் நுழைய வேண்டாமென்று. இந்த வேண்டுகோளைப் புறக்கணிக்க வேண்டியது தமிழ் பேசும் மக்களது கடமை.

மதத்தால் வேறுபட்டாலும் மொழியால், கலையால், கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட அத்தனை பேரும், அற்ப அபிலாசைகளையும், சிறு சலுகைகளையும் மறந்துவிட்டு, எமது உரிமைக்காக ஒன்றுபட்டு, அரசோச்சுவோருக்கு நமது எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

—[illegible]

கொழும்பு.

# பரிவு

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

துக் கொண்டனர். வேலுப்பிள்ளையைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை.

மார்க்கண்டுவின் கார் வந்து நின்றது. இரத்தினத்தின் மண்டையில் பலத்த காயம். இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. இரத்தினத்தின் நண்பரான அக்கிழவனும் காரில் தொத்திக் கொண்டார். நாகம்மா அழுது தீர்த்தாள். அண்ணன் என்று பார்ப்பதா? கணவனென்று பார்ப்பதா? கணவனைப் பொலீசார் பிடித்துக் கொண்டு போய்விடுவார்களோ என்ற பயம் அவளுடைய அழுகையை அதிகரித்தது.

கார் காங்கேசன் துறை ஆஸ்பத்திரியை அணுகிக் கொண்டிருந்தது. கிழவன் இரத்தினத்தை நோக்கி, "கோவிக்காதை இரத்தினம். நானொன்று சொல்லப்போகிறேன்" என்ற பீடிகையுடன் விஷயத்தை ஆரம்பித்தார். "ஆஸ்பத்திரியிலை, காயம் வந்த காரணங்கேட்டு. அடிபிடி என்றால் பொலிசுக்கு ரிப்போட் கொடுப்பினம். நீ அப்பிடிச் சொன்னாயெண்டால்... வேலுப்பிள்ளை ...... அவன் பிள்ளைகுட்டிக்காரன் ...... அவனுக்குத்தான் ஆபத்து. அவன் மறியலுக்குப் போனால், ஐஞ்சு பிள்ளையள், வைத்திலை இப்ப ஒண்டு ......நினைச்சுப்பார்..." என்றார். இரத்தினத்துடைய ஆத்திரம் அனுதாபமாக மாறியது. "துலாவிலிருந்து விழுந்ததால் கல் அடிபட்டு ஏற்பட்ட காயம்" என்று டாக்டரிடம் கூறினார். நம்பிவிட்டார்கள் அவர்கள். வார்ட்டில் அனுமதி கொடுக்கப்பட்டது.

பொலிசை எதிர்பார்த்திருந்த வேலுப்பிள்ளைக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. அது பயத்தை இன்னும் அதிகமாக்கியது. சொற்ப நேரத்திற்குத்தான்— கிழவனார் வேலுப்பிள்ளைக்கு விஷயத்தைச் சொன்னார். அவன் "மனுஷன்" என்றது வேலுப்பிள்ளையின் மனம். கண்ணீர் விடாத குறை ஒன்றுதான். மறுநாள் ஆஸ்பத்திரிக்கு உணவு கொண்டு போவதற்கு வேலுப்பிள்ளையே முன்வந்தார். பிரமாதமாக நாகம்மா சமைத்துக் கொடுத்தாள். இரத்தினத்திற்காக உணவு கொண்டு ஆஸ்பத்திரியை நோக்கி சைக்கிளில் புறப்பட்டார் வேலுப்பிள்ளை.

(யாவும் கற்பனை)

## 'தாய் சொல்லை...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டவளாகவும் மாறியிருப்பாள். ஆனால் அத்தாய் அப்படிச் செய்யாமல் உடனடியாக மோகனைக் கைது செய்யும்படி கூறுகிறாள். உண்மையிலேயே இத்தாயைப் போற்ற வேண்டும், புகழ வேண்டும். அவள் இரு பிள்ளைகளுக்கும் சமநீதியே செலுத்தினாள்; அவள் அநீதியை எதிர்த்து நீதியை நிலைநாட்டினாள்.

திருமதி நீக்கிலாப்பிள்ளை
இளவாலை.

**( 4 )**

தனது இஷ்டப்படி அலையத் துணிந்த ஒரு துஷ்டக் குஞ்சைக் கூடப், பறந்து கவர முனைந்தால் அதனைக் காக்கத் தவிக்கிறது தாய்க்கோழி. இத்தாய்மை உணர்வை உலகவுயிர்கள் அனைத்திடையும் காண்கிறோம். ஒருவனது உருவ விவகாரங்கள், அல்லது குண பேதங்கள் காதலைக் கூடக் கட்டுக் கதையாக்கி விடலாம். ஆனால் தாய்ப் பாசத்தை வற்றவைக்கும் வன்மை அதற்கில்லை. இப்பாசத்தின் வலிமையை அனுபவத்தில் உணர்ந்த நாங்கள், இதே பாசந்தான் எமது பலவீனமுமாகி, எம் செல்வங்களின் சீரழிவிற்கும் காரணமாகிறது என்பதை நன்கறிவோம். ஆனால் 'தாய் சொல்லைத் தட்டாதே" திரைப் படத்தில் ஒரு தாய், அறத்தை நிலை நிறுத்துவதற்காக, தவறி நடந்த தன் உதிரத்தின் முதற்கனிக்குத் தண்டனை பெற்றுத் தரும்படி இன்முகத்தோடு இளங்கனியை ஏவுகின்றாள். அவன் சென்ற பின்னரே, பாச உணர்ச்சிகளுக்குப் பலியாகிக் கதறுகின்றாள். தாய்மை உணர்ச்சியைக்கூட வென்ற அவளது கடமையுணர்ச்சி, எம்போன்ற தாய்மார்களின் மெய்சிலிர்க்கச் செய்தது.

சந்தானதேவி தம்பிநாயகம்
கொக்குவில்.

## 'சிங்காரக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தனி இன்பம். அவள் கூறுகிறாள்:

உடுப்பை உடுத்திட்டாலும்
உள்ள சட்டை
போட்டிட்டாலும்
மதிப்பாய் நடந்திட்டாலும்
மடியில் அரச்சல்லியில்லை.

அவனும் அவளைச் சட்டென்று கிண்டல் செய்கிறான்:

உடுப்புடுத்த இடுப்புமில்லை
உடமை போடக்
கழுத்து மில்லை
காவி நீட்டப் பல்லுமில்லை
கான கிவி யாருக்கு.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுதந்திர வாழ்வு

(முதல்வனுர்-கம்பளே)

தம்பி, உலகில் வாழும்
உயிரி னத்தைப் பாராய்!
தும்பி நாதம் செய்தே
தூரப் போதல் பாராய்!

★

நாடிய மலரில் வண்டு
தேனைக் குடித்தல் பாராய்!
கூடிக் குயில்கள் கீதம்
பாடிக் களித்தல் பாராய்!

★

பச்சைக் கிளியும் வானில்
பறந்து திரிந்தே கானில்
இச்சைக் கினிய கனியை
உண்ணும் தன்மை பாராய்!

★

எண்ணப் படியே வாழ
ஏற்ற சுதந்திர வாழ்வை
மண்ணில் விரும்பு வாயே;
அடிமை அகற்றிடு வாயே!

## கவிஞனும் நாமும்

(எஸ். எஸ். சுந்தர்—
கொம்மாதுறை)

கவிஞர்கள் கற்பனை உலகில் வசிப்பவர்கள். அவர்கள் காணும் பொருட்களை—கலை நுணுக்கத்தை — கற்பனை வளத்தை நாம் காணமுடியாது.

நாமும்தான் நாள்தவருது கோழி கூவுவதையும்; சூரியன் உதிப்பதையும் காண்கிருேம். ஆனல் அக்காட்சியைக் கவிஞனும் காண்கின்ருன். நாம்அதை அசட்டையாக விட்டுவிடுகிருேம். ஆனல் கவிஞன் அதைக் காவியத்திலும் புகுத்திவிடுகிருன்.

கொடிய இருளில் தமயந்தியை விட்டுப்பிரிகிருன் நளன். துயில் எழுந்த தமயந்தி, கணவனைக்காணுது, கானகத்தில் கலைப்பால் விழுந்து விடுகிருள். இந்த இடத்தில் கவிஞன் தன் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடுகிருன்.

சோர்வினுல் துவண்டு விழுந்த தமயந்தியைத் துயில் எழுப்புவது யார்? இக்கேள்வி தானுகவே எழுந்ததும் "சூரியன்" என்று கவிஞன் வெறுமனே சொல்லிவிடவில்லை. அல்லது பொழுது புலர்ந்தது அதனுல் துயில் எழுந்தாள் என்று கவி கூறிவிடவில்லை. அதற்குப் பதிலாக அவள் படும் துயரைக்கண்டு பகுத்தறிவற்ற கோழிகளே, 'சூரியனேவிரைவில் வந்து அவள் துயரைத் திர்ப்பாயாக!' என்று சிறகால் அழைப்பதாக அறிவுறுத்துகிருர்.இதோ பாடல்:-

"தையல் துயர்க்குத்தரியாது
அஞ்சிறகாம்
கையான் வயிறலைத்துக்
காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வா
வென்(று) அழைப்பதுபோல்
கூவினவே கோழிக்குலம்"

இதன் மூலம் அறிவற்ற மனிதனையும தமயந்தியின் துயரை அறியும்படி செய்துவிடுகிருர் கவிஞர்.

## காட்சித் தொலை பேசி

மாஸ்கோவில் தொழில் நுட்ப பொருட்காட்சி மன்றத்தில் ஒரு புதிய வகைத் தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது. நாம் தொலைபேசியில் யாருடன் பேசுகிருேமோ அவருடைய முகத்தை நேரே அதன் திரையிலே பார்க்கிருேம்.

இந்தக் காட்சித் தொலைபேசிக்கான இரகசிய அமைப்பை 1930-ம் ஆண்டுகளிலேயே சோவியத் பொறியியல் வல்லுநர் ஐ. ஜகரோவ் தயாரித்துக் கொடுத்தார். மாஸ்கோவுக்கும் லெனின் கிராடுக்கும் இடையே காட்சித் தொலைபேசி இணைப்பை நிறுவுவதென்று திட்டமிடப்பட்டிருந்தது. ஆனல் இரு நகர்களுக்குமிடையே 'ரிலே' கம்பிப் பாதைகள் அண்மையில் தான் அமைக்கப்பட்டதால், காட்சித் தொலைபேசி இணைப்பு இப்பொழுதுதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வண்ணக் காட்சித் தொலை பேசிக்கான ஆய்வுகள் இப்பொழுது நடைபெற்று வருகின்றன.

இதுதான் தினம் தோறும் காலையில் நாம்காணும் காட்சிக்கும், அவர்கள் காணும் காட்சிக்கும் உள்ள வித்தியாசம். கவிஞர்கள் அகக் கண்ணுல் காண்கிருர்கள், நாம் புறக்கண்ணுல் காணுகின்ருேம். நாம் கண்டுவிட்டுக் கணநேரத்தில் மறந்துவிடுகிருேம், கவிஞர்கள் கற்பனைக்கு விருந்தளித்துக் காப்பியங்களில் புகுத்திவிடுகிருர்கள்.

இதுவே கவிஞனுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம்.

## எங்கள் கோரிக்கைகள்

(எஸ். அப்துல் கபூர், கொழும்பு)

உங்களைக் கண்டதும் நாங்கள் ஓடி ஒளியவேண்டி இருக்கிறது. அதற்குக் காரணம் எங்களைக் கண்டதும் கையில் அகப்பட்டதை எடுத்து அடிக்கவிரட்டிவருகிறீர்கள்! உங்களுக்கு நாங்கள் என்ன தொந்தரவு கொடுத்தோம்? அப்படி நாங்கள் தொந்தரவும், தொல்லையும் கொடுத்தாலும் அதற்குக் காரணம் நீங்கள்தான் என்பதை அறியத் தவறி விட்டீர்கள்.

பசியால் நாங்கள் துடித்துக்கொண்டு பொந்தை விட்டு வெளியே வந்தால், உங்கள் பிள்ளைக்கு உணவு கொடுப்பதுபோல் எங்களுக்கும் கொடுத்தால் உங்கள் உணவு குறைந்தா போய் விடும்?

உங்களுக்கெல்லாம் ரொம்ப மோசமான எண்ணம். அதனுல்தானே எங்கள் எதிரியான பூனையை வீட்டில் பிள்ளைபோல் எடுத்து வளர்த்து எங்கள் இனத்தை அடியோடு ஒழித்துக்கட்ட முடிவு செய்து விட்டீர்கள்? இது போதாதென்று பொறியை வைத்து எங்கள் உயிரைப்போக்கடிக்கச்சதி செய்கிறீர்கள்!

நீங்கள் விரும்பி பூனைகளைப் பிள்ளைபோல் வளர்ப்பதை நாங்கள் வரவேற்கிருேம். மாலை ஆறுமணியில் இருந்து காலை ஐந்து மணி வரை பூனைகளை வளர்க்கும் ஒவ்வொரு வரும் அதை ஒரு கூட்டில் போட்டு அடைத்து வைக்கவேண்டும். இரவுஆன பிறகுதான் நாங்கள் உணவு தேடிவருவோம் என்பது உங்களுக்குத் தெரியாதா?

சுவையான உணவைப் பொறியில்வைத்து எங்களைக் கொல்ல முயற்சிக்காதீர்கள்! எங்கள் இனத்தவர்களிற் சிலர் பசி பொறுக்க முடியாமல் பொறியில் இருக்கும் உணவுக்கு ஆசைப்பட்டு அகப்பட்டு கொள்கிருர்கள். ஆகவே உலகத்தில் உள்ள எல்லாக் கடைகளிலும் எங்களைக் கொல்லும் பொறிகளை விற்பனை செய்யக் கூடாது. பொறிகளை வைத்து கள்ளத்தனமாக விற்பனை செய்கிறவர்களுக்கு ஒரு ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுக்கவேண்டும். பொறி உற்பத்தி செய்யும் எல்லாத் தொழிற்சாலைகளும் இனி உற்பத்தி செய்யக் கூடாது. அப்படி உற்பத்தி செய்தால் அந்தத் தொழிற்சாலைகளை அரசாங்கம் பறிமுதல் செய்யவேண்டும்.

நாங்கள் சிறுசுகள் தானே என்று அப்படி அலட்சியமாக எண்ணி விடாதீர்கள்! நீங்கள் வசிக்கும் பெரும் மாடி வீடுகளைக்கூட எங்களால் வீழ்த்தமுடியும். பூமிக்கடியில் பெரிதாகத் தோண்டி பெரும் கட்டிடங்களைத் தரைமட்டமாக்கவும் முடியும். இனிமேல் நாங்கள் உரிமையுடன் ஓடிவிளையாட உங்கள் வீடுகளில் எங்களைச் சுதந்திரமாக உலாவ விட வேண்டும்.

உணவுக்கு நாங்கள் அலையும்படியான நிலைமையை நீங்கள் ஏற்படுத்தி விடக் கூடாது. எங்களுக்கு என்று ஒரு தட்டில் உணவைப் போட்டு வைத்தால் நாங்கள் கூடி உண்டு விட்டு வாயார வாழ்த்தவும் செய்வோம். இப்படி இல்லாமல் தொந்தரவும், தொல்லையும் கொடுத்தீர்கள் என்ருல் ஐக்கிய நாடுகள் சபையில் எங்கள் கோரிக்கைகளை எடுத்துக் கூறிச் சுதந்திரம் கேட்காமல் விடமாட்டோம்.

## "கடல் அரக்கன்"

"கடல் அரக்கன்" என வழங்கப்படும் மாபெரும் ஜெர்மன் சப்பலான 'பிரெமன்' போலவே ஒரு சிறு மாதிரிக் கப்பல் தயாரிக்கப்பட்டு வெள்ளோட்டம் விடப்பட்டிருக்கிறது. 12 தொன் எடை உள்ள இந்தக் குட்டி 'பிரெமன்' கப்பலை உருவாக்க இரு ஜெர்மன் கப்பல் கட்டும் நிபுணர்கள் 15 வருடங்களில் 76,000மணி நேரத்தை செலவிட்டிருக்கின்றனர். நியூயார்க்கிலிருந்து திரும்பி வந்த 'அக்காள்' பிரெமனை இந்த 'தங்கை' பிரெமன் வரவேற்றது.

உலகிலேயே மிகப் பெரிய கப்பலான 'பிரெமன்' மேற்கு ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டுள்ளது. சகல விதத்திலும் அதே போலுள்ள குட்டி ராட்சஸக் கப்பல் ஒன்றை மேற்கு ஜெர்மன் கப்பல் நிபுணர்கள் தயாரித்துள்ளனர். இக் கப்பலின் வெள்ள ஒட்ட வைபவம் சமீபத்தில் நடைபெற்றது. 'நார்த் ஜெர்மன் லாயிட்' என்ற பிரபல கப்பல் கம்பெனியைச் சேர்ந்த இம்மாதிரிக் கப்பல் 12 தொன் எடையுள்ளதாகும்.



புதிதாகச் சுதந்திரமடைந்த 'ரினிடாட் டோபாகோ' நாட்டின் கவர்னர் ஜெனரல் சேர். சொலமன் ஹொச்சொய்.

## வளர்மதி புதிய மருமக்கள்

3522 ஏ. டபிள்யூ. சேகப்துல்லா, பெரிய கிண்ணியா.
3523 எஸ். முருகையா, நாவலப்பிட்டியா.
3524 கு. யோகேஸ்வரமூர்த்தி, மட்டக்களப்பு.
3525 சி. யோகதாஸ், காத்தான்குடி.
3526 சொ. கிருஷ்ணமூர்த்தி, மாத்தளை.
3527 எம். ராசிக் ஹமீட், நாவலப்பிட்டி.
3528 ச. மேரி ஜோசப், யாழ்ப்பாணம்.
3529 த. ஜெபநாயகம், ஏருவூர்.
3530 சி. பத்மநாதன், சாவகச்சேரி.
3531 நதினி இராசமாணிக்கம், கஞுவாஞ்சிக்குடி.
3532 செல்வராணி மயில்வாகனம், மல்லாகம்.
3533 ஆர். கணபதி, கேகாலை.
3534 எம். பிச்சைமுத்து, மூதூர் 8.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 1

பெயர் ______

பாடசாலை ______

விலாசம் ______

______ ______

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் — கையொப்பம்

**அன்புள்ள மருமக்களே!**

வணக்கம். கட்டுரை, கவிதை, கதை எழுதுபவர்களுக்கு ஒரு வார்த்தை.

'பூல்ஸ்காப்' தாளில் இரண்டுக்கு மேற்பட்ட அளவுக்கு எழுதவேண்டாம். தாளின் ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும்.

அடுத்த வாரம், புதிய பகுதி ஒன்று இப்பந்திகளில் ஆரம்பிப்பது பற்றிய விபரம் தெரிவிப்பேன்.

வணக்கம்.

உங்கள் அன்பின்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## சுழிபுரம் கிராம சபை இலக்கியக் கலை விழா

"சமுதாயம் முன்னேறியது என்று குறிப்பிட்டால், அது அந்தக் குறிப்பிட்ட சமுதாயத்தின் இலக்கிய வளம் சிறப்புற்றுள்ளது என்பது கருத்தாகும். இலக்கியம் வளர வேண்டுமாயின் அதைப் பாமர மக்களும் விரும்பும் வகையில், அவர்கள் இலகுவில் பெறக் கூடிய கணிசமான தூரத்தில் அதாவது பணத்திலும், எளிமையிலும் இலக்கியம் அமைய வேண்டும். மேலும் இலக்கிய சம்பந்தமான விழாக்கள் எடுத்தல், இலக்கியப் போட்டிகள் வைத்தல் மூலமும் இதைச் சாதிக்க முடியுமென்று நான் பூரணமாக நம்புகிறேன். அப்படிக் கொண்ட நம்பிக்கையினுற்றுன், இலங்கை சாகித்திய மண்டலத்தாரின் அனுசரணையுடன் இவ் விழாவை இன்றையதினம் கோலாகலமாகக் கொண்டாடுகின்றேம்."

இவ்வாறு சுழிபுரம் கிராம சபையால் 8-9-62-ந் திகதி கிராம சபையின் திறந்த வெளி அரங்கில் கொண்டாடப்பட்ட இலக்கிய விழாவில் சுழிபுரம் கி. ச. அக்கிராசனர் திரு. சு. கந்தசுவாமி அவர்கள் பேசினுர்கள். மேலும் இவ்வாண்டு சிறந்த இலக்கிய சேவைக்காகச் சாகித்திய மண்டலத்தாரிடமிருந்து ரூபா 1,000 தனித்தனி பெற்ற கலாநிதி சு. வித்தியானந்தன், நவாலியூர் திரு. சோ. நடராசா அவர்களையும் பாராட்டிப் பேசினுர்கள்.

வடபகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சி. சி. மாணிக்கவாசகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசிய பொழுது, யாழ்ப்பாணப் பகுதியினர் இந்தச் சாகித்திய நாளைக் கொண்டாடப் பின்னிற்பது கண்டு மனம் வருந்துவதாகவும், அதே வேளையில் இவ் விழாவைக் கொண்டாட முன் வந்த இரண்டே இரண்டு கிராம சபைகளைத் தாம் பாராட்டுவதாகவும் தெரிவித்தார்.

சுழிபுரம் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் திரு. தா. ஆறுமுகம் அவர்கள் 'இலக்கியமும் சமூகமும்' என்னும் பொருள் பற்றிப் பேசினுர்கள். பண்டைக்கால மேற்கோள்கள் காட்டிச் சமூகமும் இலக்கியமும் எவ்வகையில் ஒன்றுக்கொன்று ஆதாரமாகப் பின்னிப்பிணைந்து வந்துள்ளதென்றும், இடையிடையே தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட மாறுதல்களையும் விளக்கிக் கூறினுர்கள்.

சங்கீதம், நடனம், நாடகம், நாட்டுக் கூத்து, நாட்டுப் பாடல், கட்டுரை, பேச்சு ஆகிய கதம்ப நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளில் நடைபெற்ற போட்டிகளில் பரிசு பெற்றவர்களுக்கு திரு. சி. சி. மாணிக்கவாசகர் அவர்கள் பரிசில்கள் வழங்கினுர்கள்.

—

## பாரதி விழா

11-9-62 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12-30 மணி முதல் 3 மணி வரை பாரதி விழா பேராதனை அரசினர் தமிழ் உயர் நிலைப் பள்ளி மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

இப்பள்ளி மாணவ மன்றத்தினரால் கொண்டாடப்பட்ட விழாவுக்குத் தலைமை தாங்கிய தலைமையாசிரியர் திரு. வே. கதிரவேலு அவர்கள் பாரதியின் திரு உருவப்படத்தைத் திரை நீக்கஞ் செய்து அரியதொரு சொற்பொழிவாற்றினுர். அவரைத் தொடர்ந்து மாணவர்களும் ஆசிரியர்களும் சொற்பொழிவுகளை நிகழ்த்தியதோடு பாரதி கவிதைகளையும் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர்.

பள்ளி வெளியீடான 'இளந் தென்றல்' ஏடு பாரதி மணி மலராக விழாவிற் சமர்ப்பிக்கப்பட்டது.

—

## அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்கம்

அருந்ததிய வாலிபர் முன்னேற்றச் சங்க மத்திய காரியாலயத்தில், அ. வா. மு. சங்கம் கொம்பனித்தெருவில் ஓர் கிளை அமைக்கும் விஷயமாகச் சென்ற 11-9-62 செவ்வாய்க்கிழமையன்று மத்திய சங்கத் தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அன்றைய ஆலோசனைக் கூட்டத்தில் கொம்பனித் தெருவில் கிளை அமைக்கும் முயற்சியில் துரிதமாக ஈடுபட்டிருக்கும் திரு. வி. எஸ். செல்லையா அவர்களும், கே. எஸ். கணபதி அவர்களும், சமுகமளித்திருந்தனர்.

கிளைச் சங்கம் செயல்பட வேண்டிய விஷயமாகவும்—அமைப்பு முறை—நிர்வாகம் ஆகியவை பற்றியும் திருவாளர்கள்: எஸ்: விரையா, பி. கருணுகரன், வி. எஸ். பெருமாள், என். முனியாண்டி, எம். மணிமுத்து, க. மஞேக்ரன் ஆகியோர் விளக்கிப் பேசினர்.

—

## எஸ். ஜே. வி. யை கௌரவிக்க கிராமசபை தீர்மானம்

தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே வி. நெல்வநாயகம் அவர்களைப் பாராட்டு முகமாக உப்புவெளி கிராம சபைக்குட்பட்ட தட்டக்கை என்னுமிடத்தில் அரசாங்க சில்லறை சிப்பந்திகளுக்கென்று உருவாக்கப்பட்ட குடியேற்றப்பகுதிக்கு "செல்வநாயகபுரம்" என்று பெயர் சூட்டுவதென்று, உப்புவெளி கிராம சபை அண்மையில் நடைபெற்ற தனது கூட்டமொன்றில் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

திரு. என். கைலாயநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்தை திரு. கைலாயநாதன் முன் மொழிந்தார். உப தலைவர் திரு. எஸ். ஆண்டி வழி மொழிந்தார்.

—

## அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் வேண்டுகோள்

"பிறப்பிலே உயர்வு தாழ்வுப் பேதமை நீங்க, மக்கள் வாழ்விலே ஆண்டான் அடிமை வேற்றுமை தகர, இயல்பினுல் படித்தவன் படியாதவன் பாகுபாடு அகன்று சுரண்டுபவன் சுரண்டப்படுபவன் என்ற கொடுமை மடிந்து மனித அந்தஸ்தில் சமத்துவமாக வாழ்வதற்கு உத்தரவாதமளிக்கும் சாத்வீக சமுதாயப் புரட்சிக்கு உதவுவதே அருந்ததியர் சங்கத்தின் இலட்சியமாகும்.

சாதித்துவேஷ ஒழிப்புக்கு மனமுவந்து தம்மை அர்ப்பணித்திருப்போருக்கும் கிளைச் சங்கங்களுக்கும், பொது ஸ்தாபனங்கட்கும் பத்திரிகைகட்கும் தனது பாராட்டுதலைத் தெரிவிக்கின்றது.

நீதி நேர்மை நாணயம் ஒழுங்கு ஆகியவற்றின் தரம் எவ்வகையிலும் குறையாமல் சமூகத்துக்கும், சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் சாத்தியமான அளவு நற்பணியாற்ற நல்லாதரவுமிக்க ஒத்துழைப்பு தரும்படியாக எல்லோரையும் அருந்ததியர் சங்கம் பணிவாகவேண்டிக் கொள்ளுகின்றது."

இவ்வாறு அகில இலங்கை அருந்ததியர் சங்கம் பொது மக்களுக்கும், பொது ஸ்தாபனங்கட்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# 'தரிசு நிலங்களில் தயங்காது குடியேறுங்கள்'

—0—

## சீனக்குடாவில் மூதூர் முதல் எம். பி.

"தமிழ்பேசும் மக்கள் இப்பகுதியிலுள்ள தரிசு நிலங்களில் எதுவித — தயக்கமுமின்றிக் குடியேறவேண்டும், ஏனையசமூகத்தினர் இப்பகுதிகளிலுள்ள முடிக்குரிய நிலங்களில் பலாத்காரமாகக் காடுவெட்டிக் குடியேறுகையில், தமிழ்பேசும் மக்களாகியநீங்கள் தயக்கத்துடனிருந்தால் எமது நிலங்கள் பறிபோய் விடும். எனவே, இப்பகுதிகளிலுள்ள முடிக்குரிய தரிசுநிலங்களில் கட்டாயமாக நீங்கள் குடியேற வேண்டும், அதற்காகிய உதவிகளைச் செய்து தர நான் எப்பொழுதும் ஆயத்தமாக இருக்கிறேன்."

சீனக்குடாவிலுள்ள "ஆலிம் அப்பா சுபுறடி" வருடாந்த மௌலூது விழாவில் தலைமைதாங்கிப் பேசிய மூதூர் — முதல் எம். பி. ஜனுப் முகம்மதலி மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:- இக்கபுறுஸ்தானத்தில் அடங்கப்பட்டிருக்கும் ஆலிம் அப்பா அவர்களின் வாழ்க்கை வரலாறுகளை விரிவாகவும்— தொடர்பாகவும் "சுதந்திரன்" பத்திரிகையில் வெளியிட அதன் ஆசிரியர் குழு ஒப்புக்கொண்டிருக்கிறத. இந்த நல்லசெய்தியை நீங்கள் "சுதந்திரன்" பத்திரிகையில் காணலாம்." என்றுர்.

வருடாவருடம் மிகவும் சிறப்பாக நடைபெறும் இவ் வைபவத்தை சீனக்குடா— பிரிட்டிஷ் கடற்படைப் பொலிஸார் நடத்திவருகின்றனர். இப்பொலிஸ் படையின் பிரதம அதிகாரி திரு. ட்ருஹ்மன் அவர்களின் கண்காணிப்பில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

ஜனுப் முகம்மதலி எம். பி. இம் மௌலூது சபையின் போஷகர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'இழந்த உரிமைகளை மீட்க தீவிரமாக உழைப்போம்'

—oooo—

## தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. செல்லையாவின் உறுதி

"ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியில் பிரஜாவுரிமையை இழந்தான் தோட்டத் தொழிலாளி. மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் மொழி உரிமையை இழந்தான். சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் 'கோட்டா' முறை நடவடிக்கையில் தொழிலுரிமையைப் பறிப்பதற்கு முயற்சி செய்து வருகிறது. இப்படி ஆட்சி பீடத்திற்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும் குறிப்பாக மலைநாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களுக்கு அநீதிகள் அடுக்கடுக்காக இழைத்துக் கொண்டே வருகிறது. மலைநாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் பிரதிநிதித்துவம் செய்து வரும் தொழிற் சங்கத் தலைவர்களில் சிலர் அரசாங்கத்திற்கு முட்டுக் கொடுக்கும் தூணுக விருந்து வருகின்றனர். சிலர் தொழிலாளர்களுடைய அன்ருடப் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதில் காலத்தைக் கடத்தி வருகின்றனர். சிலர் தங்களுடைய பதவிகளுக்காக மலைநாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இந்த இழிநிலை நீடித்தால் இந்த நாட்டை ஏற்றம் பெறச்செய்த மலைநாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களுடைய எதிர்காலம் இருள்சூழ்ந்ததாக மாறிவிடும். இந்த இழிநிலையிலிருந்து மலைநாட்டுத் திராவிடப் பெருங்குடி மக்களை மீட்கவும், இழந்த அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கான ஆக்க வேலைகளில் ஈடுபடவும் நமது தொழிற் சங்கம் தீவிரமான முறையில் செயலாற்றும்."

இவ்வாறு அகில இலங்கை ஐக்கியத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் திரு. எஸ். செல்லையா தனகுமரத் தோட்டத்தைச் சேர்ந்த மாதலவத்தை டிவிஷனில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினுர்.

கூட்டத்தில் பங்குபற்றிப் பேசிய மாவட்டப் பிரதிநிதி திரு. என். ஆர். பழனியாண்டி கூறியதாவது:- "இலங்கைசமசமாஜக் கட்சியிலிருந்து நாங்கள் விலகியவுடன், மலைநாட்டு மக்களின் மத்தியில் இயங்கும் அநேக தொழிற் சங்கத் தலைவர்கள் அவர்களுடைய தொழிற் சங்கங்களில் சேர்ந்து கொள்ளும்படி எங்களை வேண்டிக் கொண்டனர். அவர்களுடைய வேண்டுகோள்களையும், கொள்கைகளையும், கோட்பாடுகளையும், கடந்த கால வரலாறுகளையும் ஆராய்ந்து பார்த்து, அவர்களிடம் மலைநாட்டில் வாழ்கின்ற பத்து லட்சம் திராவிடப் பெருங்குடி மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு திட்டவட்டமான கொள்கையும் கோட்பாடும் இல்லாத காரணத்தால் உதயமாகிய தொழிற்சங்கம் தான் நமது சங்கம்.

மலைநாட்டுத்திராவிடப் பெருங்குடி மக்களுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகும் பெரிய பொறுப்பு நம்மிடம் உள்ளது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும் அன்ருடப் பிரச்சினைகளுக்கு மட்டும் கவனம் செலுத்தாமல், அடிப்படையான அரசியலுரிமையைப் பெறுவதற்குத் தயாராக வேண்டியகாலம் வந்து விட்டது".

ல. தோ. தொ. உபதலைவர் திரு. கே. கிட்னசாமியும் இங்குருகம தோட்டத் தலைவர் திரு. எஸ். ராமையாவும் பேசினர்.

தோட்டக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது.

# இலங்கைத்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

"இப்பொழுதோ, உலக நடப்பின்படி இலங்கையும் சுதந்திரமடைந்து விட்டது. ஆனுல், நாங்கள் இப்போது சுதந்திரமாக இல்லை"

யாழ்ப்பாணத்திலுள்ள படைத் தலைவரும், அங்கு மிலிட்டரி கவர்னராகக் கடமையாற்றுபவருமான லெப்டினண்ட்—கேர்னல் உடுகமவை நான் சந்திக்கச் சென்ற பொழுது, அவர் என்னை மரியாதையுடன் தான் வரவேற்ருர்.

உருண்டை முகத்தில் கண்ணுடி அணிந்திருந்த, சிங்கள பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தச் சிங்களப் படைத் தலைவர், முதலில் தனது படை வீரரின் காடைத்தனத்தைக் குறைத்துப்பேச முயன்ற போதிலும், கடைசியில், தமது பட்டாளத்திலுள்ள 'ஒரு சில காடையர்'களை கொழும்புக்குத் தாம் அனுப்பவேண்டியிருந்ததாக ஒப்புக் கொண்டார்.

இவருடைய ஆட்கள் தான், சிங்களப் பொலிஸாருடன் சேர்ந்து, கச்சேரி முன் காந்தியவாதிகள் நடாத்திய சத்தியாக்கிரகத்தின்போது, அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட இரவு, அச் சத்தியாக்கிரகிகளைக் கண்கடை தெரியாமல் தாக்கினர்.

இந்தத் தாக்குதலின் பயனுக, 53 பேர், பெண்களும் ஒரு எம். பி. யும் உட்பட, ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறவேண்டியிருந்தது. தமிழ்மக்கள் தமது மொழிக்குப் பிரதேச உரிமை அளிக்கும்படி வேண்டியிருந்தனர்.

இந்தத் தாக்குதலினுல் காயப்பட்ட எம். பி., தமிழர் செயற் குழுவின் அங்கத்தவராக இருந்தபோதும், கைது செய்யப்படாமல் சுதந்திரமாகவே திரிந்தது ஆச்சரியமாகத்தானிருந்தது. ஆனுல், அவர் அப்படித் திரிந்தது, அவர் சமஷ்டிக் கட்சியின் அங்கத்தவரல்லாத படியினுலேயே என்று தான் கருத வேண்டும். இக்கட்சியின் 15 பாராளுமன்ற உறுப்பினரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பிடப்பட்ட எம். பி. திரு. எம். சிவசிதம்பரமாவார். உயர்ந்த, அழகான இந்த பாரிஸ்டர், கச்சிதமாக ஆங்கிலம் பேசுவார்; இருப்பது ஒரு குடிசையில்;

அவர் கூறினுர்: அடிப்படை மனித உரிமைகளுக்காகப் போராடும் தேசிய சிறுபான்மை இனமொன்றின் நிலைதான் எங்கள் நிலையாகும். இந்த அரசாங்கம், தன்னை சோஷலிச அரசாங்கம் என்று கூறுவதுடன், கொம்யூனிஸ்ட்டுகளாலும் ஆதரிக்கப்படுகின்றது. அது எங்களை இராணுவ பலம் கொண்டு ஆட்சி புரிகின்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சென்ட்ரல் 2வது வாரம்
(மருதானை)
தினசரி 2, 6, 9-30
ஞாயிறு காலை 10 மணிக்கு
லவினியா
(நுகேகொட)
தினசரி 6-30, 9-30க்கு
மற்றும் 4 திரைகளில்!



டி. கே. பாலச்சந்திரன்
(இரு வேடங்களில்)

★ குமாரி
★ சாயிராம்
★ வி. கே. ராமசாமி,
★ களப்பார்ட் நடராஜன்
★ 'திலகம்' ராஜகுமாரி
★ வி. கே. சரஸ்வதி
மற்றும் பலர்
நடித்தது!



யார் மணமகன்?

---

விரைவில்
சிலோன் எண்டடெயின்மண்ட்ஸ்
திரைகளுக்கு வருகிறது!
சென்னையில்
100 DAY நாட்களுக்கு மேல் ஓடிய படம்!!

கல்யாண்குமார்
தேவிகா
முத்து ராமன்
பேபி பத்மினி
நடித்தது
இசை:
விஸ்வநாதன்
ராமமூர்த்தி
பாடல்கள்:
கவிஞர் கண்ணதாசன்

ஸ்ரீதரின்
நெஞ்சில் ஓர் ஆலயம்

---

6வது வாரம் வெற்றி இன்றே பாருங்கள் 6வது வாரம் வெற்றி
தமிழ் நாட்டில்
100 வது நாள் வெற்றி விழா கொண்டாடிய
தேவர் பிலிம்ஸ்



தாய்சொல்லைத் தட்டாதே



நடிகர்கள்: ★ எம். ஜி. ராமச்சந்திரன் ★ பி. சரோஜாதேவி ★ எம். ஆர். ராதா ★ எஸ். ஏ. அசோகன் ★ பி. கண்ணாம்பா
தினசரி 2 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்

கிங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்] — ராஜ் [நீர்கொழும்பு] — விஜயா [அம்பாறை]
மற்றும் 7 திரைகளில்!

---

இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது!




செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
நெல்சன்
(திருகோணமலை)
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
இம்பீரியல்
(மட்டக்களப்பு)
ஆகிய திரைகளில்



மிகப் பயங்கரமான வனக் காட்சிகள் நிறைந்த,
"கொங்கு நாட்டுத் தங்கம்" என்னும் படத்தை விட
பிரமாண்டமான
சோலைமலை ராணி

மகத்தான தீபாவளி வெளியீடு!
செல்லமஹால் மற்றும் சிலோன் தியேட்டர்ஸ்
பி. பானுமதி—ஏ. நாகேஸ்வரராவ்—சௌகார் ஜானகி
முதலியோர் நடித்த



கானல் நீர்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க மாவத்த, 194ஏ, இலக்கத்தில் 1962-ம் வருடம் செப்டெம்பர் மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org